

சென்னைஸர்வகலாசாலை.

(சென்னை கல்விப்பொருட்காட்சி நடந்தசாலை.)

ஸ்ரீ வாணீ
விலாஸினீ

வா. 5. பிலவங்க௵ தை௴. ந. 28.

ஸ்ரீ ராமானுஜ சரிதம்.

இவ்வாறு உலகமெங்கும் 'ராமானுஜ மதம்' என்று எல்லோரும் கொண்டாடும்படி ஸ்ரீவைஷ்ணவ மதத்தை நிலை நிறுத்திய ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகளின் திருவடிகளில் ஆச்ரயித்தவர்கள் பல்லாயிரம்பெயர்களாகையால் அவர்களுக்குள் ஒருவித வியவஸ்தை ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமென்று ஸ்வாமிகள் அபிப்பிராயப்பட்டார்கள். பரம்பரையாக ஸ்ரீவைஷ்ணவமதத்தைத் தழுவியிருந்தவர்களும் ஞானம் அனுஷ்டானங்கள் வழுவிலாதவர்களுமாக எழுபத்திநாலு பெயர்களைத் தெரிந்தெடுத்து அவர்களை ஸிம்ஹாஸ

நாதிபதிகளாக ஏற்பாடு செய்தார்கள். ஸ்ரீவைஷ்ணவ ஸமயதீக்ஷையாகிய பஞ்சஸம்ஸ்காரத்தை இவ்வெழுபத்தி ணுலு ஸிம்ஹாஸனாதிபதிகளும் அவர்களின் வம்சஸ்தர்களும் மாத்திரமே செய்யவேண்டியதென்று ஒரு நிபந்தனை செய்யப்பட்டது. அவர்களில் முதன்மையாக நால்வர்கள் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களும் அவர்களது புத்ரசிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவர்களும் மாத்திரமே ப்ருஹ்ம ஸூத்ர பாஷ்யத்தைச் சிஷ்யர்களுக்குப் போதிக்கவேண்டியதென்று நிபந்தனை செய்யப்பட்டது. அந்நால்வரில் முக்கியமாக ஒருவரைத் தெரிந்தெடுத்து அவரை பகவத்விஷய ஸிம்ஹாஸனாதிபதியாக நியமித்தார்கள். ஆகவே இவர் உபயவேதாந்த ஸிம்ஹாஸனாதிபதியானார். இவரும் இவரது புத்திர சிஷ்ய பரம்பரையாரும் மாத்திரமே உபயவேதாந்தார்த்தங்களையும் உபதேசிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. ரஹஸ்யார்த்த ஸம்ப்ரதாயத்துக்கு ஒருவரை ப்ரவர்த்தகராகச் செய்தார்கள்.

திவ்ய ப்ரபந்தத்திலுள்ள ஊற்றத்துக்காக உகந்து ஆறாயிரப்படியென்றும் திருவாய்மொழிக்கு வியாக்கியானம் செய்வித்து ஜ்ஞானபுத்ரராக ஸ்வீகரித்துக்கொண்ட திருக்குருகைப்பிரான்பிள்ளான் உபயவேதாந்த ஸிம்ஹாஸனாதிபதி. இவரும் ப்ரியபாகிநேயரென்று கொண்டாடப்பட்ட நடாதூராழ்வானும் மற்றொரு பாகிநேயரான முதலியாண்டானும் யதிராஜ மாஹாநஸிகராகிய கிடாம்பியாச்சானும் ஆக நால்வர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனாதிபதிகள். இவர்களில் கிடாம்பியாச்சான் ரஹஸ்யார்த்த பரம்பராப்ரவர்த்தகர்.

திருக்குருகைப்பிரான்பிள்ளான் உபயவேதாந்த ஸிம்ஹாஸனாதிபதியெனவும் எங்களாழ்வான் நடாதூராழ்வான்

கிடாம்பியாச்சான் அநந்தஸோமயாஜியார் இவர்கள் நால்வரும் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸநாதிபதிகளெனவும் சில நூல் கூறும். எம்பார் ப்ரபத்தி பரம்பராப்ரவர்த்தரென்றும் நடாதூராழ்வான் ஸ்ரீபாஷ்யத்திற்கும் பகவத் விஷயத்துக்கும் அதிஷ்டாதாவென்றும் கூறுவார் சிலர்.

அன்றியும் ஸ்ரீஸ்வாமிகளின் சிஷ்யர்களில் சிலர் பல விதமான கௌரவப்பெயர்கள் பெற்றவர்கள். அவர்களில் அஷ்டரத்நமென்று பெயர்பெற்றவர்களைக் கூறுவோம்.

(க) திருக்குருகைப்பிரான்பிள்ளான்: ஜ்ஞானபுத்திரர். பாதுகை.

(உ) கிடாம்பியாச்சான்: யதிராஜமாஹாநஸிகர். வேதாந்தோதயகர்.

(ங) நடாதூராழ்வான்: ப்ரியபாகிநேயர் ஸ்ரீபாஷ்யப்ரதமசிஷ்யர்.

(ச) முதலியாண்டான்: பாகிநேயர். திருவடி. த்ரிதண்டம்.

(ரு) கூரத்தாழ்வான்: கமண்டலு. (பவித்திரம்.)

(சு) எம்பார்: திருவடிநிழல். (பாதச்சாயை.)

(எ) பிள்ளையுறங்காவில்லிதாஸர்: திருமேனிக்காவல்.

(அ) வடுகநம்பி: க்ஷீரகைங்கர்யபரர். இவர்கள் முதலியவர்களாம்.

ஸ்வீகாரம் செய்துகொள்ளப்பட்ட புத்திரன் ஜ்யேஷ்டனாயிருந்தாலும் கநிஷ்டனான ஔரஸபுத்திரனுக்கு விதேயனாயிருக்கவேண்டியது சாஸ்த்ரந்யாய ஸித்தமாயிருப்பதுபோலவே ஸ்ரீபாஷ்யகார ஸ்வாமிகளின் திருவடிகளில் முதலில் ஆச்ரயித்த கூரத்தாழ்வான் முதலியவர்களும் ஜ்ஞானபுத்திரராகிய திருக்குருகைப்பிரான்பிள்ளானை அநுவர்த்தித்து நடந்துகொள்ளும்படி ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமிகள் கட்டளையிட, அந்தப்படியே அடியாரனைவரும் நடந்துகொள்ளலானார்கள்.

அம்முறைதிருவாய்மொழிஅர்த்தம் (பகவத்விஷயம்) சாற்றப்பட்ட உடனே கூரத்தாழ்வான் ஸ்ரீரங்கநாதனிடம் சென்று தமக்கு உடனே பரமபதம்சேர விடைகொடுக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். பெருமாள் அப்படியே யாகுகவென்றார். ஆழ்வானைத் தமது கிருஹத்துக்குப்போய்ச் சேருமுன்னே இவ்விருத்தாந்தம் ஸ்ரீபாஷியகாரஸ்வாமிகளுக்குத் தெரியவந்தது. ஸ்வாமிகள் பரபரப்புடனே ஆழ்வானிடம் சென்று கோபத்துடன் 'யானிருக்கும்போது நீர் இப்படி பதறுவதோ' என்றார்கள். 'பரமபதத்தில் நடப்பதாகத் தேவரீர் கூறியவைகளில் ஒன்றுக்கஞ்சி நான் இவ்வாறு பெரியபெருமாளை வேண்டிக்கொண்டே'னென்று ஆழ்வான் பணிவாய் மறுமொழி கூறினார்கள்.

மோக்ஷம்போகும் சேதநனுக்கு வழியே நடக்கும் மரியாதைகளைப்பற்றித் திருவாய்மொழி பத்தாம்பத்து ஒன்பதாம் பதிகம் 'சூழ்விசும்பணிமுகில்' என்பதில் கூறப்பட்டிருக்கிறது. முக்தனாய் வரும் சேதநனை நித்யமுக்தர் அனைவரும் எதிர்கொள்வதாக அதில்கூறப்பட்டிருக்கிறது. தமக்கு முந்தி ஸ்ரீபாஷியகார ஸ்வாமிகள் பரமபதம் செல்வதானால் பின் தாம் பரமபதம்போகும்போது எல்லாருடனும் ஸ்வாமிகளும் எதிர்வருவாரல்லவா? சிஷ்யனாகிய தம்மை ஆசாரியன் எதிர்கொள்வது யுக்தமல்லவென்று ஆழ்வானது அபிப்பிராயம். இதையறிந்து ஸ்ரீபாஷியகார ஸ்வாமிகள் 'உமது அபிப்பிராயம் அப்படியிருந்தால் யான் என்செய்வேன்' என்று கூறி ஆழ்வான் பிரார்த்தனைப்படி அவருக்கு ஸ்ரீபாததீர்த்தம் பிரஸாதித்துத் தமதுஆச்ரமத்துக்குத் திரும்பிவந்தார்கள்.

உத்தேசித்தகாலத்தில் ஆழ்வான் பரமபதமடைந்தார்கள். முறைப்படி சரமகைங்கர்யங்கள் பூர்த்திசெய்யப்பட்டன.

கூரத்தாழ்வான் பரமபதம் சென்றநாள் முதலாக ஸ்ரீ பாஷ்யகார ஸ்வாமிகளுக்கு மனம் வாடியது. இம்மண்ணுலகத்திலிருக்க இஷ்டமில்லை. ஸ்ரீராமபிரான் லக்ஷ்மணனைவிட்டு பிரிந்த உடனே,

"अद्यैवाहं गमिष्यामि लक्ष्मणेन गतां गतिम् ।"

என்று துரைப்பட்டதுபோல ஸ்வாமிகளும் தரிக்கத் தலைப்பட்டார்கள். இதையறிந்த அடியார்களனைவரும் 'ஸ்வாமிகள் மண்ணுலகத்தைத் துறந்தபின் நாமிருப்பதோ' என்று வெறுத்து எவ்வகையாயினும் தற்கொலை செய்து கொள்வதென்று ரஹஸ்யமாய்த் தீர்மானித்திருந்தார்கள். இது ஸ்வாமிகளுக்குத் தெரிந்துவிட்டது. ஸ்வாமிகள் அடியாரனைவரையும் ஒன்றாகக் கூட்டி அவர்கள் அபிப்பிராயத்தைத் தாமே எடுத்துக் கூறி 'இவ்வாறு யாரேனும் அவிவேகமாய் நடந்துகொள்வதானால் எமது பரமாசாரியனாகிய ஆளவந்தாரானை' என்று சபதமிட்டுவிட்டார்கள். அடியார்கள் பிரிவிற்கு வருந்தித் துயரப்பட்டபோது தம்மைப்போலே மூன்று விக்கிரஹங்கள் தாம்பிரத்தால் செய்வித்து அவற்றைத் தாம் ஆலிங்கநம்செய்துகொண்டு ஸ்ரீ பெரும்பூதூரில் பிரதிஷ்டை செய்யும்படி ஒரு விக்கிரஹத்தை முதலியாண்டானுக்கும் திருநாராயணபுரத்தில் பிரதிஷ்டை செய்யும்படி ஒரு விக்கிரஹத்தைக் கிடாம்பியாச்சானுக்கும் ஸ்ரீரங்கத்தில் பிரதிஷ்டை செய்யும்படி ஒரு விக்கிரஹத்தைத் திருக்குருகைப்பிரான்பிள்ளானுக்கும் கொடுத்தருளினார்கள்.

'அருளாளப்பெருமாள் செய்த குற்றமெதுவோ' என நடாதூராழ்வான் கேட்டார். அந்த பாகம் நமது பிரிய பாகிநேயராகிய உமக்கு இருக்கட்டும்; என்று ஸ்வாமிகள் கூறினார்கள். 'ஒரு தாய்க்குப் பல பிள்ளைகளானால் சிலர் மாத்திரம் உண்டுடுத்துக் களித்திருப்பதோ' என்று பலர்

வேண்ட எல்லா திவ்ய தேசங்களிலும் தம்மைப்போல விக்கிரஹம் பிரதிஷ்டைசெய்துகொள்ளும்படி ஸ்ரீபாஷியகார ஸ்வாமிகள் அடியார்களுக்கு அநுமதி கொடுத்தார்கள்.

ஸ்ரீபாஷ்யகார ஸ்வாமிகள் அடியார்களுக்குத் தத்வஹித புருஷார்த்தங்களைத் தெளிவாக எடுத்துக்காட்டிச் சுருக்கமும் பெருக்கமுமாகப் பலமுறை உபதேசம் செய்திருந்ததோடு கடைசியாகச் சரமஸந்தேசமாக அடியிற்கண்ட விஷயங்களை ஸாரமாக எடுத்துபதேசித்தார்கள். அவை வருமாறு:

(க) ஸர்வேச்வரனை ஸ்ரீமந்நாராயணனை ப்ராபித்து ஸம்ஸாரகந்தமும் இல்லாதபடி அவன் திருவடிகளில் மீளாவடிமை செய்யும்பொருட்டுப் பரமபதத்தைப் பிராபிப்பதற்கு ஸுகரமும் லகுவும் சீக்கிரபலமுமான உபாயம் ப்ரபத்தியேயாம்.

(உ) இந்தப் பிரபத்யுபாயத்தை அநுஷ்டித்த சேதநனது ஆத்மயாத்திரை ஈசுவராதீனமாயும் தேஹயாத்திரை கர்மாதீனமாயும் நடப்பதாகையால அதில் சேதநனுக்குப் பற்றில்லை.

(௩) ஆனாலும் இவன் மனோவாக்காயங்களைக் கொண்டு வேண்டியபடி செய்து திரியக்கூடாது.

(௪) ச்ருதி ஸ்மிருதி ஸித்தமான நித்யநைமித்ய கர்மங்களை அவனது பிரீதிக்காக கைங்கர்யபுத்தியால் செய்து வரவேண்டும்.

(௫) உபாயாநுஷ்டாநம் செய்த சேதநன் செய்ய வேண்டிய பிரதான கைங்கர்யங்கள் ஐந்து. அவையாவன:

(க) ஸ்ரீபாஷ்யத்தை நன்றாக அறிந்து சிஷ்யர்களுக்குப் போதிப்பித்தல்.

(உ) அதற்குச் சக்தியில்லையாகில் திவ்ய ப்ரபந்தார்த்

தங்களைக் கேட்டுப் போதிப்பித்தல்.

(௩) அதற்குச் சக்தியில்லையாகில் திவ்யதேசங்களுக்கு தீபம் மாலை சந்தனம் அமுது (நிவேதனம்) செய்ய அமுதுபடி (அரிசி) முதலியவை ஸமர்ப்பித்தல்.

(௪) அதற்கு யோக்யதையில்லையாகில் த்வயமென்னும் மந்திரத்தினர்த்தத்தை ஸதா அநுஸந்தானம் செய்தல்.

(௫) அதற்கு யோக்கியதை இல்லையாகில் ஸ்ரீவைஷ்ணவனை ஒருவன் நம்முடையவனென்று அபிமானிக்கும்படி அவனை ஆச்ரயித்திருத்தல். என்பவையாம் என்றும்.

திருநாராயணபுரத்தில் குடிசையாவது கட்டிக்கொண்டு வாஸஞ்செய்யவேண்டுவது நாலாவதாக்கி ஆறு கைங்கர்யங்கள் நியமித்ததாகச் சிலர் கூறுவார்கள். காடாயிருந்த அந்த பழைய திவ்யதேசம் சீர்படுத்தப்பட்டபடியால் அதற்கு முக்கியமாய் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்திவேண்டியதைப்பற்றியும் ஸ்வாமிகளுக்கு அங்கு அதிக அபிமானமிருப்பது ஸஹஜமானதுபற்றியும் இப்படி நியமித்திருக்கக்கூடுமாகிலும் ஒரு திவ்யதேசத்தில் வஸிப்பவர்கள் அதை விட்டு மற்றோர் திவ்யதேசத்துக்குக் குடிபோகையென்பது ப்ரசஸ்தமல்லவாகையாலும் இப்போது அருளிச்செய்தவை சரமஸந்தேசமாகையால் இது எல்லாருக்கும் பொதுவானதாயிருக்கவேண்டுமாகையாலும் திவ்யதேசங்களாயில்லாத இடங்களில் இருப்பவர்கள் திருநாராயணபுரத்தில் வாஸஞ்செய்வது தமக்கு ப்ரீதிவிஷயமாயிருக்குமென்று ஸ்வாமிகள் வெளியிட்டார்களென்று கொள்வதே நியாயமானது.

நண்பர்காள்! மஹாபுருஷனாகிய இராமாநுஜாசாரிய ஸ்வாமிகளின் சரித்திரத்தில் அவசியமாயும் முக்கியமாயுமுள்ள பாகங்களை வெகுவாயெழுதிவிட்டோம். அவரது சரித்திரங்களை ஒன்றும் விடாதெழுதவேண்டினால் நமது

ஸ்ரீ வாணீ விலாஸினியின் 4—ஸம்புடங்கள் (வால்யங்கள்) முழுதும் இதனாலேயே பூர்த்தியாகும். அவ்வாறு இடத்தைப்பிடித்துக்கொள்வது எல்லாநண்பர்களுக்கும் திருப்திகரமாயிராது. ஆதலால் முக்கியமான இரண்டொருவிஷயங்களை யெழுதி சரித்திரத்தை முடித்துவிடுகிறோம். இராமாநுஜாசாரிய ஸ்வாமிகளின் மதஸ்தர்களில் தென்கலை வடகலையென்று இரண்டு பிரிவுண்டென்று முன்னமே கூறியிருக்கிறோமல்லவா? முக்கியமான விஷயங்கள் நீங்கலாகச்சிலவான அம்சங்களின்கோட்பாடுகளில் அத்யந்தம் அல்பமான வேறுபாடுகளே முதலிலிருவகையாருக்கும் இருந்தது. நாளாவர்த்தில் அது பிரபலமாகி முக்கிய விஷயங்களிலும் நுழைந்து ஒருவர்க்கொருவர் பெரிய விரோதமுண்டாய்விட்டது. இராமாநுஜாசார்ய ஸ்வாமிகளின் சரித்திரத்திலும் இவ்விருவகையாரும் தங்கள் தங்கள் கொள்கைகளுக்கு ஏற்பப் பல பாகங்கள் கூறியும் எழுதியும் வருகிறார்கள். ஆனாலும் அவைகள் சரித்திரத்தின் முக்கிய பாகங்களல்லவாகையால் இங்கே யெழுதாமல் விட்டுவிடுகிறோம். ஒன்றுக்கொன்று மாறுபாடாகவும் ஒன்றுக்கொன்று கண்டனமாகவும் அவ்விரு கக்ஷிக்காரரும் கூறிவரும் ஐதிஹ்யங்களை எல்லாவகை மதஸ்தர்களும ஆதரிக்கவேண்டிய இப்பொதுப்பத்திரிகையில் வெளியிடுவது தகுதியுற்றதல்லவென்று நினைத்தோம். ஆகையால் அவ்விஷயங்களை வெளியிடாததைப்பற்றி எல்லோரும் நம்மை மன்னிப்பார்களாக.

(இன்னும் வரும்.)

ச்யாம-திருமலை தாதாசாரியர்.

OFFICE OF THE REGISTRAR OF
REGISTERED
31 OCT 190
MAD

சஞ்சலாக்ஷி.

I

இது வஸந்தகாலம். இளந்தம்பதிகட்கு அதாவது நூதன சாந்திமுகூர்த்தமான சதிபதிகட்கு இனியகாலமென்போம். இக்காலத்தில் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப்பிரியும்படி நேரிடின் வெகு தொல்லைக்காளாவார்களன்றோ! தென்றலோ சுகமாய் வீசியது. சந்திரன் தன் குளிர்ச்சியான கிரணக்கற்றைகளை பரவச்செய்துகொண்டு வெள்ளைவெளேரென்று கிழக்கே உதயமாயினன். மல்லிகைமுல்லை முதலான கொடிகள் அரும்புகள் நிறைந்து சமகமிதமான வாஸனை பொருந்தியிருந்தன. இன்னுமனேகவிதமான ஜாதீசம்பக பாரிஜாத முதலிய செடிகொடி விருக்ஷங்கள் நிறைந்துள்ள ஒரு கொல்லை (வீட்டுப்புறக்கடை) யில் விநோதமான கொடிவீடு ஒன்று காணப்பட்டது. அதில் ஒரு மாநிறமான அழகிய பெண் மெழுகுதிரிவிள

க்கை வைத்துக்கொண்டு ஏதோ ஒரு புஸ்தகத்தைக் கையில் வைத்து வாசித்துக்கொண்டிருந்தாள். அவள் மாநிறமுள்ள சரீரத்தைப் படைத்திருந்தாலும் பெண்ணைப் பெண்கண்டாசை கொள்ளும்படியான சுந்தரியாய் விளங்கினள். வயதோ 17-18 இருக்கலாம். கழுத்தில் தங்கக் கொடியில் கோத்தமைத்த திருமங்கல்யமும் தாயித்துகளும், சிவப்புக்கல்லிழைத்த பதக்சத்துடன் கூடிய கடியார அட்டிகையும், கொடிபோன்ற மிருதுவான கைகளில் தங்கக்காப்பும் கொலுசும், அழகிய நீண்ட மூக்கில் வைரக்கல் பதித்த புலாக்கும், காதுகளில் கெடியாரக்கம்மலும், காலில் புதுச்சேரி கொலுசும்தான் அம்மங்கை யணிந்திருந்த ஆபரணங்கள். தலைப்பில் சாணகலப் பொற்சரிகையும் இரண்டு பக்கங்களிலும் இரட்டைவரிசையாய்ச் சிவப்புக்கோடுகளும் ஒரு மாஷத்தினளவுக்கு மேற்படாத வெள்ளையுஞ் சிவப்புங்கலந்த பொட்டுகளும் போட்டமைத்த நெல்லூர் சுன்னடிப்புடவையை யுடுத்திக்கொண்டும், கொடிகளும் பூக்களும் நிறைந்த ஒரு மகமல் கஞ்சுகமணிந்துகொண்டு மிருந்தாள். அவள் நுண்ணியதான தனது இடையில் சுவர்ணமுகப்பு வைத்த பட்டுநூலினற் பின்னிய பெல்ட்டை போட்டுக்கொண்டிருந்தனள். அவளுடைய முகமோ எவரையு மெளிதில் வசியஞ்செய்யக்கூடியதாயிருந்தது. மீனைப்போல் சலிக்குமவளுடைய கண்களும், வில்லைப்போல் வளைந்த புருவங்களும் பளிங்குபோன்ற இரு கன்னங்களும், சிவந்த உதடும், முல்லையரும்பினைப்பழிக்கும் சிறியதான பற்களின் வரிசையும், வெகு விநோதமாயமைந்திருந்தன. அவள் புன்சிரிப்புடன் வார்த்தையாடும்போது கன்னங்களிலுண்டாகுஞ் சுழிகள் எவரையு மயங்கச்செய்யும். ஆல், உம் என்ற விகுதிப் பிரயோகங்கட் கிடமின்றி அம்மங்கயர்க்கரசியின் ஒவ்வொரு அவயவப்பகுப்புகளும் பருவத்துக்கேற்றபடி வெகு அழகாயமைந்திருந்தன. இத்தகைய சிறந்த பெண்ணொருவள் தன்னிரண்டு முழங்கைகளையும் ஓர் தலையணையின் மேலூன்றிக்கொண்டு ஒரு மெத்தையில் குப்புரப்படுத்துக்கொண்டபடியே ஒரு புஸ்தகத்தை வைத்து வாசித்துக்கொண்டிருந்தனள்.

அப்பொழுது கருத்து ஸ்தூலித்த சித்தானைக் குட்டியைப்போன்ற நடையுடன் கூடியவொருவன் வெள்ளை வெளேர் என்று மல் வேஷ்டியைப் பஞ்ச கச்சமாய்க்கட்டியும், காஞ்சீபுரம் பட்டுச்சரை

வேஷ்டி யொன்றை யோக வேஷ்டியாய் மேலே போட்டுக் கொண்டும் அங்கே வந்தான். அவனுடைய கருத்த மேனியும், பூனை விழியும், மயிர்கள் நிறைந்த சரீரமும் சிற்சில சமயங்களில் அவனுடன் பழக்கப்பட்டவர்களும் கண்டு நடுங்கும்படிக்கிருந்தன. ஆனல் அவன் நல்ல அத்யாதா: ஒரு காத தூரத்துக்குள்ளிருக்கும் ஸைகதபுரியிலிருக்கும் பாடசாலையில் அத்யாபகனுமாயிருந்தான். அவன் அங்கே வந்ததை மேற் கூறிய நங்கை கவனியாதவள் போல் கொஞ்சங்கூட லக்ஷியமில்லாதவளாய்த் தன் புத்தகத்திலேயே நோக்க முடையவளாயிருந்தாள். "எப்பொழுது மிவளுக் கென்னைக்கண்டால் அலக்ஷியந்தான்! ஆயினும் எனக்கு மட்டில் இவளிடமுள்ள ஆசை யொழிவதாயில்லை. நானிவளைப் படுத்தி வைத்த பாட்டிற்கு என்னை இந்த மட்டில் விட்டதே பெரிய காரியம் தான்; இந்த வீடு நுழையும் போது என்னை யொரு கிருதா மீசைக்காரன் வெள்ளென்று நாயைப்போல் குலைத்தான். அப்பொழு தோர் பரிசாரகப் பையன் வந்து இவர் இந்த வீட்டு மாப்பிள்ளை என்று சொல்லியிராவிட்டால் அவன் என் கழுத்தில் கை போட்டுத் தள்ளியே யிருப்பான். ஊரிலேயோ, அம்மா தள்ளாதவளாயிருக்கிறுள்; இவளை யழைத்துக் கொண்டு போகலா மென்றல்லவோ வந்திருக்கிறேன்; இவளிப்பொழுதிருக்கும் ஒய்யாரத்தைப் பார்த்தால் என்னேடு ஊருக்கு வருவாளென்று தோன்றவில்லையே. கேட்டு தான் பார்ப்போமே." என்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே, ஒரு பையனேடி வந்து 'ஓய் மாப்பிள்ளை! ஸந்தி பண்ணியாச்சுதா? இலை போட்டிருக்கிறது; ஸ்ரீமதியம்மாள் அழைத்து வரச்சொன்னர், சாப்பிடவாரும்; பிறகு அகமுடையாளிடம் பேசலாம்." என்று கூப்பிட்ட உடனே, அவன் "போஜனம் பண்ணி விட்டுப் பிறகு பேசிக் கொள்ளலாம்" என்று போயினன்.

உடனே ஓராடவன், அழகிய மேனியன், அவண் வந்து, "அடி, அம்மங்க! நீயும் நானுமாய்க் காவியப்பயிற்சி செய்து கொண்டு வந்தாலும் கொஞ்ச நாளாய் என் மனத்திலுற்ற தோர் எண்ணத்தை யுன்னிடஞ் சொல்லிக்கொள்ள வேண்டு மென்றல் என்னுடைய நா வெழவில்லை; மனமும் வருந்துகின்றதே;" என,

சஞ்சலாக்ஷி "அத்தான், அதென்ன? என்னிடஞ்சொல்லுவதற்கு என்ன யோசனை?" என்று கேட்டாள்.

துரைசாமி "வேறொன்று மில்லை; நீ எனக்கு அம்மான் பெண்ணை வேண்டும்; நானுனக்கு அத்தை பிள்ளையல்லவோ—"

சஞ்சலாக்ஷி: (அத்தான் துரைசாமியின் மனோபாவத்தை யறிந்து மறியாதவள் போல்) "எல்லாருக்கும் நம்முடைய உறவு தெரிந்தது தானே; நீ சொல்ல வரும் விஷய மின்னதென்றெனக்கு விளங்க வில்லையே."

துரைசாமி: "உலகத்தில் மூன்று வித ஆசைகளுள் பெண்ணாசை நீங்குதலெளிதோ?"

சஞ்சலாக்ஷி: "அத்தாங்குட்டி! அவ்வாசை நீங்கிற்றாயின் எளிதில் கடைத்தேற வழி தானாகவே ஏற்பட்டு விடுமே!"

துரைசாமி: (தனக்குள்) "பல முறைகளிலிவளுடைய வெண்ணத்தை நாம் கண்டறிந்திருந்தாலும் கொஞ்சங்கூட ஒன்றும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் சாமர்த்தியமாய்ப் பேசுகிறாள்; இருந்தாலும் உலகத்தில் ஸ்திரீகளே நெஞ்சழுத்தக்காரிகள்." என்று "என்னடி, சஞ்சலா! எனக்கு ஹிதோபதேசம்பண்ண வந்துவிட்டாயே."

சஞ்சலாக்ஷி: அத்தான்! நீ சொன்ன பொதுவான வார்த்தைக்குத் தான் நான் விடைகூறினேன்; நீ உனதெண்ணத்தைச் சொல்லேன்."

துரைசாமி: (தனக்குள்-இவள் நல்ல கிண்டாப்புளிதான்; நம்மையே கிண்டுகிறாள்) "அடி, அம்மங்க! பில்ஹணகவியானவர் ஒரு இராஜகன்னிகையைக் காதலித்ததும், துஷ்யந்தன் ருஷிகன்னிகையைக்காதலித்ததும், மகாதபஸ்வியானவிசுவாமித்திரர்கூட மேனகையை—சீசீ—பண்ணிவிட்டார்,——" என்று கடைசியில் நாத்தழுதழுத்துச் சொல்லிவருகையில்,

சஞ்சலாக்ஷி: "அத்தான்? என்னத்தையோ வம்புவளர்க்கிறாய், உன் கருத்தின்னதென்று எனக்குத் தெரியவில்லை. அப்ப! விண்ணவரும், மண்ணவரும் பிறனில் விழைந்தமையால் அதனால் படாதபாடும்பட்டிருக்கிறார்கள்; ஆனால்பில்ஹணகவியின்காதல் சரியான காதல்தான். குருசிஷ்ய பாவத்தால் தோஷமென்பாருமுளர்; ஆயினும் யாமினீபூர்ணதிலகை முதன்முதலில் தன்னுடையகாதலுக்குகந்தவன் பில்ஹணனென்று அவனைப்பார்த்ததும் மனதில் நிச்சயஞ்செய்துகொண்டனள். மேலும் அவள்

கலியாணமில்லாத இராஜ கன்னிகையா யிருந்தபோது அந்த கவியை பர்த்தாவாக வரித்துக்கொண்டனள். ஸ்த்ரீ புருஷரி ருவருக்கும் பரஸ்பரமேற்பட்ட காதல். அவ்வாறே துஷ்யந்த னுக்கும் சகுந்தலைக்கும் பரஸ்பரமுண்டான் காதலால் காந்தர் வமணம் நிகழ்ந்தது. சந்திரவம்சத்திலுதித்தோனுன துஷ்யந் தனும், சகுந்தலையைக் கண்டு காதலிப்பதற்குமுன், அவள் க்ஷத் திரிய ராஜரிஷியான விசுவாமித்திரனுக்கு அப்ஸரஸ்திரீயான மேனகையிடமுண்டானவளென்று அறிந்துகொண்டபிறகு தனக்குகந்தவளா யெண்ணினுன். "ஆசைக்கோரளவில்லை" யென்று தாயுமானவர் சொல்லியிருந்தாலும், தகாதபொரு ளைக்கண்டாசை கொள்வது கூடாதே" என்று கொஞ்சங் கடி ந்துரைத்தனள்.

துரைசாமி: "ஆனல் என்னம்மங்காருக்கு ஆசை லேசமுமில்லை யோ?" என்று பரிகாசமாய்ச் சொன்னுன்.

சஞ்சலாக்ஷி: அத்தாங்குட்டியின் உள்ளமின்னதென்று தெரியவி ல்லை; அம்மங்கார் அகமுடையான் (தன் மகிழ்நனைச் சுட்டி,) வந்திருக்கின்றுன். இராச்சாப்பாட்டிற்குப் போகலாம்; நீயும் வா; பிறகு யெல்லாம் பேசிக் கொள்ளுவோம்," என, துரை சாமியும், சஞ்சலாக்ஷி மொழிந்த கடைசி வார்த்தையின் "பிற கு யெல்லாம் பார்த்துக் கொள்ளுவோம்" என்றதிலிருந்து தனைக்கவளிணங்கி அவ்வாறுரைத்ததாய்த் தீர்மானித்துக்கொ ண்டு அவளுடன் கூடவே போஜன சாலைக்குச் சென்றனன்.

II

அந்தக் கொல்லையில் நாரத்தை, எலிமிச்சை, தென்னை, கமுகு, கதலி, மா முதலான விருக்ஷங்களும் உண்டு. சோலைபோன்ற அத் தோட்டத்தின் முன்புறம் உன்னதமான மூன்றடுக்குள்ள ஒரு மெத் தைவீடு அதிரமணீயமாய் விளங்கிற்று. அந்த வீட்டின் மெத்தை யில் ஒரு மாளிகை நானுவிதமான கொடிவிளக்குகளினுல் பிரகாசித் தது; அதில் விநோதமான பற்பல ஆஸனங்கள் போடப்பட்டிருந் தன; மத்தியில் ஒரு கால்வைத்தமைத்த தந்தத்தினுல் செய்த வட்ட மான ஒரு மேஜையானது போடப்பட்டிருந்தது; அதில் சில புஸ்த கங்கள் வைக்கப்பட்டிருந்தன; மேஜையின் மத்தியில் இரண்டு மெ ழுகுதிரி விளக்குகள் வைக்கப்பட்டுப் பிரகாசித்தன. மேஜையைச

சுற்றியும் விலையுயர்ந்த சில நாற்காலிகள் போடப்பட்டிருந்தன; அம்மாளிகையின் நாற்புறத்திலுமுள்ள சுவற்றில் விதம் விதமான அழகிய ரவிவர்மாவின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன; அங்கே ஒரு பக்கத்தில் பட்டினூற்செய்த திண்டு, தழுவணைகளுடன் ஒரு மெத்தைமேல் விரிப்புகள் விரிக்கப்பட்டபடி தந்தக்கட்டில் ஒன்று அசுமானகிரியுடன் போடப்பட்டிருந்தது. அதில் உயர்ந்த ஒரு போர்வையுமிருந்தது. இன்னும் அந்தவீட்டின அமைப்பும் விநோதமுமான வேலைப்பாடுகளும் நம்மால் சொல்லிச் சாத்தியமில்லை. அது ஒரு ஸ்ரீமானுடைய வீடாகக் காணப்பட்டது. ஆயினும் அது தாயைப்பிரிந்த சேயைப்போலும், நாதனில்லாத ஸ்திரீயைப்போலும், அரசனில்லா நகரத்தைப்போலும் தன்னை யனுபவிக்கக்கூடிய யஜமானனைத் துறந்திருந்ததாய்க் காணப்பட்டது.

வலது கையில் முழங்கைக்குச் சற்று மேலே பட்டுக்கயிற்றில் கோர்த்த தங்கத்தாயித்தைக் கட்டிக்கொண்டும், கழுத்தில் சுவர்ணக் கம்பியில் கோர்த்துக்கட்டிய ருத்திராக்ஷமாலையை யணிந்தும், சாண் அகலப் பட்டுக்கரையுடன் கூடிய கொரனாட்டுச்சேலையை முட்டாக்கிட்டு உடுத்தியும் சிவந்த நிறமுள்ள அழகிய சரீரத்துடன் கூடிய சுமார் 40-45 வயதுள்ள கைம்பெண்ணொருவள் அந்த வீட்டிலிருந்தனள். இந்தம்மாளை வஸுமதீ என்று சொல்லுவார்கள். கோடி வீட்டில் நாம் முன் பார்த்த சஞ்சலாக்ஷியின் தாயார். அவளுக்கு 30-32 வயதுள்ள ஸ்ரீமதி என்றொரு தங்கையுண்டு. அவளும் கைம்பெண்ணே. அக்கா தங்கைகளிருவரும் ஒரே நிறம், ஒரே சாயல், நடையுடை பாவனைகளெல்லாம் ஒன்றே. தங்கை ஸ்ரீமதியும் சஞ்சலாக்ஷியைத் தன் புத்திரியாய்ப் பாவித்து மூத்தவளான வஸுமதியுடன் கூடவே ஏகோபித்து வசித்துக்கொண்டு இருந்தனள். தங்கை தமக்கைகளிருவரும் வித்தை, புத்தி, செல்வமுதலியவற்றில் சிறந்திருந்தாலும், தங்கள் கொழுநரை இழந்த நிர்ப்பாக்கியவதிகளாயினர். ஆயினும் விசேஷமான கல்விஞானமுள்ளவளும், ஒப்பற்ற அழகுள்ளவளுமான சஞ்சலத்தைக்கண்டு நாயகனிறந்த துக்கத்தையும் பாராட்டமல் அரண்மனைக்கொப்பான மேற்கூறிய விநோதமான வீட்டிலிருந்தார்கள்.

வஸுமதிக்குச் சாந்திக்கல்யாணமாய்ப் பத்துப்பனிரெண்டு வருஷங்களாய்ச் சந்ததியில்லாமற்போகவே, ரகுநந்தனசர்மா தன் மச்

சினி ஸ்ரீமதியின் வடிவழகைக்கண்டாசைகொண்டு, தன்னில் லாள் அனுமதிப்படி அவளை மணஞ்செய்துகொண்டார். "திரை கடலோடியும் திரவியந் தேடு" என்ற மூதாட்டியின் வாக்கியப்படி அவர் பற்பல தேசங்கடோறும் சென்று பெருத்த உத்தியோகங்களி லிருந்து சம்பாதித்த ஏராளமான திரவியத்தைத் தாராளமாய் நல் வழியில் செலவு செய்யாமல் கடைசியில் தம்மூரான நகரியில், அநு பவிக்கவேண்டிய செல்வங்களையும், நாயகிகளாகிய வஸுமதி ஸ்ரீமதி என்றிரண்டு மனைவிமார்களையும், முன்கூறிய அழகிய மூன்றடுக் குள்ள உயர்ந்த மெத்தைவீட்டையும் துறந்து இறந்தனர்.

"மனையாளு மக்களும் வாழ்வுந்
தனமுந் தன் வாயின்மட்டே
யினமான சுற்ற மயானமட்டே
வழிக் கேது துணை
தினையாமள வெள்ளள வாகினு
முன்பு செய்த தவந்
தனையாள வென்றும் பரலோகஞ்
சித்திக்குஞ் சத்தியமே."

"அத்தமும் வாழ்வு மகத்துமட்டே
விழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே
விம்மி விம்மியிரு
கைத்தலைமேல் வைத்தழு மைந்தருஞ்
சுடுகாடு மட்டே
பற்றித் தொடரு மிருவினைப்
புண்ணிய பாவமுமே."

என்றபடி, அவரவர் செய்த இருவினைகளின் பயன்களே கூட வருவனவே யல்லாமல் மற்ற புத்திர மித்திர தாராதி யுறவினர்க ளும், செல்வங்களும் கூட வரமாட்டாது. ரகுநந்தனசர்மா நல்வ ழியிலே பணத்தைச் செலவு செய்யாமல் சேர்த்து வைத்த தென்ன

வாயிற்று? வேண்டு மென்று கைப்பிடித்த ஸ்ரீமதியைச் சிறிது நேரமாயினும் மனுபவித்துச் சென்றாரோ? ஊரெல்லாஞ் சுற்றிப்பர்த்து ஆங்காங்குள்ள விநோதங்களைக் கண்டு நூதனமாய் அரண்மனைபோன்ற மாளிகையை, பிசாசுகள்போல் குப்பல் குப்பலாய்த் தோன்றும் பனங்காடான நகரி என்று சொல்லப்பட்ட இந்த குக்கிராமத்தில் கட்டிமுடித்தாரேயல்லாமல், அதிலிருந்து சுகித்தனரா? கிராமம் தோறும் ஏராளமாய் நஞ்சைபுஞ்சை நிலங்களை வாங்கினரே, இவரனுபவித்தாரோ? எல்லாவற்றையும் விட்டு நமனுலகு சென்றனர். அவர் இறந்துபோகையில் வஸுமதி 5 மாதம் கருப்பமாயிருந்தாள். ஸ்ரீமதிக்கு அப்பொழுது வயது 14-15 இருக்கலாம். மடந்தைப்பருவம் எட்டிப்பார்த்துக்கொண்டிருந்ததாய்ச் சொல்லலாம். இவ்விருவருக்கும் மூத்தவராய்ச் சகோதரர் இராஜசேகரசர்மாவென்றொருவரிருந்தார். அவர் ஒரு பெரிய குடித்தனக்காரர். சந்ததியில்லாதவர். ரகுநந்தனசர்மா போய்விட்டபிற்பாடு மைத்துனராதீனத்தில் வீடுவாசல் நகைவகை செல்வங்கள் யாவுமிருந்தன. சஞ்சலாக்ஷியைக் கண்ணுக்குக் கண்ணாய் மிகுந்த செல்வத்துடன் வளர்த்துவந்தனர் சர்மா. ரகுநந்தனசர்மாவுக்கு காமாக்ஷியம்மாளென்று ஒரு தங்கையுண்டு. அவளுக்கு துரைசாமி என்றொரு பையன். அவனுக்கு வயது போதாதென்று இளையனூர் என்ற ஒரு சுப்பிரமணிய ஸ்தலத்தில். பெரிய குடித்தனக்காரருடைய ஏகபுத்திரனான சுமார் 22 வயதுள்ள வைத்திநாதன் என்பவனுக்குச் சஞ்சலாக்ஷியைக் கன்னிகாதானஞ் செய்துகொடுக்கப்பட்டது. அவன் எந்த விதத்திலும் சஞ்சலாக்ஷியுடன் ஒப்பிடக்கூடாதவனாகவேயிருந்தான். ஆனால் கல்வி யபிவிருத்தியும், காலத்திற்குகந்த நாகரீகமும் நுண்ணியவறிவும் இந்த கதாநாயகியிடம் இன்றியமையாக்குணங்களாயிருந்தன. அடக்கமென்ற சிறந்த குணமும் நமது பெண்ணை, கதாநாயகிசஞ்சலாக்ஷியை, மேன்மைப்படுத்தினாலும்,அவள் தன்கொழுநனிடம் பக்திலேசமுமில்லாதவளாயிருந்தனள். ஸ்திரீகள் தங்கள் கொழுநரைத் தெய்வமாயெண்ணவேண்டுமென்றும், கணவருக்குகந்தனவான பணிவிடைகள் செய்து கற்பினிலொழுகிடாதார் நரகரும் கொடிய நரகத்தினு ளழுந்துவார் என்றும் அவள் தெரிந்துகொள்ளாதவளுமன்று.

எழிலிற் சிறந்தவளும், அதிபுத்திசாலியுமான சஞ்சலாக்ஷி, அத்

தான் துரைசாமியைக் கூட்டிக்கொண்டு இராச்சாப்பாட்டிற்குச் சென்றதாய்ச் சொன்னேமே. போஜன முடிந்ததும் துரை ராஜன் தன் அம்மங்காரகமுடையானுடன் கூட விகடமான வார்த்தைகளைப் பேசிக்கொண்டு இராஜசேகர சர்மாவும் ஊரிலில்லாதபடியால், அத்தைமார்களான (அம்மான் மனையாட்டிகள், மாமிகள் என்றும் சொல்லுவதுண்டு) வஸுமதி, ஸ்ரீமதி இவர்களுடைய வேண்டுகோளின்படி அன்றிரவு அங்கேயே இருந்தான். சஞ்சலமோ மேற்கூறிய சிறந்த மாளிகைக்குத் தன் மாதர்களின் கட்டளைப்படிச் சென்று அங்கு போடப்பட்டிருந்த ஒரு நாற்காலியிலுட்கார்ந்துகொண்டு தனக்குத்தானே சிந்திக்கலாயினுள். "சுவாமியானவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மனக்குறை வைத்தே யிருக்கிறுர். இவ்வளவு வைபவமிருந்தும் என்ன செய்துகொள்ளுகிறது. துவண்டு விழும்படியான சுவர்ணக்கொடிபோன்ற பளபளப்பான மேனி வாய்ந்த எலிமிச்சங்கனியைநிகர்த்த செவந்தசரீரத்தைப்படைத்த அத்தான் துரைராஜனை (துரைசாமி) க் காணும்போதெல்லாம் என் மனம் விகாரத்தையடைகிறதே? மனதை யடக்கியாளவேண்டுமென்றுஎன்னதான் முயன்ருலும் அத்தானைக் கண்டுவிட்டால் முடியாமல் மனம் பதைக்கின்றதே! இன்று எனக்கும் அத்தானுக்கும் நடந்த சம்பாஷணையில் அவனுக்கென்மீதிலுள்ள துரெண்ணத்திற்கு இணங்கி வார்த்தை சொன்னேனில்லை. அவனுடைய எழிலைக்கண்டு மயங்கி, மனமாகிற குதிரையை புத்தியாகிற கடிவாளத்தினல் சுவயேச்சையாய்ப் போகவிடாமல் இழுத்துப்பிடிக்காமல் விட்டுவிட்டேனேயானல் புருஷனிலடங்காதபூவை என்று மனதைப்பார்த்துச் சொன்ன தாயுமானவருடைய வார்த்தைக்கு நானுமல்லவோ திருட்டாந்தமாய்விடுவேன்! என்னிடம் துராசைகொண்டு அத்தான்சொன்ன வார்த்தைகட்கு, எனக்கவனிடமுண்டாகும் துராசையைக் காட்டிக்கொள்ளாமலே அவனுடைய துராசையைக் கண்டித்து, அவன் கடைத்தேறும்படியான விதமாய் ஹிதமொழிகளையேயன்றே விடையாய்க் கூறினேன். நான் உத்தமகுலத்துதித்தவளாயினும், விதியின்படி கிடைத்த புருஷனை மதியாமல், துரைராஜாவின் வடிவழகையும், வாக்குசாதுர்யத்தையுங் கண்டுங்கேட்டும் ஜனிக்கும் துராசையைக் களைவதற்கில்லாமல், என் மனதை அது போனபடிக்கெல்லாம் விடத்துணிந்தேனுயின் அது என் முன்வினைப்பயனென்றெண்ணும்படிக்

கிருந்தாலும், உலகமவ்வாறு எண்ணுமல் பழிக்குமே; என்செய்கிற்பேன்! நான் துரைராஜனையே கல்வியாணஞ் செய்துகொண்டிருந்தால் வேற்றுவனைக் கண்டு இப்பேர்ப்பட்ட துரெண்ணமுண்டாகுமா? ஆனத்திற்காகாததும் ஆகாத்திற்கானதுமாய்க் கடவுள் ஜோடிசேர்க்கிருரேயல்லாமல் மனம்பொருந்தின சதிபதிகளைச் சேர்க்கிறதேயில்லை. உலகமுழுவதும் மனம்பொருந்தின சதிபதிசளாயிருந்தால் வியபிசாரமேயிருக்கமாட்டாது. இந்தப்படிக்கெல்லாம் நம்மை ஆட்டிவைத்து வேடிக்கைபார்ப்பது அவருக்கு விளையாட்டாயிருந்தாலும், மனமறிந்த கெடுதலுக்குப் பாத்தியப்படாமலிருப்பது தான் நலமென்றெண்ணுகிறேன். வியபிசாரஞ்செய்யும் ஸ்திரீபுருஷரெல்லாம் வினைப்பயன் என்று வீண் குதர்க்கம் பேசுவதமுண்டு. அவர்களிடம் வியபிசாரமொருதவறுதலும், குதர்க்கம்பேசுதல் மற்ெருரு தவறுதலுமாகுமன்ரே? நாம் எந்தக்காரியத்தைச் செய்ய யத்தனப்பட்டாலும் அது நல்ல காரியம் அல்லது கெட்ட காரியம் என்று தெரியாமலிராது. மனதார கெட்டகாரியமென்று தெரியும்போது புத்தியாகிற கயிற்றைக்கொண்டு மனமாகிற குரங்கைக்கட்டி கெடுதலில் போகாவண்ணம் இழுக்கவேண்டும். மிடியினராயினும், குணமில்லாதவராயினும், விருத்தராயினும், நோயுள்ளவராயினும், அழகில்லாதவராயினும், உறுப்பிலராயினும், வஞ்சகராயினும், மூடராயினும், கொடியவராயினும், கொழுநர்பால் அன்பில்லாதவராய்க் கற்புள்ள மாதர்கள் நடந்துகொள்ளமாட்டார்களென்று நூல்கள் முறையிடுகின்றனவே! நளாயினி, சாவித்திரி முதலான உத்தமிகளின் சரித்திரங்களும் என் மனதில் படாமலிருக்கவில்லையே! பருவதாகாரமாய் நீருண்ட மேகத்தைப்போல் கறுத்த மேனியும், பூனைவிழியும், மயிர்நிறைந்த தேகமும் எனக்கருவருப்பைக்கொடுக்கின்றனவே! நல்ல புருஷனைக்கொள்ள நல்ல பூஜைதனை யியற்றுமல்போனேன்போலும்—கர்ப்பாஷ்டமத்தில் எனக்குக் கலியாணஞ் செய்துவிட்டார்கள். அப்பொழுது தக்கபுருஷனைத் தெரிந்தெடுக்கப்போதுமான வயதில்லையே. அந்தணர்குலத்துதித்த பெண்களை தக்க பருவகாலம்வரையில் விவாகஞ்செய்யாமல் வைக்கும் வழக்கமுமில்லை சாஸ்திர சம்மதமுமில்லைபோலும். அதனுல்தான் சதிபதிகள் மனமொற்றுமையின்றி சிலர் மனம் வருந்தவும், சிலர் கெட்டலையவும் நேரிடுகின்றனர். பெண்கட்கிளம்பிராயத்தில் கல்லியாணஞ்செய்வ

தினல் பால்ய விதந்துக்கள் பெருக்கிறார்கள். ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் நேசித்துச் செய்துகொள்ளும் திருமணமானது இங்கிலாந்து முதலான சீமைகளில் இன்றும் நிகழுகின்றது. அத்தகைய தாம்பத்யம் அனுகூலதாம்பத்யமாகவும் ஸ்திரீ புருஷரிணைபிரியாமல் ஒற்றுமையாய்க்கூடி நீடூழி வாழவுஞ் செய்கிறது. அவர்களில் விசேஷமாய்ச் சதிபதிகள் ஒருவருக்கொருவர் தம்தம் மனோபாவத்தைக்கண்டறிந்துகொள்வதினால், வேற்றுடவன் வேற்றுஸ்திரீயுடன் களங்கமற்றுக் கைகோத்து உல்லாசமாய் வார்த்தைகள் பேசிக்கொண்டு பயிரங்கமாய்த்திரிகிறார்கள். நம்மவர்களோவென்றால் அடக்கமாகவே கல்யாணம் நிச்சயித்து ஒரு பெண்ணையும் ஆணையும் சதிபதிகளாக்குகின்றார்கள். அந்தசதிபதிகள் தெய்வாதீனமாய் மனமொத்து நடந்தால்தான் நலமாய்முடியும்; மனமொத்துக்கொள்ளாவிட்டால் அடக்கமாகவே வியபிசாரத்துக்கு ஏற்பட்டுவிடுகிறார்கள். ஆதியில் பிரமன் என் தலையிலெழுதியவண்ணம் எனக்கு கிடைத்த கொழுநனையன்றி அத்தான் என்று பிரேமைபாராட்டி துரைராஜனை நான் கைப்பிடித்தேனாயின், அதைவிட துரோகமும், பழியும் வேறென்ன யிருக்கிறது? கடவுள்தான் என்னை தின்மையில்விடாமல் காப்பாற்றவேண்டும்.

இவ்வாறு சஞ்சலாக்ஷி எண்ணுதும் எண்ணிக்கொண்டிருக்குங்கால், வைத்திநாதன் மெள்ளமெள்ள மாடிப்படியேறி அம்மாளிகைக்குள் சென்றனன். தன்னுடைய அகமுடையாள் சஞ்சலாக்ஷியைப் பார்த்தான். அவளேதோ புத்தகத்தை பார்த்தபடிக்கிருந்தனள். அவளைக் கண்டதும் அவளுடைய அழகிலீடுபட்டு மயங்கி, அவளுக்குத் தெரியாமல பின்பக்கமாய்ச் சென்று அவளுடைய கண்களைப் பொத்தினன். அதற்கவள் திடுக்கிட்டெழுந்து, "ஐயோடி, திருடனைப்போல் வந்து கண்ணைப் பொத்துவானேன்! பயந்துபோனேண்டியம்மா! உடல் நடுங்குகின்றதே! அக்னிசாட்சியாய்க் கைப்பிடித்த பொண்டாட்டியிடம் வரத் திருட்டுத்தனமேன்? வெள்ளைவெளேரென்று முழியும், கன்னங்கரேரென்றமாவாசையிருள்போன்ற தேகமும் பார்த்து பயந்துபோனேண்டியம்மா!" எனறவன் காதில் படும்படி சொல்லிச் சற்று முகத்தைக்கொட்டித் திருப்பிக்கொண்டு கையிலிருந்த புத்தகத்தை ரௌண்டு மேஜை (Round table) யின்மேல் வைத்துவிட்டு கட்டிலின்பக்கத்திலணுகி அங்கு

சுவற்றில் மாட்டியிருந்த விதம்விதமான சித்திரப்படங்களை பார்த்த படி நின்றனள். அங்குள்ள கெடியாரத்தில் மணி பதினொன்றடித்தது. வஸுமதி, ஸ்ரீமதி, துரைராஜன் இம்மூவரும் உயரச் சென்று இம்மாளிகைக்கு எடுத்துக் கட்டியிருக்கும் பலகணிகளின் ஒன்றின் வழியே இந்த இளந்தம்பதிகளின் சிருங்காரசேஷ்டைகளின் விநோதத்தைக் கண்ணுற்றுக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது வைத்திநாதன் மெள்ள சஞ்சலாக்ஷியின் சமீபஞ் சென்று தொடிபோன்ற அவளுடைய கையைக் கெட்டியாய்ப்பற்றிக் கொண்டு, "அடியே! நான் அமாவாசை இருள்தான். நீ ராக்காலசந்திரனாயிருக்கையில் என்னிருள் ஓட்டம்பிடிக்காதா?" என்று மொழிந்த தன் கொழுநனை நோக்கி,

சஞ்சலாக்ஷி—"வாஸ்தவமான இருளானால் ஓட்டம்பிடிக்கும்; நீருண்ட மேகமானால்—அதில் மறைந்த சந்திரனொளி எங்ஙனம் தோன்றும்?" என்றாள்.

வைத்திநாதன்.—அடி, உன் மனமிங்ஙனஞ் சலிப்பானேண்டி? அதனால்தான் உனக்கு சஞ்சலாக்ஷி என்று பெயரிட்டழைக்கிறார்களோ?

சஞ்சலாக்ஷி—"சஞ்சலையென்றால் இலக்ஷ்மிக்குப்பெயர். இலக்ஷ்மி ஓரிடத்திலிருப்பவளன்று; சதா சலித்துக்கொண்டிருப்பவள்தானே," என்று தன் கையைத் திமிறினாள்.

வைத்திநாதன்.—"அடியே! இலக்ஷ்மி சலிப்பவளாகலின், நாராயணன் அவளை ஹிருதயத்திலடக்கிவைத்துக்கொண்டிருக்கிறார். அவரைப்போல் நானுமுன்னை இறுகக்கட்டிக்கொள்ளுகிறேன். இனி விடுவதில்லை. உன்னாலானதைப்பார்," என்று கெட்டியாய்க் கட்டிக்கொண்டான்.

சஞ்சலாக்ஷி—"நாராயணன் இலக்ஷ்மியை ஹிருதயத்தில்இரட்டைப்பூட்டு போட்டுவைத்திருந்தாலும் அவள்சலித்துக்கொண்டுதானிருக்கிறாள். அவள் சலிக்காவிட்டால் ஒருவன் ஓட்டையாண்டியாயும், மற்றவன் தனிகனுயுமாவதெப்படி? இஃதென்ன என்றுமில்லாத வழக்கமின்று. என்னை விடும். உடம்பு மயிர் மொசமொசவென்று குத்துகிறது." என்று சொல்லிக்கொண்டே அவன் கொஞ்சம் பராக்காயிருக்கையில அவன்பிடியிலிருந்தும் திமிறி, விடுபட்டுச்சென்று கட்டிலின் மற்றொரு பக்கம

போய்ப் பதுங்கினாள். (பிறகு தனக்குள்ளாகவே, இந்தசேஷ்டைகளெல்லாமின்று எவர் செய்த உபதேசமோ? இத்தனை நாளாய்க் காணவில்லையே! இதற்கெல்லாம் நான் மயங்குபவளில்லை. செய்த கொடுமையெல்லாம் மறக்குமா?)

வைத்திநாதன்.—"அடி! என்னடி வேடிக்கைபண்ணுகிறாய்? என்னை திமிறிச் செல்லுகின்றனையே. ஊர் நினைவில்லைபோலிருக்கிறதே; அம்மா அழைத்துவரும்படி சொல்லி நான் வந்திருக்கிறேன். எப்போ புறப்பட்டுப்போகலாம்" என்று மறுபடி அவள் பக்கலணுகினான்.

சஞ்சலாக்ஷி.—"சரிதான், அடியையுங்கண்டா, நுனியையுங்கண்டா? அடியாவதென்ன அடி? எல்லாம் போதும். வந்த வழியைப் பார்த்துக்கொண்டே போகலாம்." என்று அவன் கையிற்சிக்காமல் கட்டிலின் மறுபக்கம் வந்தனள்.

வைத்திநாதன்.—("அடியாவதென்ன அடி? எல்லாம் போதும்." என்ற அவள் வார்த்தையைக் கேட்டதும் தான் அம்மாவின் வார்த்தையைக் கேட்டு அவளை அடித்த அடியை எண்ணி மனம் வருந்தி) அடி, கண்மணி! நானினி உன்னை அடிக்கமாட்டேன்; எனக்கும் அம்மாவுக்கும் புத்தி வந்துவிட்டது. நீ வருத்தப்படாதே. அம்மா ஒரு வருஷமோ, ஆறு மாதமோதானிருக்கப் போகிறாள். போவோம் வா, ஊருக்கு.

சஞ்சலாக்ஷி:—"அந்த எண்ணம்நடவாது; வேண்டுமோனால் உங்கம்மா முதலான சேனைகளுடன் இங்கேயே வசிக்கலாம். என் தாய்மார்களுக்கு மதுவே யிஷ்டம்."

வைத்திநாதன்.—ஏண்டி, நீ சொல்வதழகாயிருக்கிறதா? உலக சம்மதமாகுமா?

சஞ்சலாக்ஷி.—அழகோ, அழகில்லையோ? உலகம் சம்மதிக்குமோ சம்மதிக்காதோ? நானங்கே வருவதென்றால் மனம் நடுங்குகின்றதே! நான் வேணும்போலிருந்தால் இங்கே இருக்கலாமே. உங்கம்மா முதலானவர்கள் அங்கேயோ அல்லது இங்கேயோ இருக்கட்டும். இத்தனை பெரிய வீடுவாசல் தோட்டம் நஞ்சை புஞ்சை நிலபலன்களைப்பார்த்துக்கொண்டு மாமியோடு இங்கேயே யிருங்கள். அதுதான் எனக்கு சம்மதமாயிருக்கிறது.

வைத்திநாதன்.—ஏண்டி அப்படி சொல்லுகிறாய்? இனி உன்னைச்

கண்ணுக்குக்கண்ணைப் பார்த்துக்கொள்ளுகிறேன். முன் செய்தது பிசகு, அவைகளை மறந்துவிடு.

சஞ்சலாக்ஷி.—"என்னுடைய உயர்ந்த ஆடை ஆபரணம்,பட்டாடைகள் எல்லாவற்றையும் வழிப்பறிசெய்ததெல்லாம் மறப்பேனா?" என்றழுதாள். பிறகு சற்று கண்ணைத் துடைத்துக்கொண்டு, அவைகளெல்லாம் உங்களுடைய சுவயமல்ல. துர்ப்போதனைக்குட்பட்டு நடந்தது. அவைகளைப்போல் எவ்வளவோ உயர்ந்த நகைகளையும் ஆடைகளையும் எனக்கு கடவுள் கொடுத்திருக்கிறார் பாருங்கள். இதோ இந்த முந்தனையிலிருக்கும்சரிகையின் மதிப்பென்ன தெரியுமோ? அதெல்லாமிருக்கட்டும். நான் அங்கே வர மனம் வராமல் நடுங்குகிறதே! என்செய்வேன்! வலுவில் பெண்ணைக்கொடுத்தால் ஜாதிக்கு இளப்பம் என்று சொல்லக்கேட்டிருக்கிறேன். பக்கத்திலிருக்கிற துரைராஜனை விட்டுவிட்டுத் தேடிக்கொண்டு வந்து என்னை உமக்குக் கொடுத்தார்களே அவர்களையல்லவா சொல்லவேண்டும். விதி அப்படியிருந்தால் யார் என்ன செய்யலாம்? வீண் வம்பேதுக்கு, பழங்கதைகளெல்லாம் என் நினைவுக்கு வருகின்றன? எனக்கு தூக்கம் கண்ணைச் சுழட்டுகிறது." என்று சொல்லிக்கொண்டு கட்டிலில் போய்ப் படுத்தனள்.

வைத்திநாதன்.—நம்ம ஜபஞ்சாயவில்லையே என்று தானும் கித்தான்போட்ட சாயுமான நாற்காலியில் உட்கார்ந்து சற்றுச்சாய்ந்து கொண்டு கண்ணயர்ந்தான்.

ஸ்ரீமதி, வஸுமதி, துரைசாமி மூவரும் அம்மாளிகையில் இளந்தம்பதிகள் செய்துகொண்டே சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்தனர். தாயாருடைய துர்ப்போதனையால் வைத்திநாதன் சஞ்சலத்தை ஏதேனும் ஹிம்சைப்படுத்தினால் என்ன செய்கிறதென்று தூங்காமல் விழித்துக்கொண்டு மேற்குறித்த இடத்திலிருந்து பார்த்தபடிக்கிருந்தார்கள். "பக்கத்திலிருக்கிற துரைராஜனை விட்டுவிட்டுத் தேடிக்கொண்டுவந்து என்னை உமக்குக் கொடுத்தார்களே" என்ற சஞ்சலாக்ஷியின் வார்த்தையைமட்டில் கவனத்துடன் தன் மனதில் வைத்துக்கொண்டு துரைசாமியானவன் தன்னை அவள் மனதார விரும்புகிறாளென்று தீர்மானித்துக்கொண்டான்.

சற்றுநேரஞ்சென்று வைத்திநாதன் அங்கு போடப்பட்டிருந்த

மேஜையிலிருந்த ஒரு கடிதத்தில் ஏதோ எழுதி அதை சஞ்சலாக்ஷியின் முந்தாணையில் முடிந்துவிட்டுத் தான் திடீரென்று கீழே வந்து வஸுமதி ஸ்ரீமதி இவர்களுக்கு நமஸ்கரித்து. கீழே நிகழ்ந்த துன்மார்க்கங்களை மனதிலெண்ணமல் சஞ்சலாக்ஷியைத் தன்னுடன் அனுப்பும்படி வேண்டினன். அவர்கள், "அப்பா! நாங்கள் செய்வதொன்றுமில்லை. அவள் மனம் கல்லாய்ப்போயிற்று. அவள் படாதபாடும்பட்டு இங்கே வந்துசேர்ந்தாள். அவளைக் காணப்போகிறோமாவென்றிருந்தோம். கடவுள் கிருபையால் உயிருடன் வீடுவந்து சேர்ந்தாள். அவளே சம்மதப்பட்டு உன் பின்னோடு வந்தால் நாங்கள் தடுப்பதில்லை; உன் பொண்டாட்டியை நீ அழைத்துக்கொண்டுபோக தடையில்லை. அல்லது நீ இங்கேயேயிருந்தாலும் எங்களுக்கு சம்மதந்தான்." என்று சொன்னார்கள். வைத்தினாதனும் தனக்கொன்றும் தோன்றாமல் வந்தவழியை நோக்கிச் சென்றான்.

III.

சஞ்சலாக்ஷியின் மேலேயே கண்ணுயிருந்த துஷ்ட எண்ணமுமுள்ள துரைராஜனானவன், வைத்தினாதன் மேற்கூறிய படுக்கையறையை விட்டுக் கீழே தன் மாமிமார்களிடம் வந்து அவர்களைப் பணிந்து வேண்டியும் தன்னுடைய எண்ணம் பலியாமற் றெருவில் சென்றதுவரை பார்த்துக் கொண்டிருந்து, தனக்குள்ளாகவே "இனி சஞ்சலாக்ஷி நமக்குரியவளாவாளென்பதில் சிறிதுந்தடையில்லை." என்று தீர்மானித்தவனாய் மெள்ள மெள்ள அப்பெண்மணி படுத்திருந்த மாளிகைக்குள் நுழைந்தனன். கட்டிலின் சமீபஞ் சென்றனன், தனித்துப் படுத்திருக்கும் அவள் அழகைக்கண்டு வியந்து மயங்கினும், அவளைத் தட்டி எழுப்ப மனந் துணியாதவனாயிங்குமங்கும் பார்த்துக் கொண்டிருந்தனன். மறுபடியும் கட்டிலைக் கிட்டி, "ஏன் என் அம்மங்காருக்கு இன்னம் தூக்கம் விட்டபாட்டில்லை,—" என்று என்னத்தையோ சொல்லவாயெடுத்து, அதைச் சொல்லநாவெழாமல் கனைத்துக்கொண்டங்குள்ள நாற்காலியில் உட்கார்ந்தான்.

அப்பொழுது திடீரென்று சஞ்சலாக்ஷி படுக்கையை விட்டெழுந்து உட்கார்ந்தாள். "துரைராஜனுக்கு இந்த வேளையில் இங்கென்ன வேலை? நானவனைத் தமயன் போலெண்ணியிருந்தாலும் நானுமவனும் இந்த விநோதமான மாளிகையில் தனித்திருப்பதை வேற்

றுவர் காண நேரிடில் ஏதேனும் வித்தியாசமா யெண்ணுவார்களே!" என்று அவனை நோக்கி, "அத்தான்! துரைராஜ! உன்னை இங்கே ஏகாந்தத்தில்காண என் மனம் சம்மதப்படாமல் வருந்துகிறது. நானும் தக்க பருவம் வாய்ந்த ஸ்த்ரீ! நீயும் தக்க பருவமுள்ள புருஷன் நாமிருவரும் மனதில் கள்ளங்கவடு நினையாதவர்களானாலும், உலகம் பழிக்கும். ஆதலின் நீ இந்த க்ஷணமே இம்மாளிகையை விட்டுப் போகவேண்டும்" என்று சொல்ல, அவன், "அம்மங்காருக்கே சம்மதமில்லாமற்போனால் நான் வெளியே போய் விடுகிறேன்: ஆனால் நேற்றிரவில் நீ என்னைச் சாப்பாட்டுக் கழைத்துச் செல்லுங்கால் "பிறகு எல்லாம் பேசிக்கொள்ளலாம்" என்று சொன்னதை நம்பியல்லவோ நீ தனித்திருக்கும் சமயம் பார்த்து இங்ஙனம் வந்தேன்; மேலும், நீயும், உன்னகமுடையானும் நேற்றிரவில் நெடுநேரம் வார்த்தை பேசிக்கொண்டதிலிருந்து, அவனை நீ அலக்ஷியம்பண்ணியும் என்னை இலக்குவைத்தும் பேசிய சில மொழிகளை யெண்ணி நான் இங்கு வந்திருக்க, நீ இப்போது என்மேல் கோபிக்கும்படி நான் என்ன அபராதம் பண்ணினேனோ? அபராதமே பண்ணியிருந்தாலும், தயவுசெய்து என்னை மன்னித்து, இந்த சமயம் குளிர்ந்த தென்றலென்மீது நெருப்புத்தணல்போல் எரிக்காமலிருக்கும்படிசெய்ய வேண்டுகிகிறேன்." என்று சொல்லவே, அவளுக்கு துக்கமும், கோபமுமிருந்து, "அட, பாவி! உன்னை என் சகோதரனையெண்ணி, அத்தான் என்கிற சமீப பாந்தவ்யத்தினால் மனதில் வேற்றுமைபாராட்டாது உன்னுடன் வாசிப்பும், விநோதமுமாய்ப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்ததெல்லாம் இப்பொழுது அனர்த்தமாய் முடிந்தது போலும்; அயல்மாதரைக் கண்ணெடுத்துப்பார்த்து தகாத வார்த்தைகளைச்சொல்லித் துன்பப்படுத்தும்படி நீ வாசித்துவந்த நூற்களில் சொல்லியிருக்கிறதோ? உன்னுடைய துஷ்ட எண்ணத்தை நேற்று நீ பேசிவந்ததில் நான் கண்டு அதற்கிணங்காமல் கண்டித்து விடையுங் கூறினேன்; காமக்கேட்டினால் விளையுந் துன்பம் இன்னதென்று தெரியாதோடா? நீ அறிவில்லாத நாற்கால் மிருகம்போன்றவன் என்று இப்போதறிந்தேன். இனி உன் ஸகவாஸம்வேண்டாம். மரியாதையாய் வீடுபோய்ச் சேரு." என்று அவள் செய்த கர்ச்சித்தலினால் அவன் நடுநடுங்கி வெட்கிக் கீழே இறங்கிச் சென்றான். அப்பொழுது தங்கள் பெண் அழுகுரலைக் கேட்டோடியும் வந்த

வஸுமதிக்கும், ஸ்ரீமதிக்கும், துரைராஜன், "அடியன் குழந்தையை ராத்திரி 'மொத்து', 'மொத்து' என்று அடித்துக் கொன்றானாம்; சொல்லியழுதாள் வேறொன்றுமில்லை; போய்ப்பாருங்கள், நானும் வீடுமட்டும் சென்றுவருகிறேன்." என்று சமாதானஞ் சொல்லிக்கொண்டே ராஜகிரகம்போன்ற அந்த வீட்டைவிட்டுச் சென்றான்.

அன்று காலையில் ஊருக்குப்போயிருந்த இராஜசேகரசர்மாவும் வந்து சேர்ந்தார். சஞ்சலத்தை வைத்திநாதன் அடித்துவிட்டான் என்று சமாசாரம் அவருடைய காதுக்கும் எட்டிற்று. மனம் வருத்தமுற்று துக்கித்தார். உடனே உயர மாளிகைநோக்கிச் சென்றனர். ஸ்ரீமதியும், வஸுமதியும் அங்கே வருத்தமுற்றிருக்கக் கண்டார். மருமகளை நோக்கி, "அம்ம, சஞ்சலம்! நடந்த சங்கதி என்ன? ஒளியாமற் சொல்லு, ஏன் துக்கிக்கிறாய்? அந்தப் பயலை உண்டு இல்லை என்று தீர்த்துப்போடுகிறேன்." என்றார். "நான் பண்ணின பாவத்துக்கு யார் என்ன செய்வார்கள்? இன்று என் மானத்தைக் காப்பாற்றிக்கொண்டேன்." என்று விம்மிவிம்மி அழுதாளேயல்லாமல் தெளிவாய் ஒன்றும் சொன்னாளில்லை. அம்மானும் தாய்மார்களும் தங்களருமைப்பெண்ணை வைத்தி அடித்துவிட்டான் என்றெண்ணிக் கொண்டிருந்தார்கள். சஞ்சலாக்ஷியோ தன் கூக்குரலால் துரைராஜாவின் துஷ்டச்செய்கை இவர்களறிந்திருப்பார்கள்." என்றெண்ணினாள். சர்மா என்ன நல்ல வார்த்தையாய்க்கேட்டும் அவள் உண்மையை வெளியிடாமலே அழுதபடிக்கிருந்தாள். அப்பொழுது சுப்பிரமண்யசிவர் வந்து சேர்ந்தனர். "ஏனிந்தக்குழப்பமிங்கே" என்று கேட்டனர். "ஒன்றுமில்லை தாத்தா; இதோ வந்துவிட்டேன்." என்று சஞ்சலாக்ஷி எழுந்து அங்கோர் பக்கத்தில் *பாண்டவ தீர்த்தத்திலிருந்து வேண்டும்போது தண்ணீர் வரும்படி யமைக்கப்பட்டிருந்த ஒரு குழாய்க்குச் சமீபஞ் சென்று தந்ததாவனம் பண்ணிக்கொண்டும், முகம், கை, கால்களைச் சுத்திசெய்துகொண்டும், நீண்ட தலைமயிரைக் கோதி முடிந்துகொண்டும், நெற்றியில் குங்குமப்பொட்டிட்டுக்கொண்டும் வந்து சேர்ந்தனள். இவ்வளவு காரியங்களுஞ் செய்துகொண்டு அவள் வருவதற்குள் தங்களருமைப் பெண்மணியை வைத்தி அடித்துவிட்டானென்று சுப்பிரமண்யசிவரிடமும் சர்மாமுதலானவர்கள் சொன்னார்கள். அவர் ஞானியாகையால் அவர்கள் வார்த்தையை நம்பவில்லை. "இருக்கட்டும், மணி என்ன

அடித்தது இப்போ?" என்று தாத்தா கேட்டார். எட்டடித்து ஒன்பதுமடிக்கலாயிற்று" என்றாள் மங்கையர்க்கரசி. "வழக்கப்படி வரும் துரைராஜன் ஏன் இன்னும் வந்தபாடில்லே?" என்றார் தாத்தா. "இப்போதான் வீட்டிற்குப் போனான்; இதோ வந்துவிடுகிறேன் என்றானே!" என்றாள் ஸ்ரீமதி. அந்தப்பயலுக்காளனுப்பு சீக்கிரம் என்றார் தாத்தா சுப்பிரமண்யசிவர். இதோ அனுப்புகிறேன் என்று சர்மா "ஆரடா, அடே! போய் துரைசாமியை அழைத்துவா? வாத்தியார் வந்துவிட்டார் ———" என்று பக்கத்திலிருந்த வண்டிக்கார சொக்கனை யனுப்ப, அவன் ஓடோடியுஞ்சென்று அவனை வீட்டில் காணுமல் எங்கெங்கோ தேடிக் கடைசியில்வந்து, "அந்தப்பையனைக் காணவில்லே." என்றான். "அவனிடம்தான் பிசகிருக்கிறது; சஞ்சலத்துக்குரியவனிடம் இன்று அணுவளவும் பிசகில்லே, 'இனி அநுபவத்தில் தெரியும்" என்று தாத்தா சொல்லி மௌனமாயிருந்தார். "அந்தப் பயல் ஸதா இங்கு வருவதும் குட்டியோடு பேசுவதும், ஆளேக்கண்டு பதுங்குவதும் பலதடவை கண்டிருக்கிறேன்; சரிதான் அந்தப்பயல் விஷமமா? என்று கர்ஜித்தார் சர்மா. உடனே சஞ்சலாக்ஷி, "நம்ம கெட்ட வேளைக்கு அவனைச் சொல்லக்காரியமில்லே: அவன் ஸகவாஸம் இன்றுடன் விட்டொழித்தேன்." என்றாள்.

இராஜசேகரசர்மா: "அடே, சொக்கா! நீ போய் அவனை எங்கிருந்தாலும் சிண்டில் கைபோட்டுக் கொண்டா"

சொக்கன்: "சுவாமி! அப்படியே செய்கிறேன், இதோ போகிறேன்." என்று சொல்லுங்கால்,

சஞ்சலாக்ஷி: "மாமா! அந்தப் பிள்ளையை எதற்காக அழைக்கவேண்டும்; அவனுடைய ஸகவாஸத்தைக் களைவதைக்காட்டிலும் வேறுவித கண்டனை தண்டனைகளெல்லாம் நமக்கும் இழிவைத்தருமல்லவா? உலேவாயை மூடினாலும் ஊர்வாயை மூடுவதன்றோ பிரயாஸம்." என்று சொல்லிச் சொக்கனைப் போகவிடாமல் நிறுத்திவிட்டனன்.

சுப்பிரமண்யசிவர்: "அய்யர்வாள்! குழந்தை சொன்னதேசரி. அந்தப்பயல் புத்தி இப்படியா போய்ச்சேர்ந்தது. நல்லதிருக்கட்டும்., இன்று வாசிக்கவேண்டியதை வாசி, சஞ்சலம்!

சஞ்சலாக்ஷி.—"தாத்தா! தமயந்தியின் கதையில், வடமொழியில் இருந்து தென்மொழியில் மொழிபெயர்த்து எழுதியிருப்பதை

சற்றுக் கேளுங்கள். பிறகு புதுப்பாடம் வாசிக்கிறேன்."

சுப்பிரமண்யசிவர்: "சரி. அப்படியே செய்யம்மா," என, அவள் வாசிக்கத்துடங்கினுள். ஸ்ரீமதி, வஸுமதி, சர்மா எல்லாரும் கதை கேட்டார்கள்.

சஞ்சலாக்ஷி: "அயோத்தியாபுரியில் வாகுகன் என்ற பெயருடன் ருதுபர்ணமகாராஜனுக்கு நல்ல சாரதியொருவனிருக்கிறுன்; அவன் ரூபம் ஒன்றுதவிர மற்ற அங்க அடையாளங்களையும், குணங்களையும் நிதானித்துப்பார்க்குங்கால், நளமகாராஜனென்றே சொல்லலாம் என்ற அந்தணனை நோக்கி மீண்டும் தமயந்தி தேவியானவள் எ, பிராமணுேத்தமா! நீர் எனக்காக மறுபடியும் அயோத்திமாநகர் சென்று, அந்த நகராத்தாசனைக்கண்டு, தமயந்தி தருணிபாவத்தைவிட்டு பால பாவத்தை (வாலைப்பருவம்) க்கொண்டு புனர் விவாகஞ்செய்துகொள்ள விரும்பினமையால், குண்டினபுரத்தில் நாளையதினமே சுவயம்வரநாள் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது; அதற்கு நீர் கூடப்போகலாம்; அந்த நளமகாராஜனுக்கு நேர்ந்த கஷ்டங்களெல்லாம் போதாதென்று தன் இல்லாளை இழக்கவும் காலம் சம்பவித்ததுபோலும். என்று சொல்லி வருமாறு வேண்டிக்கொள்ளலாயினேன் என்ருள்." என்று வாசித்து முடித்தனள்.

அப்பொழுது ஸ்ரீமதி உபாத்தியாயரை நோக்கி, "ஆனலக்காலத்திலேயே ஸ்திரீகட்குப் புனர்விவாகம் ஆசாரணையிலிருந்ததோ?" என்று கேட்க, அவர், "அம்ம! ஸ்திரீகட்குப் புனர்விவாகஞ் செய்யலாம் என்று சித்தாந்தப்படுத்தி எங்குஞ் சொல்லப்படவில்லை; ஆனல் தமயந்தி தருணிபாவத்தை விட்டு பாலபாவமெய்தி சுவயம்வரத்தை கோரியதாய்ச் சொல்லியிருத்தலால் கன்னிப்பருவம் நீங்குமுன் கொழுநனை யிழந்த பெண்கள் புனர்விவாகஞ் செய்துகொள்ளலாமென்றும் மற்றவர்கட்குக்கூடாதென்றும் ஒருவாருயூகித்துக்கொள்ளலாம். இதுவே சாஸ்திராதாரம்." என்று மறுமொழி கூறினர். உடனே சஞ்சலாக்ஷி பெரியவரை நோக்கி "தாத்தா! தமயந்தியானவள் தன் மகிழ்நனை வெளிப்படுத்தும்பொருட்டு புனர்விவாகமென்று சாக்கிட்டந்தணனை மீண்டும் கோசலதேயம் போகவிடுத்தனள். நான் என்ன செய்வேன்——எவ்விதம் மீண்டும் என் கொழுநனை நாடிச்செல்லுவேன்——என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு கண்ணீர்விட்டழு

தாள். விருத்தர் அவளைநோக்கி, "அம்ம, குழந்தை! நீ வியசனப் படவேண்டாம், இனி உனக்கு நல்லகாலம்தான். நீ தந்ததாவனத் துக்குப் போந்தகாலையில் நின் மடியிலிருந்து கீழே விழுந்த கடிதம் இதோ இருக்கிறது பார். அது அதி இரகசியமானது. இப்பொழுது இங்ஙனம் வேற்றுவரில்லாமையால் நீ எங்கட்குத் தெரியுமாறு அதைப் பிரித்து வாசி கேட்போம்" என்று அதி இரகசியம் என்றும், நகரியில் சஞ்சலாக்ஷி பார்த்தறியத்தக்க கடிதம் என்றும் மேல்விலாசம் வரையப்பட்டிருந்த கடிதத்தை எடுத்துத் தந்தனர். அதை ஆவலுடன் அங்நங்கை வாங்கிக் கண்களில் ஒத்திக்கொண்டு பிரித்து வாசிக்கத் தொடங்கினள்:—

"பிராணசகி, சஞ்சலாக்ஷி!

நினக்கு சர்வாபீஷ்டமுண்டாவதாக! பெண்பாலார் தன் கொழுநரிடம் ஒழுகவேண்டிய விதிகளை நீ அறியாதவளன்று. பெண் மதியால் துரைராஜனை முற்றும் நம்பி வார்த்தை பேசினாலும், நீ பின்னிட்டு மோசம்போய் மானத்தை யிழந்து தடமாட்டங்கொள்ள நேரிடும். மனதைப் போனபடிக்கெல்லாம் விட்டுவிடாமல் கடவுள் கொடுத்திருக்கும் விவேகத்தைக்கொண்டு இழுத்துப்பிடித்துக்கொள்ளவேண்டும். எந்தக் காரியத்தையும் நன்றாய் ஆலோசனை செய்து அவசரப்படாமல் மனதார நியாயவழியில் செய்ய முயற்சிசெய்தால் நலம்."

"உலகம் பொல்லாது; சும்மா இருக்கிறவர்களையே சந்தியில் இழுத்துவிடும். சிறிது இடமுங்கொடுத்தால் வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு ஒரு பிடி அவல் அகப்பட்டால்போல்தானாகும்."

"சரீரத்தில் இரத்தத்திமிர் அடங்குமட்டும் அடங்கி வாழுதல் நலம். 'தானடங்கத்தன்குலமடங்க' என்று ஒரு பழமொழியுண்டு. நினக்கு நான் செய்யக்கூடிய உபதேசமிதுவேதான். நீ எங்கு வதிந்தாலும் சரி; என்னுடன்கூடவந்து வாழவேண்டுமென்ற கட்டாயமுமில்லை. அவரவர் பிறந்த வழியைச் சார்ந்தொழுகக் கடமைப்பட்டிருக்க, நீதான் என்ன செய்யலாம்; நான்தான் என்ன செய்யலாம்.

இப்படிக்கு நின் அன்பன்.

வைத்தினாதன்.

இந்தக் கடிதத்தைப் பார்ப்பதற்குமுன் நமது சஞ்சலத்துக்குத் தன் மகிழ்நனுடன் கூடப்போய் வாழ்ந்திருக்கவேண்டுமென்ற எண்ணஞ் சிறிதுமில்லை. கடிதத்தைப் பார்த்த பின் அவள் "ஐயோ, தாத்தா! மகிழ்நனை விட்டுப் பிரிந்திருப்பவர் பெண்பேதையினும் பேதையாவர். துரைராஜன் என் மானத்தை யழிக்கவிருந்தான். அவனை நயமாயும் பயமாயுஞ் சில வார்த்தைகளைச் சொல்லி விரட்டியோட்டினேன். என் மானத்தைக் காப்பாற்றிக்கொண்டேன். கடவுட்செயல்தான். இனி இந்த என்னுடைய சரீரத்தை என் மகிழ்நனிடம் கொண்டுபோய் ஒப்புவிக்கவேண்டியதுதான். அவருக்குரிய இந்த சரீரத்தை விரும்பி அவர் எழுதியிருக்கும் இக்கடிதத்தின் கெம்பீரமான வாசகமும், புத்திமதியும் பட்டும்படாமல் எனக்கிட்டிருக்கும் கட்டளையும் மிகவும் வியக்கத்தக்கதே. இத்தகைய கொழுநனை நான் அடைந்தது என் பாக்கியந்தான். கற்பைச் சோதிப்பான் கருதி கொழுநர் தம் நாயகிகளைப் பலவித இடுக்கண்களைச் செய்வதும் வழக்கந்தான். அவைகளை யெண்ணி மனம் நோவதில் பயன் சிறிதுமில்லை. உத்தமிகள் சிலர் பலவாறான இடுக்கண்கள் அடைந்து சுகப்பட்டிருக்கின்றனர்" என்று சொல்லிக் கடிதத்தைக் கண்ணிலொற்றிக்கொண்டு, "அப்ப! அந்தப் பாவி துரைராஜனுடைய யோக்கியதையை நான் அனுபவத்தால் கண்டுகொண்டேன். நீ பார்த்தமாத்திரத்தில் தெரிந்துகொண்டன்றோ என்னை எச்சரித்திருக்கின்றனை. மனமாகிற குதிரையை விவேகமாகிற கடிவாளத்தினால் பிடித்திழுக்கவா சொல்லியிருக்கின்றனை! உலைவாயை மூடினும் ஊர் வாயை மூட முடியாதுதான்; பெண்கட்குப் பிறந்தகத்தில் ஆயிரங்கோடி திரவிய சம்பத்திருந்தாலும் கூழைக் காய்ச்சிக் குடிக்கும் கொழுநனேயன்றோ சிரேஷ்டம்; நீ என்னைத் தள்ளினும் உன் காலின்கீழிருந்து குற்றேவல் புரிந்து வாழ்வேனேயல்லாது இனி எனக்கிங்கு வேலையில்லையே." என்று கண்ணீர்விட்டபடி தன்னையே கண்டித்துக்கொண்டு "அடி, அம்மா! மாமா! தாத்தா! எல்லாரும் பெரியமனது செய்து என்னை என் புக்ககத்தில் என் அன்புக்குப் பாத்திரனவனுடைய இக்கடிதத்தை வரைந்தஅழகிய கையில் ஒப்புவிக்கவேணுமாறு இங்ஙனம் வேண்டிக்கொள்ளலாயினேன்." என்று சொல்லினள். அம்மட்டில் அன்று கோட்டி கலைந்தது.

IV.

"மாமியார்மெச்சிய மருமகளில்லை; மருமகள்மெச்சிய மாமியாரில்லை என்பது பழமொழி. இவ்வுலகச் சொற்கள் நம்மிடம் உண்மையாய்விட்டன. அம்மாவின் கொடுமைகளையெண்ணி சஞ்சலம் ஊருக்கு வர யோசிக்கிறாளே யல்லாமல் வேறில்லை. ஆயினும் அவள் ஒன்றுமறியாதவளன்று. நான் எழுதி அவளுடைய தலைப்பில் முடிந்துவைத்திருக்கும் கடிதத்தை அவள் பார்த்துதான் இருப்பாள். அதற்கு என்ன விடையளிக்கின்றாள் பார்ப்போம். கற்புடைய பெண்ணாயிருப்பாளாகில் முன் கொடுமைகளை நினையாமலே வந்து சேருவாள்." என்று யோசனை செய்துகொண்டே வைத்தி வழிநெடுகப் போகுங்கால், ஒரு பெரியவர் அவனெதிரில் வருவதைக் கண்டான். அவரைக் கண்டு சாஷ்டாங்கமாய்ப்பணிந்து வணங்கினான். கைகூப்பிக்கொண்டு சற்று நின்றான். "இந்தா இந்த மூலிகையை நன்றாய் மென்று சாப்பிட்டுவிடு" என்றுசொல்லி அவர் அவனுடைய வாயில் ஏதோ ஒரு பச்சிலையைக் கசக்கிப்போட்டார். அவனுமதைச்சாப்பிட்டான். நம்முடைய வீட்டிற்குப்போவோம் வாவென்றார். சரி வருகிறேன் என்று அவர் கூடவே சென்றான். கொஞ்சதூரஞ்சென்றதும் "அப்பா, வைத்தி! உன் கண்ணை சற்று மூடிக்கொள்" என்றார் பெரியவர்: அவனும் கண்ணை மூடிக்கொண்டான். பிறகு கொஞ்சநேரத்திற்கெல்லாம் "கண்ணை விழித்துக்கொண்டு பார்" என்றதும் அவன் தன் கண்களை விழித்துப் பார்க்குங்கால், அவனுடைய ஆனந்தத்திற்களவில்லை. நல்ல வேலைப்பாடுள்ள உன்னதமான ஒரு மாளிகையில் சுவர்ணமயமான பீடத்தில் உட்கார்ந்திருக்கப் பெரியவரைக் கண்டான். தான் அவர் பக்கலில் நின்றவண்ணமிருந்தான். சுற்றிலும்பார்த்தான். அவனுடைய ஆச்சரியத்திற்கும் சந்தோஷத்துக்கும் எல்லையில்லை. அது முதல் நாளுக்குநாள் அவனுடைய ஸ்தூலித்த தேகமும் சிறுகச்சிறுகக் கரைந்து மிதமான ஸ்திதிக்கு வந்துவிட்டது; கருநிறம் மாறி மாநிறமாகி, கொஞ்சநஞ்சமிருந்த துர்க்குணமும் விலகி நற்குணமுள்ள சிறவனுயினன் வைத்தி. சாதுக்களனுக்கிரகித்துக் கொடுக்கும் மூலிகையின் பிரபாவமே பிரபாவம். நிற்க.

"வைத்தினுதன் ஊர் சென்றதுமுதல் நம்ம சஞ்சலாக்ஷி நல்லுணவு அருந்தவுதில்லை; நல்ல உறக்காமில்லை; நல்ல பேச்சுவார்த்தை

யில்லை. ஏதோ முணமுணத்துக்கொண்டு வைத்திமேலேயே நினைவாயிருக்கிறாள். வழக்கப்படி வரும் உபாத்தியாயரிடமும் சாஸ்திர பாடம் கற்றுக்கொள்ளவும் மனமில்லாதவளா யிருக்கிறாள். அவதிப்படாமல் நம்முடைய குழந்தை நம்ம வீட்டிலேயேயிருக்கட்டுமென்றிருந்தோமே! மாயமோ—மருந்தோ— என்னத்தையோ பண்ணிவிட்டானே! பாவி! என்ன செய்வேன்! அண்ணா!" என்றாள் ஞானமதி. "அந்தப் படுபாவிமுண்டையிடம் கொண்டுபோய்க் குழந்தையை ஒப்புவிக்கப் பைத்தியமா பிடித்திருக்கிறது. மாயமோ—மருந்தோ பண்ணுவதைப் பண்ணட்டும்; என் ! வைத்தி இங்கே வந்திருந்தால் அவன் அந்தஸ்து குறைந்துபோகுமோடி, அக்கா!" என்றாள். ஸ்ரீமதி. "பெண்ணைப்பெற்று வாழாமல் வீட்டில் வைத்திருக்கிறுளென்று ஊரார் ஏசுவார்கள்: நன்றாயிராது" என்றார் ராஜசேகர சர்மா.

குட்டியின் மனப்படி இந்த ஒரு முறை அவளை அழைத்துக்கொண்டு நாமெல்லோருமங்கே (வேலூருக்கு) செல்லுவோம். மனதுக்கு சமாதானமில்லாவிட்டால் அவளை மீண்டுமழைத்துவந்துவிடலாம்" என்றார் வாத்தியார்.

"சகுந்தலையை துஷ்யந்தன் பார்த்து "இவளை நான் மணம் புரிந்ததாய் எனக்கு ஞாபகத்துக்கு வரவில்லை; கர்ப்பிணியான இவளை இவளுக்குப் புருஷன் நான்தான் என்பது சந்தேகத்திலிருக்கும்கால், எப்படி அங்கீகரித்துக்கொள்ளுவேன்" என்று நிராகரிக்குங்காலத்தில் கதியற்று அழுதுகொண்டிருந்த அவளைப் பார்த்து ரிஷிகுமாரர்களிலொருவனான சாங்கரவன் என்ன சொன்னான் தெரியுமோ? நீ பதிவிரதை என்பது உண்மையானால் உன் கணவன் வீட்டிலேயே சேடியாயிருந்துதான் காலங்கழிக்கவேண்டும்" என்று சொல்லி, அவளை அங்கேயே விட்டுப்போய்விட்டதாய் என் நினைவிற்கு வருகிறது. அந்தமாதிரி என் கொழுநன் என்னை நிராகரிக்கவில்லை. இக்கடிதத்தை நன்றாய்ப் பாருங்கள். நீங்களெல்லோரும் சேர்ந்து என்ன சொன்னாலும் சரி, எனக்கு இனி இந்த இடம் ஊண் உடையெல்லாம் விஷம்தான். எப்பேர்ப்பட்ட அவதிகட்குள்ளானாலும் சரி, நான் என் மகிழ்நனிடம் போய்ச்சேரவேண்டியதுதான். "அப்பா! நாதா! நீ ஒரு ஆண்டியிடமா சேவைசெய்கிறாய்? அப்படியானால் நானுமவ்வாறு சேவைசெய்கிறேன்; நீ ஆண்டி

யாவையேல், நானுமாண்டிச்சியாகுவேன் என்பது திண்ணம்; இனி என் மனம் நிமிஷமும் நின்னைவிட்டகலாது; அகலாது. "மனதை போனபடிக்கெல்லாம் விடாமலிழுத்துப்பிடித்துக்கொள்ளும்படி கீதா சுடிதத்தில் வரைந்திருக்கிறாய். என் கண்ணே! என்னுடன்கூட வந்து வாழவேண்டுமென்ற கட்டாயமுமில்லையென்றுவெறுப்படைந்து சொன்னாயோ? பிராணநாதா! இத்தகைய சிறந்த விவேகம் உன்னுள்ளத்தில் குடிகொண்டிருப்பதாய் எந்த நிமிஷத்தில் பேதையாம் நானறியுமாறு அறிவை யூட்டினாயோ, அந்த நிமிஷமுதல் நினக்கு நான் அடிமைக்காரிதான்." என்று புலம்பி தரையில் விழுந்து அழுதாள் சஞ்சலம். "ஆண்டிச்சியாவது! ஆண்டியாவது!! என்னத்தையோ பினத்துகிறாளே குட்டி" என்று இராஜசேகரசர்மா சஞ்சலத்தைப் பார்த்து, "அடி அம்ம! அழாதே! இப்போதே வண்டிகட்டச் சொல்லுகிறேன். மத்தியில் என்னத்தையோ சொன்னாயே, அது என்ன? அதனால்தான் பைத்தியமென்று உன் தாயார் சொல்லுகிறாள். அதை விளங்கச்சொல்லு பார்ப்போம்" என, அவள் மாமா நேற்று இரவில் தூக்கமில்லாமல் வெகுநேரமிருந்தேன். கடைசியில் சற்றுக் கண்ணயர்ந்திருப்பேனீ என்றும் தோன்றுகிறது; ஸ்ரீமானை ஒரு ஸாதுவிடம் உங்களுடைய மாப்பிள்ளை தொண்டனாய் விளங்குவதாயும், கடைசியில் அவரைப்போல சன்னியாசம் வாங்கிக் கொண்டு ஆண்டியாயிருக்கப்போவதாயும் கனவுகண்டேன். மனந் தடுமாடுகிறது: வேறொன்றுமில்லை." என்று தழுதழுத்த வார்த்தை பேசிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

சுப்பிரமணியசிவர்:—"இனி தாமதிப்பதில் காரியமில்லை. குட்டியுடன் நாமெல்லாரும் பிரயாணப்பட்டுப் போகவேண்டியதுதான். ஈசுவரானுக்கிரகம் ஏற்படும் என்றே தோற்றுகிறது. பாதகம் வரமாட்டாது. இன்று மத்தியானம் பதினைந்து நாழிகை நல்ல முகூர்த்தகாலம் பிரயாணத்துக்கு" என்று கண்டித்துச் சொன்னார்.

இராஜசேகர சர்மாவும் பிரயாணத்துக்கு சன்னத்தம்பண்ணினார். நல்ல காளைகள் பூட்டிய பொட்டிவண்டி ஒன்று கட்டி வாயிலில் நிறுத்தப்பட்டது. அதில் வஸுமதி, ஸ்ரீமதி, சர்மா, சிவர், நமது கதாநாயகி சஞ்சலாக்ஷி எல்லாரும் ஏறி உட்கார்ந்தார்கள். வண்டி மாயமாய்ப் பறந்தது. ஸாயரக்ஷை சூரியன் மலைவாயில் விழு

ந்தனன்; சந்திரனுதயமாயினன்; போய்ச் சேர்ந்தனர் இளையனூர் வேலூர். அங்கு வீட்டில் வைத்தியைக் காணோம். "சஞ்சலத்தை அழைக்கவந்த வைத்தி எங்கு போனான்?" என்றாள் சம்மந்தியம்மாள் (வைத்தி தாயார்). எல்லாரும் மனம் குழம்பினார்கள். சுப்பிரமணியசிவர்மட்டில் மனம் கலங்காமலிருந்தார்; சஞ்சலாக்ஷியின் ஜீவனத்தைப்பற்றி எண்ணிப்பார்த்தார்; ஏதோ விசேஷமிருக்கிறது; இரண்டு நாழியில் எல்லாம் சொல்லுகிறேன், என்று எழுந்து கை கால் கழுவிச் சுத்திசெய்துகொண்டு விபூதிதாரணம் பண்ணிக்கொண்டு சந்தியாவந்தனம் முடித்த பிறகு, கண்களை மூடியபடி தியானத்திலிருந்தனர். சர்மாவுக்கு மேலே ஒன்றுந் தோன்றவில்லை. குட்டியோ கண்ணீர் விட்டபடிக்கிருக்கின்றாள். மற்ற பேர்களும் துக்கப்பட்டுக்கொண்டு சிவர் முகத்தை நோக்கியபடிக்கிருந்தார்கள்.

"இது மகாபுருஷாள் வாஸஞ் செய்யும்படியான திருக்கழுக்குன்றம் என்று சொல்லப்பட்ட மலைநாடு. தபஸ்விகள் தபஸ் ஸித்தி பெறுவதற்கு இங்கே வாஸஞ்செய்வதுண்டு. மேலும் இங்கே ஸனத்குமாரருக்கு உபதேசஞ்செய்த குருநாதனும், தகப்பன்சாமி என்று பெயர்பெற்று பரமசிவமூர்த்திக்கே உபதேசஞ்செய்யவந்த குமாரனும், தேவசேனாபதியுமான சுப்பிரமணியர் வாஸஞ்செய்வதால் இதற்கு இளையனூர்வேலூர் என்ற பெயரமைந்தது. இம்மலைச்சாரலுக்குப் பக்கத்தில் சென்றால் எல்லாம் வெளியாகும்" என்றார் சுப்பிரமணியசிவர். அப்படியே செய்வோமென்றெழுந்தார் எல்லோரும்; அடிவாரங்கிட்டிவந்தனர். ஒரு சிறுவன், வயது 24-25 இருக்கலாம். மாநிறமேனியன்; அருள்நோக்குள்ளவன், ஒஞ்சட்டையான சரீரத்துடன் கூடியவன், அங்கு போந்தனன். இவர்கள் வருங்குறிப்பை எளிதிலறிந்துகொண்டான். "எல்லாம் சுவாமிகள் சன்னிதானஞ் சென்று பார்த்துக்கொள்ளுவோமென்றெண்ணி, ஒரு மூலிகையின், சூர்ணத்தை வந்தவர்கள்மேற் றூவினான். உடனே எல்லாரும் ஒரு விநோதமான மாளிகையிலிருக்கக்கண்டாச்சரியங்கொண்டார்கள். காவி வஸ்த்ரந்தரித்த ஒரு சன்னியாசி அங்கே வீற்றிருக்கக்கண்டார்கள். பக்கலில் அவர்முன் மேற்கூறிய பையன் அஞ்சலி செய்து நிற்கக்கண்டார்கள். ஆச்சரியங்கொண்டு எல்லாரும் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தார்கள். சஞ்சலாக்ஷியும் கீழே விழுந்து பணிந்தெழுந்து கைகூப்பி நின்றனள். அப்பொழுது சுவாமிகள் அந்த

நங்கையை நோக்கி, "அடி பெண்ணே! உன்னுடைய துக்கம் இன்றோடொழிந்தது. இனி உன் புருஷனுடன் கூடி வாழ்ந்து இந்த நிலைக்கு மீண்டும் வருவாய். நின் மனம் சற்று கலங்கினும் துரைராஜனிடம் நாடாமல் உறுதியாயிருந்தமையால் மீண்டும் நின் புருஷனைக் காணப்பெற்றனை. நின் எண்ணப்படி அவன் சரீரத்திலிருந்த கெட்ட நீர் வடிந்து அவனை மாநிறமான அழகிய மேனியனாக பண்ணினேன். இதோ பார் அவனை" என்று தன் பக்கலிலிருந்த வைத்தினாதன் கையைப்பற்றி "அப்பா, குழந்தாய்! வைத்திநாதா! சஞ்சலாக்ஷி நின்னைக் காணாது வருந்திக்கொண்டிருக்கின்றாள்: அவளுடன் கூடி நீ, சிலகாலம் வாழ்ந்திருந்து மீண்டுமிந்நிலைக்கே வருவாயாக." வென்று அவள் கையிலொப்புவித்து இருவரையும் கண்குளிரக் கடாக்ஷித்து "நீவிரிருவரும் நீடூழி வாழ்வீராக" என்று வாழ்த்தி, மற்றவர்களையும் அனுக்கிரகித்தனர்.

"அடே சர்மா!" என்று இராஜசேகரசர்மாவைப் பக்கலிலழைத்தனர் சுவாமிகள். அவரும் சுவாமிகளபக்கத்தில் கைகூப்பியபடி வந்து "சுவாமி!" என்று நின்றனர். "இதோ பார் உங்களூர் துரைராஜன், சிறைராஜனாய் விளங்குகின்றான்." என்றார். "இவனை இம்மாதிரி முண்டனஞ்செய்ததில் எனக்குச்சந்தோஷமா? பிறனில் விழையும் அவனுடைய எண்ணத்தைக் களையத்தானே விருப்புற்றேன். சுவாமி!" என்று சர்மா விடைபகன்றனர். "நின்மேல் குற்றங்கூறினேனில்லை. பிறனில் விழையுந் துரோகிகட்கே இவ்வித தண்டனை" என்று நீங்கள் எல்லோரும் அறிந்துகொள்ளும்பொருட்டு இங்ஙனம் இவனை முண்டனமுதலான அவக்கோலமெல்லாஞ் செய்து காண்பிவிக்கலாயிற்று. மனதை யடக்கியாளாமல் கொஞ்சம் சலிக்கவிட்டபடியால் சஞ்சலாக்ஷிக்குச் சிறிது அவத்தையைக் காட்டினாலும், சலித்த மனம் திரும்ப ஊக்கங்கொண்டு கற்பிலேயே நின்றபடியால், அவள் மீண்டும் அவளிஷ்டப்படி தன் கொழுநனை அவளுடைய சாயலைப்போலவே அழகுவாய்ந்த சிறுவனாகவமைத்து கொள்ளப்பெற்றனள்." என்று அருள்வாக்காய் மொழிந்தனர்.

அப்பொழுது வைத்தினாதன் சுவாமிகளை நோக்கி, "துரியாசிரமிகட்குகந்த சமாதி நிலையை யுணர்த்துவதாய் நேற்று உத்தரவாயிற்றே, பிரபோ!" என்று வேண்ட அவர், "அப்பா! குழந்தாய்! நீ வருந்தாதே. இதோ கை கூப்பிக்கொண்டிருக்கும் என் பக்தன்

சுப்பிரமண்யசிவர் அக்நிலையை உன் பக்குவகாலமறிந்துணர்த்தக்கடவர். அவரையே நீயும், உன் தர்மபத்நியும் ஸத்குருவாயடையக்கடவீர்களென்று மறைந்தனர். விநோதமான மாளிகையும் மறைந்தது. எல்லாரும் வைத்திநாதனுடைய கிரகத்திலிருக்கக் கண்டார்கள். ஆச்சரியமும் மகிழ்ச்சியுங்கொண்டார்கள். சித்தியடைந்த சித்தபுருஷர்களாலாகாததொன்றுண்டோ? அன்றுமுதல் வைத்தியும் சஞ்சலமும் மனமொத்துக் கூடி வாழ்ந்த விமரிசையைச் சொல்லப்புகின் விரியும். அவர்களைப்போல் இன்பமனுபவித்தவர்களில்லை என்றே சொல்லவேண்டும். இராஜசேகரசர்மாவின் வேண்டுதல்படி வைத்தி தன்னூரிலும் நகரியிலும் சஞ்சலாக்ஷியுடன் இன்பமாய்க்காலங்கழித்துவந்தான். செல்வமும், சரீரமும் நிலையாமையென்று தர்மமார்க்கத்திலேயே தனங்களை இந்த இளந்தம்பதிகள் செலவு செய்து வந்தார்கள். சுப்பிரமணியசிவரை குருநாதராய்ப் பூஜித்து அவர் சொல்படி எந்தக் காரியத்தையும் செய்வார்கள். வைத்தியும் சஞ்சலமும் இளம்வயதும் தக்க பருவமுமுள்ளவர்களானாலும், வீண் காலமாய்ப்போக்காமல், ஸத்விஷயத்திலேயேமனஞ்செலுத்தினவர்களாய்த் தங்களுடைய சிருங்கார சேஷ்டாகாலங்களிலேயும் பகவந்நாமோச்சாரணபரர்களாய் சுகமே காலங்கழித்துவந்தனர்.

டி. எஸ். சுப்பராமய்யர்.





திருவாவணக்கர்மான்மியம்.

திருமால் வழிபட்டது.

ஸ்ரீராமன், தேவர்களுக்கு இடையூறு செய்து வந்த இராவணாதிகளை வதஞ் செய்து, அயோத்தியடைந்து, தன்னுடைய அரசாட்சியை யெய்தியபின்னர், விபீஷணன் தன் ஊர்க்குமீண்டும் ஏக விடை கேட்டனன். அப்பொழுது, இராமன், அவனுக்கு ஒரு திருமாலின் விக்கிரகத்தையும் விமானத்தையும் உவப்புடன் அளிக்க, விபீஷணன் அவைகளை யேற்றுக்கொண்டு, அயோத்தியை நீங்கி இலங்கை சேரும்படி தன் சேனையோடும் புறப்பட்டனன். மார்க்கத்திலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் தரிசித்து, அநேக கழனிகளையும், மலைக

ளையும், காடுகளையும் தாண்டி, வெப்பமிகுந்த ஒரு பாலை வனத்தை யடைந்தான். அதன் கொடுமை சொல்லமுடியாதது. பூமியானது வாய்திறந்தாற்போல வெடித்து, வெடித்த வாய்களின்வழியே தீத்திரள் பாதலஞ் சென்றது. அங்குள்ள சர்ப்பங்களும் துவண்டன. மேகங்கள் அதன் வெப்பத்திற்குப் பயந்து நேரே இயங்கமாட்டா. அந்தப் பாலைவனம், தன்னிடத்துத் தழலையன்றி வேறொன்றையும் காட்டாது. அத்தன்மையதான பாலைவனத்தில், விபீஷணன், தன் சேனையோடு பெருந்துயருழந்து, அதைத் தாண்டிச்செல்லுகையில், காவிரியானது விளங்குவதைக் கண்டான். நரகத்தில் உழன்றவன் சுவர்க்கத்தைக் கண்டாற்போலவும், ஈசுவரசாபத்தை யடைந்து வருந்திய ஒருவன், அச்சாபம் நீங்கித் திருவருளைப்பெற்றாற்போலவும், காவிரியை நெருங்கிச் சென்றனன். அந்நதியில் தவழ்ந்துவந்த தென்றலானது வீச, தாழ்ந்த கிளைகளையுடைய குளிர்ச்சி மிக்க வொரு சோலையில், கடல்போலச் சத்திக்கும் தன் சேனையோடு சென்று தங்கி, இளைப்பாறினன். சிரமபரிகாரஞ் செய்துகொண்டபிறகு, காவிரியை யடைந்து, அதில் ஸ்நானஞ் செய்து விபூதியையும் உருத்திராட்சத்தையும் மெய்யிலணிந்து, திருமாலின் பூசையைச்செய்தான். பூசை முடிந்தபின் திருமாலை விமானத்தில் எழுந்தருளச்செய்து, மணல்வெளியில் வைத்துவிட்டு, அறுசுவை அடிசிலையும் உண்டபிறகு, இலங்காபுரிக்குப்போக நினைத்து, எழுந்து விமானத்தை யெடுக்க, அது வராமையின் திரும்ப வலிந்து எடுத்தனன். அது கிளம்பாமையின், நிலத்தில் பதிந்து ஊன்றியதென்றறிந்து மிகுந்த வருத்தத்தையடைந்தான். அவன் அங்குக் கவலையுற்றிருந்தபொழுது, உலகங்களையெல்லாம் உண்டவனாகிய திருமால், "விபீஷணனே! கேள்; நீ நெஞ்சிற் சபலங்கொண்டு வருந்தாதே; இந்த இடம் ஞான

க்ஷேத்திரமென்று சொல்லப்படும். அகிலலோகங்களையும் இரட்சிப்பவளாகிய அம்பிகை அருந்தவஞ்செய்து, ஒப்பற்ற மெய்ஞ்ஞானத்தைப் பரமசிவன் உபதேசிக்கப்பெற்று ஆத்துமாக்களுக்குச் சகல பாவங்களையும் போக்கி, பல வரங்களையும் அளித்து எழுந்தருளியிருப்பது இத்தலம். சம்புமாமுனி, பராசரரிஷி, நான்முகன், அகத்தியமுனி, சூரியன், சந்திரன், இராமன், இந்திரன், அக்கினிதேவன், என்று சொல்லிய இவர்களுக்கெல்லாம் ஈசனுடைய அருள் சுரக்கும்படி செய்தது இத்தலமே. மூர்த்தியின் மேன்மையுடையதும், தீர்த்த மகத்துவமுடையதும் இந்தத் தலமே. பரமசிவன் எழுந்தருளியிருக்கிற அனேக தலங்களுள்ளும் மேம்பட்டு விளங்குவதும் இந்த ஸ்தலமேயாம். வேதத்தின் மேற்பட்ட நூலும், காவிரிக்கு மேற்பட்ட நதியும், ஞானக்ஷேத்திரத்திற்கு மேற்பட்ட ஸ்தலமும், அகிலாண்டநாயகியின் மேம்பட்ட சத்தியும், நாவல் விருக்ஷத்தின் நீழலில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் மேம்பட்ட மூர்த்தியுமில்லை. மற்றை ஸ்தலங்களில் சிவபிரான் தம்முடைய அம்சத்தினலே எழுந்தருளியிருந்து பல வரங்களையும் வழங்குவர். இந்த க்ஷேத்திரத்திலோ, தாம் பூர்ணமாக எழுந்தருளியிருந்து சிவஞானத்தையும் மற்றைப் பொருளையும் வழங்குவர். அந்த முறைமைக்கேற்ப, யானும் மற்றைய சிவஸ்தலங்களில் என்னுடைய அம்சத்தினலே வழிபடுவேன்; இத்தலத்திலோ என்னுடைய பூர்ணம்சத்தோடிருந்து ஜம்புநாதரை வழிபட உறுதிகொண்டேன். மகாலட்சுமியும் பரமசிவனுடைய கருணையைக் கொள்ளைகொள்ளும்படி இத்தலத்தில் பக்தியோடு தவஞ்செய்துகொண்டிருக்கின்றுள். நான் இங்கு வாழ்தலேயன்றி இலங்கையிற் செல்லேன்; ஜம்புநாதருடைய சந்நிதியில் இலக்குமியை நடனஞ்செய்வித்து, அவரது திருவருளைப் பெரிதுமடை

யும்படி என் மனம் விரும்புகின்றது. திருவானவள் நாடகஞ்செய்யும் இடத்தில் ஸ்ரீரங்கமென்று ஓர் தலம் உண்டாகும். அதில் எனக்கு ஸ்ரீரங்கநாதனென்னும் பெயர் வழங்கும். அந்த ஸ்தலத்தில் எனக்குப் பூசனையும் திருவிழாவும் பிரபலமாக நடைபெறும். வருஷந்தோறும் நீ இவ்விடத்தையடைந்து, என்னை யாராதித்து, அமுதலிங்கத்தையும் பக்தியோடு தரிசித்துத்தொழுது மீளுவா" யென்று கூறித் திருமால் மறைய, வீபீஷணன், கனவை நனவெனக் கொண்டு, அன்போடு ஆனைக்கா அரனைப் போற்றி, இலங்கையை யடைந்து வாழ்ந்தனன். ஞான க்ஷேத்திரத்தில் வசிப்பதையே ஆதரித்த திருமால், நாவலின்கீழ் எழுந்தருளிய நாயகரை விரும்பிப்பூசித்து, தன் ஆருயிர்க்காதலியாகிய திருமகளை நடனஞ்செய்வித்தான். திருமகள் ஆடிய நடனத்தைப்பார்த்து, சிவபெருமான், சந்திரனைத் தரித்த ஜடாமகுடத்தோடு எதிர்தோன்றி, வேண்டும் வரங்களைக் கேட்டுக்கொள்ளும்படி சொல்ல, மாதவன் இறைஞ்சி வணங்கி, "சடைமுடியையுடைய வள்ளலே! யான் நாள்தோறு முன்னைத் தரிசித்து என்னுடைய வல்வினையையெல்லாம் போக்கவேண்டும், யாவரும் என்னிடத்துப் பல வரங்களைப் பெறுதல்வேண்டும்; திருவிழாமுதலிய சிறப்புகளெல்லாம் எனக்கு இங்குக் குறைவுபடாது பெருகிவளர்தல்வேண்டும்; உன்னைத் தொழாதவரிடத்துச் சேராத திருமகள் நடனத்தைச்செய்த இந்த க்ஷேத்திரமானது, ஸ்ரீரங்கமென்று சிறத்தல்வேண்டும்" என்று வேண்ட, பரமசிவன், 'பெறுக' வென்று அருள்செய்தனர். மாயவன் சம்புநாதருடைய அருளைப்பெற்று ஸ்ரீரங்கநகரத்தைத் தேவர்களும் விரும்பத்தக்கதாகச் செய்துகொண்டு யாவரும் இன்பமெய்தும்படி அங்கே வசித்தனன்.

சோழராஜன் ஆராதித்தது.

காவிரிநாடானது மற்றை நாடுகளுக்கு ஓர் அணியாக

விளங்குதல்போல, உறையூரானது மற்றை நகர்களுக்கெல்லாம் ஓர் அணியாக விளங்குவது. அந்நகரின்கண் சோழர்களுள் ஒருவன் அரசுபுரிந்துவந்தான். அவன் பகைவரை வென்று மிக்க புகழை ஈட்டுதலேயன்றி, ஆணவமாகிய பகைகளை வென்று, ஞானமாகிய பொருளையும் ஈட்டி, ஈசனே புகலிடம் என்னும் உறுதிகொண்டு, சிவதருமங்களைப் பரிபாலித்துவந்தான். நிசுளாபுரியென்று சொல்லப்பட்டதான உறையூர்முதலாக, கணணுதற்பிரான் எழுந்தருளிய தலங்கள்தோறும் நித்திய நைமித்திய பூசைகளைக் குறைவறச் செய்துவருகின்றகாலத்தில், பனிப்பருவம்நீங்கி இளவேனிற்பருவம் தொடங்கியது. அறிஞர்களை யடுத்தவர்களும் அந்த அறிஞர்களைப்போலவே உயிர்களுக்கு இதத்தைச்செய்வார்கள்; அதுபோலவே, அகத்தியமுனிவர் வசிக்கின்ற பொதியமலையினின்றும் வருகின்ற தென்றலும், குளிர்ச்சியும் நறுமணமும் தழுவி யாவரும்விரும்பும்படி மெல்லென வீசியது. குளம், பொய்கை, ஓடை, எங்கிரவாவி முதலியவைகளில் நீர் சுருங்கி பல மலர் பூத்து, நீர்வாழ்பறவைகளின் கூட்டங்கள் பலசெறிந்து, ஒளிசிறந்தன. நீரானது, மெய்யடியாருடைய உள்ளம்போல மிகத்தெளிந்து, ஒருபுடை அருகி ஒழுகியது. வெண்மணற்குன்றமும் விசாலமான மணற்பரப்பும் மரநிழல்களோடு அழகு மிகுந்தன. தேசத்திலுள்ளவர்களெல்லாம் சோலைகளிற் சென்று நறுமணங்கமழும் தென்றற்காற்றை யேற்றும் காவிரியாற்றில் புனலாடியும், வெப்பத்தைப் போக்கும்பொருட்டு நகர்ப்புறங்களில் வசிப்பாராயினர். பல இரத்தினாபரணங்களும், பூம்பட்டாடைகளும் சந்தனமும், தண்பனிநீரும், பொற்பொடியும், குளிர்ச்சியாகிய மதுவும், உண்டிவகைகளும், சேடியர் வேறு வேறு ஏந்தி இடந்தொறுஞ் சென்றார்கள். ஆடவரும் மாதர்களும் சோலைகளில் புக்கு

ஆடினர். பெண்கள் பலவிடத்துஞ்சென்று மலர் கொய்த னர். அன்புடையவர்களாகிய ஆடவர்களும் மங்கையர்களும் காவிரி நதியுளிறங்கி நீர்விளையாடலைச் செய்து, கரையேறி, ஆடையுடுத்து, ஆபரணங்களையணிந்து, சுவையுள்ள உணவுகளைப் புசித்து, கூடிக்களித்து மகிழ்ந்து, வேனிலின் வெப்பத்தைப் போக்கினர். அப்படிப்பட்டகாலத்தில் உறையூரிலிருந்து அரசுபுரிந்தவனாகிய சோழவரசனும், இறைவருடைய திருவுருவங்களில் வெப்பம் உறைக்காதபடி சிறப்புச்செய்ய நினைத்தான். ஞானக்ஷேத்திரத்திலிருந்த ஜம்புநாதருடைய திருவுருவத்தில், வெப்பகற்றும்பொருட்டும் பலபொருள்களைத் தன் வேலைக்காரர்களிடம் அனுப்பித் தன் மனையாளோடு தானும் அங்கே செல்லும்படி புறப்பட்டனன். அவன் தன் மனைவியின் மார்பில் கிடந்து பிரகாசித்த ஒரு முத்தாரத்தைக்கண்டு திரிபுரங்களை நீறாக்கிய அண்ணலார்க்கு இதைச் சாத்துவேன் என நினைந்து, காவிரியையடுத்துப் புனல் விளையாடிக் கரையேறினன். நீராடுகையில் அரசன் மனைவி யணிந்திருந்த ஆரத்தைக் காவிரியாற்றுநீர் ஈர்த்துக்கொண்டுபோய்விட்டது. அதனையரசனறிந்து, "நின்மலனே! இந்த மணியாரத்தை நினக்குச் சாத்த நினைந்தேன். அறியாமையால் காவிரி நீத்தத்தில் போக்கினேன். அது உலகெலாம் விலைபெறத்தக்கது. அதற்கு ஒப்பானது உலகத்தில் வேறு இல்லை. அடியேன் அதைக் காணாமற்போக்கிய பெரும்பிழையினின்றும் அடியேனைக் காத்தருளுவையேல் அதை நினது அழகிய திருமேனியில் அணிந்துகொள்க" என்று மதிமயங்கிக் கூறி, மனங்கரைந்து, நித்தியக்கடன்களை முடித்துக் காவிரியினின்றும் புறப்பட்டு, அரசர்களும் அமைச்சர்களும், மருங்குள்ளார்பலரும்நெருங்க ஞானக்ஷேத்திரத்தையடைந்து அகிலகாரணர் வேலையாட்களுக்கு விபூதி யளித்துக் கட்டு

வித்த திருநீற்றுத்திருமதிலை முன்னே வணங்கி, கோபுர வாயிலைக் கடந்து, நந்தியின் பக்கத்தையடுத்து அஷ்டாங்க பஞ்சாங்கமாக வணங்கி, எல்லாப்பிராகாரங்களையும் பிரதட்சிணம் செய்து உள்ளே சென்று, தரிசித்தனன். அப்பொழுது, பரிசனங்கள் முன்னரே கொணர்ந்த திருமஞ்சனக்குடத்தை வாங்கிப் பூஜகர் அபிஷேகஞ்செய்தனர். அடியார்க்கு எளியராகிய அமுதநாயகருடைய திருவருளால், அந்த ஆரமானது, திருமஞ்சனக்குடத்துட்புகுந்து அபிஷேகஞ்செய்யும்போது, தீர்த்தத்தோடு அவருடைய திருமுடியில் வீழ்ந்தது. அபிஷேகம் செய்த அந்த ஆதிசைவர்கள் உவகையுற்றனர். திருவாபரணங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக அந்த ஆரம் விளங்கியதை அரசன் கண்டு உற்றுநோக்கி,

"சம்பு மூலத்தின் வீற்றிருந் தருளிய தலைவ
வெம்பி ரானின தருளெனக் கிருந்தவா றென்னே
வம்பு நீணதி கெடுத்தமா ணாரநின் முடிமே
உம்ப ராருநன் றதிசய முறவணிந் தனையே."

என்று, துதித்தனன். அங்குச் சூழ்ந்தவர்களனைவருங் கண்டு அதிசயித்தார்கள். அரசனுடையபுகழானது இன்றைக்கும் உலகத்தில் நிலைபெற்று விளங்குகின்றது. அவன் ஏகநாயகனுடைய திருவருளுக்குப்பாத்திரனாகி அகிலாண்டநாயகியையும் வணங்கித் திருமதில்களையெல்லாம் வலமாகச் சூழ்ந்து சென்று, பொன்னுலகத்துக்கொப்பான தன்னுடைய நகரையடைந்து சுகமாக வாழ்ந்தனன்.

ஞானக்ஷேத்திரத்தின் வடமேற்குத் திசையில் பதுமகுண்டலி என்னும் தீர்த்தத்தையுடைய சுவேதகிரியென்று ஒரு மலையுண்டு. சந்தனம், தேக்கு, அகில், அசோகு, சண்பகம்முதலாகிய பலவகைவிருக்ஷங்கள் நெருங்கிய காடுகள் அடர்ந்து, யானை, புலி, ஸிம்மம், யாளி, கரடி, பன்றி, ஆமா முதலிய மிருகங்கள் திரளாக அங்கே வசித்தன.

கஜாரணியமானது.

அப்படிப்பட்ட காட்டில் ஒரு மதயானையானது அம்மலைக்குகையில் வசித்தது. முன்னை நல்வினைப் பயன் வந்து சேரும் காலம் அடுக்க, அம்மலைக்குகையைவிட்டு, ஆகாரத்தைத் தேடுவதற்குச்சென்ற அது, கொள்ளிடத்தைக் கடந்து ஞானபூமியையடைந்தது. அந்த எல்லைக்குள் சென்றவளவில் அதற்கு மெய்யறிவு உதிப்ப, இரை தேடுகிற எண்ணம் நீங்கி, அங்குள்ள சோலையில் விரைந்து செல்ல, நாவல்மரத்தின் நீழலில் அமுதலிங்கத்தைத் தரிசித்தது. தீவினை நீங்கப்பெற்றமையால், பசித்தகன்று தாயை நாடிச் செல்வதுபோல, அன்போடு மிக விரைந்துசென்றது. சரீரம் நடுங்க, கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் சொரிய, துதிக்கையைத் தூக்கி காலை வளைத்து மண்ணிலே விழுந்து, ஜம்புநாதருடைய திருவடிகளில் வணங்கி யெழுந்து, வலம்வந்து கூத்தாடி, மேகங்களெல்லாம் அதிர்ந்து உதிரும்படி சத்தித்து, அன்பு கரைகடந்து பெருக, பின் வருமாறு சிந்திக்கத்தொடங்கியது.

"பண்டைவல் வினையின் றிருக்கினு லுடலம்
பற்பல வெடுத்திது காறு
மண்டிய துயரி னழுந்திநின் றழிந்தா
மற்றுமுன் செய்தவம் யாதோ
தொண்டுகொண் டருளு மமுதநா யகனைத்
துணையிலா வெமதுயிர்த் துணையை
யண்டருக் கரிய வமரனை நாவ
லணிநிழ லெளிவாக் கண்டாம்."

"இனி இதற்குரிய பூசைகளைச்செய்து இருள்பொருந்திய மலவலியை வேரோடுங் கெடுத்தும் பேரின்பமுத்தியைப் பொருந்துவதே கடன்" என்று கருதி மனங்கனிந்துருக, பல தீர்த்தங்களிலும் சென்று நீராடிக் கரையேறியது. தன்னுடைய துதிக்கையில் கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ,

நீர்ப்பூ முதலிய நால்வகை மலரும் பறித்து, நாவல்விரு க்ஷத்தின் பக்கத்தே வைத்து, அமுதேசருடைய சன்னி தியில் கிடந்த சருகு, குப்பைகளைத் தழையைக்கொண்டு நீக்கி, துவாரம்பொருந்திய துதிக்கையில் நிரப்பிக்கொண ர்ந்த காவிரி தீர்த்தத்தை, முன்பு அன்னமறியாத் திருமு டியின்மேலே அபிஷேகம்செய்து, தான் தேடிக்கொணர்ந்த பரிசுத்தம்பொருந்திய நானாவித மலர்களையும் அன்போடு, அமுதேசருடைய திவ்விய திருமுடியில் சாத்தி, தீங்கனி யையும் காய்களையும் எதிர்வைத்து நிவேதித்து, தன்னாலிய ன்ற பணிகளைச் செய்து; நீங்காத மெய்யன்பினோடு நின்று துதிகளைச் செய்து, தியானித்து வணங்கி, சிவபிரானெழுந் தருளிய இத்தலத்தில் வசித்து ஜலமலம் விடுத்தால் மிக்க சிவாபராதம் நேருமென நினைத்து, அவ்விடம்விட்டு அரி தில் பிரிந்து, தன்னுடைய வனத்தையடைந்தது. இந்தப் படி யானை பூசித்துவருகையில், முன்னரே அங்கு உதித்து வாயினால் நூலிழைத்திழைத்துத்தங்குவதாகிய ஒருசிலம்பி இந்த வெண்ணாவல்விருட்சத்தைக்கண்டு அதில் சார்ந்தது. முன்செய்த தவப்பயனாலே அந்நாவல்மரத்தின் கிளையிலே தனக்கு இருப்பிடத்தையுண்டாக்க முயன்று, பிரகாசம் பொருந்திய நூலையிழைத்து மேலும்கீழுமாக ஓடி வளைந்து கொண்டிருக்கிறகாலத்து, சிவபெருமானுடைய சன்னிதி யைக் குறுகியது. தேவர்க்கும் அரிய பெருமானை எதிர் கண்டதும், சூரியனைக் கண்ட கண்ணிருள்போல மலம் ஒழிய, நல்லறிவுதித்துத் தொழுது "தேவர்க்கும் அரியான் காட்சிகொடுத்தது என்ன வியப்பு" என்று கூறி, உள்ளத் தில் மிக்க அன்புமிகுதலால் "கண்ணுதற்பிரானைப் பிரியா மல் வழிபாடுசெய்தற்கு வேண்டும்பொருள்கள் முட்டுப்பா டின்றிக் கிடைக்கும்படி வேந்தனாய்ப்பிறந்திலேனே" என்று வருந்தி, மனந்தளராது நூலினாலே ஆலயம் செய்யத் துணி

ந்து, ஆகாயத்தை யளாவும்படியான கோயிலை, மண்டபம், கோபுரம், பிராகாரம், மதில்கள்முதலிய உறுப்புக்களோடு வாய்நூலினாலே பூர்த்திசெய்தது. சந்திரசேகரராகிய சிவ பெருமான் அன்புமிக்க சிலந்தியின் வாய்நூலினால் செய் யப்பட்ட சிறிய கோயிலைப் பெருங்கோயிலாகக்கொண்டரு ளினார்.

"ஊதவுகு சிறுநூலி னொருகோயில் வெண்ணாவற்
சீதநிழ லமர்ந்தபிரான் றிருக்கோயி லெனக்கொண்டா
ராதலினெவ் வுயிரெதனை யளிப்பினுமன் பொன்றுளதேற்
சாதல்பிறப் பினையறுக்குந் தவமாக முடியுமே."

"புல்லியமெல் லுடற்சிலம்பி புனிதர்மகிழ் திருக்கோயின்
மெல்லிழையி னனிவருந்தி மிகவியற்றுந் திறமறிந்து
நல்லவுடல் பொருளாதி நன்குடைய சிலரன்னோ
வொல்லுநெறி யாற்பணிசெய் தொழுகாமைக் கெவன்செய்கேன்."

தன் வாய்ச் சிறுநூல்கொண்டு திருக்கோயில்செய்தமைத்த சிலம்பியானது, அந்த நாவல்மரத்தில் வசித்தல் குற்ற மென்றுகொண்டு முன்பு தான் வசித்திருந்த மரத்தையே அடைந்து வசித்திருந்தது. மற்றைநாள் காலையில் யானை யானது வந்து, காவிரியில் புனலாடி, பலமலர்களையும் காய்கனிகளையும் கொண்டு புகுந்து, நூற்கோயில் சூழ்ந்தி ருப்பதைக்கண்டு, "சிவபெருமான் எழுந்தருளிய இவ் விடமெல்லாம் இது சூழ்ந்துறைந்தது யாதுகொல்லோ; அடியார்கள் இந்தச் சிலம்பிநூல் சூழ்ந்தமலரையும் பறித் துச் சாத்தார்களே; அந்தச் சிலந்தியை நான் கொல்லு வேன்" என நிச்சயித்து, தன் கையில் கொணர்ந்திருந்த மலர்முதலிய பொருள்களை யொருபால் வைத்து, பொழில் முழுதும் தேடியும் சிலம்பி கண்களுக்குப் புலப்படாமை யால், ஜம்புலிங்கத்தின் சன்னிதியைக் குறுகி, நூற்கோயிலை யெல்லாம் சிதைத்து, அவ்விடமெல்லாம் புனிதமாக்கி,

சிலம்பிநூலைத் தொட்ட அசுத்தத்தைப் போக்கிக்கொள்ளுமாறு மீட்டும் நீராடி, வெண்ணாவல்மூலத்தை யடைந்து, முன்போலப் பூசித்துத் தன்னுடைய இருப்பிடத்தைச் சேர்ந்தது. ஒப்பற்ற சிலம்பியும், தான் நூலால் செய்த கோயின்கண்ணெழுந்தருளிய கருணையங்கடலாகிய பரம சிவனுடைய திருவடிகளை வணங்கும்படி புகுந்தது. அந்த ஆலயம் அழிந்தமை யறிந்து, யாவர் இங்ஙனம் செய்தவர் என்று, மனம் சுழன்று கீழே விழும்; திரும்ப எழும். "நாவலின் சருகு மேலே உதிராமலிருக்கும்படி இறைவருக்குச் செய்த திருக்கோயிலும் சிதையுமா. மேலும் உலர்ந்த சருகுகளன்றி, மலர்களும், தளிர்களும், இலைகளும் நெருங்கியுள்ளன: இது என்ன பாவம்" என்று வருந்தி மெய் பதைத்துச் சோரும். "இந்தக் குற்றங்களைப்போக்குதற்கு எனக்கோ கைகள் இல்லை. எம்பிரானுடைய திருமேனியில், இவையெல்லாம் தங்கப்பெறுமோ? அடியேனுலாவது யாது?" என்று கவலையுற்றுக் கலங்கி வாடும். "சருகும் இலையும் மண்டிநிற்பதைப் பார்த்துக்கொண்டிருப்பதும் பெரும்பிழையாகும்" என்றெண்ணி, திரும்ப ஆலயத்தை நிருமித்துத் தன்னிருப்பிடத்துக்குத் திரும்பியது; இவ்வாறே தினந்தோறும் யானை வந்து ஆலயத்தைச் சிதைப்பதும், சிலந்தி புதிதாக அமைப்பதுமாக நிகழ்ந்தது. இப்படிநடக்குங்காலத்தில், ஒருநாள் சிலம்பி "என்னுடைய நூற்கோயிலை யழித்து, சிறிதும் அச்சமின்றி, விமலருடைய திருமேனியில் இங்ஙனம் குப்பையாக்கிய பிராணியைக்கொல்லுவதே செய்யத்தக்ககாரியம்" என்றுநினைத்து ஒரு பக்கத்தே மறைந்திருந்தது. சிலம்பியானது இராத்திரியிலும் தூக்கமின்றி இவ்வாறுமறைந்திருப்ப, யானையானது வந்து நூலிழைக்கோயிலை யழித்து முன்போலப் பூசை செய்தது. ஒருபக்கத்தே மறைந்துநின்ற சிலம்பி

யானது பார்த்து, "இறைவனுடைய பூசை செய்திடில், கோயிலை அழித்தலும் வேண்டுவதோ" என்று கோபங் கொண்டு மதயானையினுடைய கையின் துவாரத்தில் நுழைந்து வேகமாய் ஏறி அதன் கபாலத்துட் சுறுக்கெனக் கடித்தது. யானையானது கர்ச்சித்துக் கீழே விழுந்தது. இடியோசைபோலக் கர்ச்சித்து, கையையெடுத்து எடுத்து எறிந்து, பூமியைக் காலால் தேய்த்து விழும்; திரும்ப எழுந்திருக்கும்: மூச்செறியும்: தலையைக் கீழே சாய்க்கும்; அசைக்கும்; இங்ஙனம் துன்பத்தையடைந்து உயிர் நீத்தது. அந்த யானையானது கையை வாயில் கவ்விக்கொண்டு இறந்தமையால், சிலந்தியும், வெளிவருகிறதற்கு வழியில்லாமல் மிக்க துயருழந்து மாய்ந்தது. அவ்விரண்டும் பகையொழித்து, பூமியில் மதயானையாகவும் சிலம்பியாகவும் இருந்தவர், தேவசரீரத்தோடு விளங்கினர். வெண்ணுவல்நீழலில் மேவிய பெருமானும், தேவர்கள் புஷ்பமாரி சொரிய சிவகணங்கள் புடைசூழ, விருஷபவாகனத்தின்மேல் பார்வதி தேவியோடு காட்சிகொடுத்தனர். தேவசரீரத்தைப்பெற்ற பக்தர்கள், மகிழ்ச்சிகொண்டு, சிரமிசைச் செங்கை கூப்பி, ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, சிவபெருமானுடைய திருவடிகளில் பணிந்தெழுந்து கட்டமிட்டுத் துதிப்பாராயினர்.

"செழுநீர்த் திரளே திவண்மா மணியே,
கழுதார் வனமா டியகண் ணுதலே,
தொழுவா ரமுதே தூரிசார் தமியேம்
பழுதார் பணியும் பணியாக் கினையே."

"அற்றூர்க் கலகின்ப ருளா நிதியே,
வற்று தவருட் பெருவா ரிதியே,
செற்றூர் புரநீற் றியசே வகனே,
பற்றுய்ப் பணியும் பணியாக் கினையே."

"மடமா திடமா கியவாழ்க் கையனே
சுடர்மாமதிவேய்ந் தருள்சுந் தரனே

யடர்தீ வினையே மையுமாண் டருளப்,
படராப் பணியும் பணியாக் கினையே."

என்று தோத்திரஞ் செய்ய, எம்பிரான் மிக மகிழ்ந்து, "அன்பர்களே! நீங்கள் இந்தத்தலத்தில் நம்மைப் பூசித்ததினால், இழிந்த பிறப்பென்று சொல்லப்படும் உங்கள் வடிவம் நீங்கி, யாவரும் விரும்பத்தக்க ஒளிபொருந்திய யாக்கையையடைந்தீர். இனி வரத்தக்க வினையும் ஒழிந்து, தேவர்களும் வணங்கும் சிறப்பை யடைந்தீர்கள். யானைவடிவம் நீங்கப்பெற்றவன், நமது உலகத்தில் பெரிய கணநாதனைக் கலந்து விளங்குவான். ஞானக்ஷேத்திரமாகிய இந்தத்தலத்தில் பேரின்பவீட்டினை யடையும்படி எம்மைப் பூசித்தமையால் இத்திருநகரமானது என்றும் நின்பெயரால் வழங்குக சிலந்திவடிவம் நீங்கியவன், காவிரிநாட்டைப் பொதுவறப் புரக்கும் சோழர்குடியில் பிறந்து, சிவதருமங்களைச் செய்து, பின்பு சிவபதமடைக." என்று திருவாய்மலர்ந்தருளி, அப்புத்திரளாகிய சிவலிங்கத்தில், உமையாளோடும் மறைந்தருளினர். யானைவடிவம் நீங்கியவன் மீண்டும் ஜம்புலிங்கத்தைத் தரிசித்து வணங்கி, விமானத்தில் ஏறிச் சிவபுரத்தையடைந்து, ஆனந்தவெள்ளத்துள் மூழ்கினன். யானைக்கு அருள்புரிந்தமையால் ஞானக்ஷேத்திரத்திற்கு திருவானைக்காவென்னும் பெயருண்டாயிற்று.

கோச்செங்கணர் வழிபட்டது.

சிலந்திவடிவம் நீங்கிய தேவன், பரமசிவனருளிய வரத்தால், சோழவம்சத்தில் பிறந்து சிவதருமபரிபாலனம் செய்த வரலாற்றைச் சொல்லுவோம். செவ்வானம்போலும் திருவுருவத்தையுடைய நடராசப்பெருமான், ஆன்மகோடிகள் உய்யும்பொருட்டுத் திருநடனஞ் செய்தருளிய தலமாகிய சிதம்பரக்ஷேத்திரத்தில், சுபதேவனென்று பேருடைய ஒரு சோழ சக்கரவர்த்தி, அரசுபுரிந்துவந்தான்.

அவனுடைய மனையாள் கமலவதி யென்பவள்; அவள் பெருங்கற்பு வாய்ந்தவள். அவர்கள் மக்கட்பேறில்லாத குறையால் மிகவும் மனவருத்தமடைந்து, ஈசுவரனை வழிபட்டு ஒழுகுவாராயினர். சுபதேவன் ஒருநாள் தன் குலகுருவைப்பார்த்து, அடியேன் மக்கட்பேற்றைக் கருதி, முக்கட்பெருமானைக்குறித்துப் பல நோன்புகள்செய்தேன். அதனால் குழந்தைகள் உண்டாவதற்கு யாதொரு சந்தேகமுமில்லை; ஆதலின் தேவரீர் புதல்வர்க்கும் பெண்களுக்குமுரிய தர்மமார்க்கங்களை அடியேனுக்கு அருளிச்செய்ய வேண்டும்." என்று வேண்ட, "ஆசிரியன் மிக உவந்து, இராஜசிங்கமே! சாஸ்திரவிதிகளையெல்லாம் முறைப்படி சொல்லுவோம்; நீ தெரிந்துகொள்ளென்று"—வைதிகம், சைவமென்று சொல்லப்பட்ட இரண்டு வழிகளையும் அனுசரிப்போர்களுக்குரிய இருதுசங்கமனம், கர்ப்பாதானம், பும்ஸவனம் முதலிய பதினாறு கருமங்களையும் முறையே விரிவாகக் கூறினர். அங்ஙனம் கூறிய ஆசிரியரைப் பூசித்து மிகுந்த பொருள்களைக் கொடுத்து, அவருடைய கிருகத்தில் கொண்டுபோய்விட்டான். பின்பு அரசன் தன்னுடைய மனைவியைப்பார்த்து, அவள் அனுஷ்டிக்கவேண்டிய நியமங்களையெல்லாம் சொல்லி, அந்தப்படியே ஒழுகும்படி திட்டஞ்செய்து நடக்குநாட்களில், அவள் கற்பவதியாயினள். அவள் கருவுற்றாளென்கிற செயலை அவளுடைய சரீரக் குறிகளால் அறிந்து, உடனே காப்பணிந்து, அங்குரார்ப்பணம் செய்து, கர்ப்பாதானக் கிரியையை விதிப்படி செய்தான். இந்தப்படியே அந்த அந்தக்காலத்தில் செய்யவேண்டிய கிரியைகளைத் தவறாமற்செய்துவர, பத்து மாதமும் நிரம்பி, கமலவதிக்குப் பிரசவவேதனைநிகழ்ந்தது. அப்போது சோதிடர் இன்றைக்குச் சிசு ஜனனமாகாதிருத்தல் நலமென்று கூறினர். அரசன் என்ன உபாயம்

செய்தால் நல்ல முகூர்த்தம் வருமளவும் குழந்தை பிறவாமலிருக்குமென்று கவலையடைய, கமலவதி அதைக்கேட்டு, தன்னைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டிருக்கும்படி கூறினள். அரசன் இதுவும் திருவருளின் செயலேயென நினைந்து, அப்படியே செய்யும்படி ஆக்ஞாபிக்க, அயலிலிருந்தோர் அங்ஙனம் செய்து தீங்குறுங்காலங் கடந்த பின்னர், இறக்கிவிட்டார்கள். நல்ல சுபமுகூர்த்தத்தில் வலம்புரிச்சங்கத்தில் முத்து உண்டானதுபோல, அரசனுக்கு ஒரு மைந்தன் பிறந்தான். இயல்பாய்ப் பிறக்கவேண்டியகாலத்துப் பிறவாமல் தாமதித்தமையால், குழந்தைக்கு கண் செந்நிறமாயிருந்தது. கமலவதி குமாரனைப்பார்த்துச் செங்கண்ணனோவென்றாள். சுபதேவன் தனக்குப் புத்திரன் பிறந்தானென்று கேட்டவுடன், ஆனந்தக்கடலுளாழ்ந்து, ஆலயங்களிலெல்லாம் சிறப்புச்செய்யவும், நகரத்தெய்வங்களுக்குப் பூஜை செய்யவும் திட்டஞ்செய்தான். சிறையிலிருந்த மறமன்னரைச் சிறையினின்றும் விடுவித்தான். விலையுயர்ந்த ஆபரணங்கள், ஆடைகள் முதலியவற்றை வேண்டினர் வேண்டியபடி வாரிக்கொண்டு போம்படி திரவியசாலைகளைத் திறந்துவிட்டான். பிறகு ஸ்நானஞ்செய்து ஜாதகர்மஞ் செய்தனன். மனைவி குழந்தையைச் செங்கணனென்று சொன்னமையால், குழந்தைக்குக் கோச்செங்கணனென்று நாமகரணஞ்செய்தான். பிறகு கோச்செங்கணர் உரியபிராயத்தில் வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று, படைகள் பயின்று, ஆனையேற்றங் குதிரையேற்றமுதலிய சகல வித்தியாபாரங்கதரானார். பன்னிரண்டாவது பிராயத்தில் உபநயனஞ் செய்யப்பெற்று, எல்லா வேதங்களையுமுணர்ந்து, விவாகமாகி, பதினாறாவது பிராயத்தில் பூமியை தாங்கும் முறைமையும் பெற்றார். செங்கோலினால் பூமி செழிக்கவும், வேள்விகளினால் விண்ணுலகம் களிக்கவும்,

பகைவர்கள் வணங்கவும், பாவங்கள் தேயவும், புண்ணியம் வளரவும் அரசாட்சி செய்துவந்தனர். முற்பிறப்பின் நினைவால் வெண்ணுவல் நீழலில் வீற்றிருந்த ஆமுதலிங்கேசரை விளையாடுங்காலத்தும் மறவாராய், அவர்க்குத் திருப்பணிகள் ஆக்குதற்கு மனம் வைத்தார். நாற்படையும் பரப்பியெழுந்து, பகைவர்களுடைய முடிகளோடு முடிகள் புரளும்படி யுத்தத்தில் வென்று, அவர்களுடைய வளங்களையெல்லாம் கவர்ந்து, வணங்கிவந்த அரசர்களிடத்துத்திறை வாங்கி, அளவுபடாத செல்வத்திரளோடு நாவல்வனத்தையடைந்தனர். முந்திய பிறப்புக்கள்தோறும் தொடர்ந்து நின்ற அன்பானது மிக, ஜம்புநாதருடைய திருவடிகளைத் தியானித்து வணங்கினர். அத்திருவுருவத்தை நோக்கிக் கண்ணீர் பெருக்கி, மனங்குழைந்து, உருகினர். எல்லையில்லாத ஆனந்தமாக்கடலில் திளைத்தனர். பல மறைகளைப் பாடி யாடினர். அவ்விடத்துநின்றும் அரிதில் நீங்கி அகிலாண்டவல்லியினது பரிபுரமணிந்த சிறடியைப்பணிந்து போற்றி, அவ்வனத்தில் ஓர்புறத்துத் தம் பரிசனத்தோடும் வைகினர். தம் மந்திரிகளைப்பார்த்து, "வெண்ணுவலின் மருவிய எம்பிரானுர்க்கு, ஆலயம்வகுக்க எண்ணினேன்" என்று கூற, அமைச்சர்முதலியோர், உலோகமுருக்குவோரையும், இரத்தினமிழைப்போரையும் வருவித்தனர். அன்று சூரியன் அஸ்தமித்தது. அன்று இராத்திரியில் சிவபெருமான் அவருடைய கனவில் ஒரு சிவனடியாரைப் போல் தோன்றி, அரசன் முகத்தைப் பார்த்து "உலகமுழுதும் ஒரு குடையின்கீழ் ஆளுகின்றவரசனே! பொன் முதலியவற்றால் பணி செய்யக் கருதினை. அவ்வெண்ணத்தை விடுக; தேவதச்சனாகிய விசுவகர்மா முன்பு நம்மிடத்து வந்து குற்றமில்லாத ஆலயத்தைச்செய்ய விரும்பினன். அவன் கண்டகை மலைச்சாரலில் கண்டகை நதியின்பக்கத்

தில், விமானத்தைத் தன் கையினலே செய்து இங்கு கொண்டுவந்து அமைக்கவெண்ணினன். நாம் அவனைப்பார்த்து, அதனை அவ்வாற்றிலிட்டு நீங்குகவென்று கூறினேம். அவன் அங்ஙனம் செய்து இத்தலத்தில்வந்துபெருந்தவஞ் செய்து நிருமிதத் தலைமை பூண்டனன். ஆதலால், அவ் விமானம் அவ்விடத்திலுள்ளது. அங்கே கோடி உருத்திரர்கள் பூசித்த ஒரு கடவுளுண்டு. அவரையடுத்துப் பூசித்து, அவர் மொழிகிறபடி, நீ அதனை இங்கே பெயர்த்துவைப்பாய்'' என்று நயமொழிகளைக் கூறி மறைய, அரசர் விழித்தெழுந்து, சொன்னவைகளை நனவெனத் துணிந்து, விடிந்தபின் அமைச்சரை யழைத்து, நிகழ்ந்ததைத் தெரிவித்து, நால்வகைச்சேனையும்சூழ, வடதிசைநோக்கிப் புறப்பட்டனர். அமுதலிங்கேசர் அருளிச்செய்தபடி, கண்டக நதியைச் சார்ந்து, அங்குள்ள இறைவருடைய அடிகளைப் பணிந்து, அங்குச் சிலநாள் வசித்தனர். முக்கட்பெருமான் எதிர்தோன்றி "அஃது இந்த இடத்திலுள்ளது. அதை யெடுத்து அந்தவிடத்தில் செல்லுக" என்று கூறி மீட்டும் "நதியில் வீழ்த்திச்செல்லுக; அது அவ்விடம்வந்து சேரும்." என்று அருளிச்செய்து மறைந்தனர். அரசர் நதியில் மூழ்கி, கைலையங்கிரிக்கு ஒப்பான விமானத்தைக் கண்ணில் கண்டு சிற்பநூல்விதிப்படி யமைந்த அந்த விமானத்தைக் கரைமிசையேற்றி, நன்குகப் பார்த்து "அவ்விடத்திற்கு வருக" என்று மீட்டும் நதியில் இட்டனர். அங்குள்ள கண்ணுதற்பெருமானை மீட்டும் வணங்கி, தம் சேனையும் தாமும் மீண்டு சென்று கஜாரணியத்தையடைந்து, அமுதலிங்கேசரைத் திருவடிதாழ்ந்தனர். பிறகு கோச்செங்கணர் காவிரியை யடுத்துநிற்ப, ஆற்றின் நடுவிலே விமானம் வந்து நின்றது. அற்புதம் எழுந்தாற்போல விமானமானது நீரிடைத் தோன்ற, வேந்தர் உள்ளத்தில்

அற்புதங்கொண்டனர். தேவர்களும் ஆச்சரியத்தை யடைந்தார்கள். பூலோகத்திலுள்ளவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

"அடியவர் தமக்கெய் தாத வரும்பொருள் யாதொன் றில்லை
கடிகெழு நாவ னீழற் கண்ணுத லருளினாலே
படிமிசை யெவருங் காணப் பரந்தகெண் டகைநீ ராற்றின்
இடுசிலை பொன்னி யாற்றி னெழுந்துமேல் விளங்கு மென்றால்."

வேலையாட்களையழைத்துக் கரையிலேற்றி நாவல்நீழற் பெருமானுக்கு, இனிது சார்த்தி அதன் மேல்பக்கத்து ஒன்பது சாளரங்களமைத்து, தென்திசையில் திருவாயிலுமமைத்தனர். தெற்கு வாயிலின் நேரே முப்பது சாலேகங்களோடு விண்ணையளாவுகின்ற கோயிலுக்குப்பொருந்த மண்டபம் முதலியவற்றையும், சிலையினாலே சிங்கத்தினுருவைப்போலச் சிறந்து தோன்றவமைத்தனர். மண்டபம் பிராகாரங் கோபுரங்கள் முதலியவற்றைச் செய்தபிறகு, எஞ்சிய நிதி முழுதையும் ஒரு பக்கத்தில் தாபித்து அதற்கு நேரே மேலாக உள்ள மண்டபத்திலே கோயிலொன்று அமைத்து அக்கோயிலினுள்ளே ஒரு சிவலிங்கத்தைத் தாபித்து, "உத்தம! இந்த நிதிகளையெல்லாம் உமது வசத்தில் வைத்தனன்; கைக்கொண்டருள்க" என்று வணங்கினர். அதனால் அந்த மூர்த்திக்கு ஆதிப்பெருஞ்செல்வர் என்னும் திருநாமமுண்டாயிற்று. ஜம்புநாதருக்கு நித்திய நைமித்திய பூசையெல்லாம் ஆகமவிதிப்படி குறைவறச் செய்தற்குரியவர்களைத் தேடிக்கொணர்ந்து இங்கே வைக்க வேண்டுமென்றெண்ணி, காசி, கேதாரம், காஞ்சி, முதலிய நகரங்களிலிருந்து நல்ல குலத்தில் பிறந்தவர்களான சிவத்துவிசர்களை யழைத்து வந்து, செல்வம், பூமி, சுதந்திரம், கிரகங்கள் முதலியவற்றைக்கொடுத்து அங்கே தாபித்தார். அமுதலிங்கருடைய திருவடிகளைப் பூசித்தற்குரிய சிவபக்தர்களுக்குப் பதினெட்டுத் திருமடங்களைக் கட்டி, பல

செல்வங்களும் நல்கி, உலகம் வியக்கும்படி எல்லாப்பாக்கியங்களையும் நிலைபெறச் செய்தார். இவ்வகையாக இவர் எல்லாத் திருப்பணிகளையும் இங்கே செய்ய, பாண்டியன் முதலிய வேந்தர்கள் வந்து, அவரவர் தத்தமக்கேற்ற திருப்பணிகளைச் செய்தார்கள். நாள்தோறும் ஆறுகாலபூசையையும் திருவிழா முதலியவற்றையும் சிறப்புறச்செய்து, தரிசித்துப் பேரானந்தமுற்று, அங்கே பலநாள் வசித்து, பின்னர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு மார்க்கத்திலுள்ள தலங்களில் பல திருப்பணிகளைச்செய்து, தம் பதியையடைந்தார். அவ்விடத்திலிருந்தபடியே அரசுபுரிந்து உலகத்திதிலுள்ள ஆலயங்களிலெல்லாம் குறைவறப் பூசை நடக்கும்படி செய்து, மலங்களெல்லாம் தீர்ந்து, பரசுகவடிவோடு ஒன்றாய் மேவி, சிவலோகத்தில் கணநாதராகப் பொருந்தினார்.

இந்தப்படி, சூதபுராணிகர் கூறக்கேட்ட மகரிஷிகள் "முனிசிரேஷ்டரே! இந்த நல்ல சரித்திரத்தைக் கூறினீர்; இதில் எங்களுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அதைத் தீர்க்கவேண்டும். அதுயாதெனில், சிலந்திக்கும் யானைக்கும் சிவபூசையில் பக்தியுண்டான காரணம் யாது? அவை ஞானக்ஷேத்திரத்தை யடைந்து சிவசரணாரவிந்தங்களை ஆராதிக்கும் பேறு எப்படிக் கிடைத்தது. அன்புகூர்ந்து அருளிச்செய்யவேண்டு"மென்று பிரார்த்திப்ப, சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். "கைலையங்கிரியிலேயுள்ள பல கணநாதர்களுக்குள், மாலியவான் என்றும் புஷ்பதந்தனென்றும் இருவருண்டு. அவ்விருவரும் சிவோபாஸனையில் மிக்க ஊக்கமுடையவராய் ஒருவருக்கொருவர் மேம்படவேண்டுமென்று முயன்றனர்." அது காரணமாகப் பொறாமையுற்று, ஒருவரை யொருவர் பகைத்தார்கள். ஒருநாள் இருவரும் சந்தித்தபோது, மாலியவான் புஷ

பதந்தனை யானையாகும்படி சபித்தான். புஷ்பதந்தனும் மிகச்சினந்து, மாலியவானைச் சிலந்தியாகும்படி சபித்தான். நீங்காத பெரிய சாபவலையிலகப்பட்டு, இருவரும் மங்கை பாகரையடுத்து, நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்து, "நாங்கள் அறியாமற் செய்த பிழையைப்பொறுத்து, சாபவிமோசனமாகும்படி செய்தருளவேண்டு"மென்று வேண்ட, சிவபெருமான் "சோழவளநாட்டில் தேவரும் துதித்து வணங்கும்படியான ஞானக்ஷேத்திரத்தை யடைந்து, நம்மைப் பூசித்து, ஒருவரையொருவர் இன்னும் அதிகமாகப் பகைத்து, அங்கே சரீரத்தைவிட்டு, சாபத்தையும் ஒழிப்பீர்" என்று கூறி விடுத்தனர். அப்படிப்பட்ட பெருந்தவமுடையராதலினால், சிவபூசையில் மனத்தைச் செலுத்தி, ஞானக்ஷேத்திரத்தையடைந்து, சிவபூசைபுரிந்து மேன்மையுற்று விளங்கினர்" என்று கூறி, மேலே கௌதமரிஷி பூசித்துப் பேறுபெற்ற வரலாற்றைச் சொல்லத்தொடங்கினர்.

கௌதமர் பூசித்தது.

சிவயோகிகளுள் சிறந்தவரும், பரமசாம்பவருமான கௌதமமுனிவர், தம்முடைய பத்நியாகிய அகலிகையென்பவளோடு வாழ்ந்துகொண்டிருக்கையில், ஒருநாள், இந்திரன், உருவத்திற்சிறந்த அகலிகையைக் கண்டு மோகித்து, சேர விரும்பி, அவளைப்பார்த்து இரக்க, அவள் இந்திரனே யாசிக்கிறானென்று மனத்தில் களிப்புற்று, அவன் கருத்துக்கிசைய, இருவரு மனமொத்துக் கூடினர். இந்திரன் நீங்கிச் செல்லும்போது, கௌதமர் கண்டு, "மேகவாகனனே! வேதநெறி தவறி, நீ ஒரு பெண்ணினுடைய கற்பைக் கெடுத்தமையால், உன்னுடைய குறியானது அழுகி வழுக" என்றும், மனைவியைப் பார்த்து, "நீ கல் வடிவம் அடைவாய்" என்றும் சபித்தனர். அவர், இல்லாள் இல்லாளாகவே இருந்துவருங்காலத்தில், அவளுக்கு

நல்வினை யடையுங்காலம் நெருங்கினமையால், ஒருநாள் இரவில், அவர் தம் மனைவியின்மீது கருத்தைச் செலுத்தி, அவளையே நினைத்து வருந்துவாராயினர். பெருந்தவமுனிவர் இரவெல்லாம் காமநோயால் வருந்தி, விடியற்காலத்தி லெழுந்து, சிவத்தியானஞ் செய்து, காலைக்கடன்களை முடித்து, சம்புகேசுவரத்தை யடையும்படி புறப்பட்டுச்சென்று அதன் எல்லையை எதிர்கண்டார்; காணவே கவலையெல்லாம் நீங்கப்பெற்று, நிலத்தில் விழுந்து தெண்டனிட்டு எழுந்து, கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருக, நாவினல் வேதங்களை ஓதித் துதித்து, காவிரிநதியை யடுத்து ஸ்நானஞ்செய்து, அத்தலத்தினுள்ளே புகுந்தார்; அங்குள்ள தீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானஞ்செய்து, விதிப்படி விபூதி ருத்திராக்ஷதாரணம்செய்து, ஐந்தெழுத்தோதி, ப்ரம்மலிங்கத்தைத் தரிசித்துத் தாழ்ந்து எழுந்தனர்.

மகரிஷிகள் சூதமுனிவரைப்பார்த்துப் பரமசிவனுக்கு ப்ரம்மலிங்கமென்னும் திருநாமம் வந்த காரணம் யாதென்று வினவ, சூதமுனிவர் சொல்லுகிறுர்.—"இராதந்திரமென்று சொல்லப்பட்ட ஒரு கற்பத்தில் திரேதாயுகத்தில் பிரம்மா சிருஷ்டித்தொழிலைப் பெறும்பொருட்டுத்துதித்து வழிபாடு செய்தமையால், அரவாபரணராகிய சிவபெருமானுக்கு அப்பெயருண்டாயிற்று." என்று கூறி மேலே சொல்லத்தொடங்கினர்.

கௌதமனர், தரிசித்து வணங்கி மலர்முதலியவற்றைக்கொண்டு சிலநாள் பூசிக்க, அண்டர்பெருமான் அவர் பூசைக்கிரங்கி விருஷபவாகனத்தின் மீது எதிர்தோன்றினர். இடப்பக்கத்தில் பார்வதிதேவி பொருந்தவும், திருமுடியில் கடுக்கைமாலை பிரகாசிக்கவும், அமரரும்முனிவரும் தொழுதேத்தவும், பூதகணங்கள் புடைசூழவும், சிவபெருமான் காட்சிகொடுத்தவுடன், முனிவர் கண்டு 'மலர்த்தாள்களில்

விழுந்து பணிந்து வலம் வந்து மனம் குழைந்து, துதிக்கத் தொடங்கினர்.

"மருமலி கின்ற மென்பூ வாளிகள் கழைவி லேற்றிப்
பொருமொரு தேவ னாக்கை பொடித்தனை பொருவின் முத்தி
யுருவுகச் செங்க லோச்சு மொருவருக் களித்தி யானின்
திருவருட் டிறத்தை யாரே யுள்ளவா தெரிக்கு நீரார்."

"சிறவிதி புரிந்த வேள்வி தீவினை யாக்கித் தேவர்க்
குறுமுறை செய்தாய் தந்தை யுயிர்க்கொலை புரிந்த பாவ
முறுகுபுண் ணியம தாக்கி மூதன் மையோர் பாலர்க் கீந்தாய்
பெறுமருட் டிறத்தை யாரே யுள்ளவா பேணு நீரார்."

"தீங்குசெய் மனைவி கல்லாய்த் தீர்தர வெகுளி யென்பால்
வீங்கமுன் புரிந்தா யின்றம் மெல்லிய வின்பந் துய்த்து
நீங்கருஞ் செல்ல னீங்க நினைவினைக் கொடுத்து நின்ற
யோங்கருட் டிறத்தை யாரே யுள்ளவா றுரைக்கு நீரார்."

என்று துதித்து நின்ற கௌதமரைப் பார்த்து, கொன்றை மாலையைத்தரித்த பரமன் "நீ உன் மனத்துயரத்தை யொழிப்பாய்; தாசரதியால் உன் மனைவியின் சாபம் நீங்கும்; பின்பு, உன்னிடம் வந்து சேர்வள்; அந்த நாள் வரையில் அனங்கன்வாளி உன்னைத் துன்பஞ்செய்யாதிருக்கும்படி, நீ இத்தலத்தில் எம்மைப் பூசித்துக்கொண்டு வசிப்பாய்" என்று கூறி, அமுதலிங்கத்தில் மறைந்தருளினர். பரமசிவன் அருளிச்செய்த அருளைச் சிரமேற்கொண்டு, புண்ணியமுனிவர் சிவபூசைசெய்து பலநாள் அங்கு வசித்தனர். ஒருகாலத்தில், அயோத்தியென்னும் நகரத்தில், திருமால் இராமனாக அவதரித்து மிதிலை நோக்கிச் சென்றபோது, அவன் பாதந் தோய்ந்தவுடன், அகலியைக்குக் கல்லுரு நீங்கியது. நீங்கியவுடன் எழுந்து, அரக்கர் சேனைகளை யழிக்கவந்த செம்மலுடைய பாதங்களை வணங்கி, தன்

கணவர் இருக்கும் இடத்தைத் தேடிச்சென்ருள். பிரம்ம லிங்கத்தைப் பூசித்துப்போற்றிய புண்ணியத்தின்பேற்ருல், மனைவி சாபம் நீங்கித் தம்மிடம் வந்துசேர, முனிவர்விடை பெற்று, அவளோடும் அவ்விடம்விட்டு நீங்கி, தாம் முன் வசித்த இடம் சென்று போகங்களை நுகர்ந்து சுகமாக வாழ்ந்தனர்.

அருட்பிழம்பாகிய பரமசிவன் கௌதமருக்கு மிகுந்த சுகத்தை யருளினமையால் சங்கரேசுவரர் என்னும் திரு நாமம் திரேதாயுகத்தில் வழங்கியது. பிரமீசரென்றும், சங்கரேசுவரரென்றும் பெயர்பூண்ட நாயகருக்குப்பக்கத்தே யுள்ள சம்புதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வோர்களுக்குச் சகல குணங்களும் செல்வங்களும் முக்தியுமுண்டாகும். எந்தத் தீர்த்தமும் இந்தத் தீர்த்தத்துக்கு ஒப்பாகாது.

குபேரன் வழிபட்டது.

வெள்ளிமால்வரையில் எழுந்தருளிய சிவபிரானுக்குத் தோழன் என்று பெயர் பெறும்படியான மேன்மையுடைய குபேரன் அளகாபுரியில் ஆட்சிசெய்து வந்தனன். தசகண்டனுகிய ராவணன், கண்ணுதற்பிரானைப் பூசித்துப் பல வரங்களைப் பெற்று வையகம் எல்லாம் தன்னை வணங்கும்படி ஆண்டுவருநாளில், குபேரனைச் செயிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு நால்வகைச்சேனைகளும்புடைசூழ சென்று, அவனைப் புறங்கொடுத்தோடும்படி துரத்தி, அவனுடைய நகரத்திலிருந்து எல்லா நிதிகளையும் புஷ்பகவிமானத்தையும் கவர்ந்துசென்றனன். குபேரன் இராவணனுடைய யுத்தத்தில் உயிர்தப்பிப் பிழைத்து, துக்கத்தோடு விரைந்தோடி, கைலையங்கிரியை யடைந்தனன். உயிர்க்கு உறுதியான மிக்க தவத்தைச்செய்து, கைலாசபதியினுடைய திருவடிகளில் மலர்களால் அர்ச்சித்து, தனக்குப் பகைவனுல் நேர்ந்த இடர்களையெல்லாம் தெரிவித்துமுறை

யிட்டான். "தேவர்கள் எல்லாம் தொழுதேத்தும் இறைவனே! பாபியாகிய இராவணன் கவர்ந்துபோன பொருள்களையெல்லாம் அடியேன் அடையும்படி அருள்செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க, சந்திரசூடர் கடைக்கண்ணால் அருளிப்பார்த்து, குபேரன் தமக்குத் தோழனாகையால், சொல்லத்தொடங்கினர்.

"தனதனே, நீ, தேவமானத்தால் பன்னிரண்டுவருஷம் பாசுபத விருதத்தை யனுஷ்டித்து, அரிய தவத்தைச்செய்து, நம்மைப் பூசித்தாயாகையால், இனி நீ ஒன்றுக்கும் அஞ்சற்க. பூலோகத்தில் ஞானக்ஷேத்திரம் என்று ஒரு தலம் உளது. நீ அவ்விடத்தையடைந்து, அங்குள்ள பல புண்ணியதீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து, நந்தீசுவரம், வாலகில்லீசுவரம் முதலான பல ஸ்தலங்களில் வழிபட்டு, பக்தியோடு தங்குவாய். இன்னும் சிலநாளில், இராமன் அரக்கனுடைய உயிரை மாய்ப்பன். அதன்பிறகு, உன்னுடைய பெருஞ்செல்வமும் புஷ்பகவிமானமும் முன்போலவே உன்னிடத்துவந்துசேரும்; இது சத்தியமாகும்." என்று கைலைப்பெருமான் விடையளித்தனர். குபேரன்சிவபிரானை அன்போடு வணங்கி விடைபெற்று, கைலையங்கிரியை நீங்கி, மார்க்கத்திலுள்ள பல தலங்களையும் பணிந்து, காவிரியின் பக்கத்தையடுத்தான். அங்கேஞானக்ஷேத்திரத்தைநோக்கி, பூமியில் விழுந்துபணிந்து, காவிரிமுதலாகிய குற்றமற்ற எல்லா தீர்த்தங்களிலும் விதிப்படி நீராடி, அங்குள்ள சிவலிங்கங்களையெல்லாம் மலர்களால் அர்ச்சித்துப்பணிந்து, அமுதலிங்கத்தின் சன்னிதியை யடைந்தான். வெண்ணாவலின் கீழ் அமர்ந்தருளிய முக்கட்கனியைத் திருவடி வணங்கி, வலம் வந்து, ஒரு பக்கத்திருந்து இரவிலும் துயிலாமல் பஞ்சாட்சரத்தை அன்போடு ஜபித்துக்கொண்டிருந்தான். சூரிய உதயமானபிறகு அங்கொருபக்கத்து, தன் பேரால

ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து வேதாகமவிதிப்படி பூசை புரிந்து தவஞ்செய்துகொண்டிருந்தான். அன்றையதினம் போலவே, பலநாள் குபேரன் வழிபாடு செய்துகொண்டு வருகிறகாலத்தில், நீலமேகம்போன்ற இராமன் தன்னுடைய வெற்றிக்கணையால் இராவணனுடைய உயிரை மாய்க்க, குபேரன், முன்னிழந்த புஷ்பகத்தையும் மற்றைச் செல்வங்களையும் திரும்பவும் அடைந்து, தன்னிருப்பிடத்தையடைந்து வாழ்ந்திருந்தான்.

"பேணு ருடற்றும் பெரும்பகையும் பிறவிப் பகைசெய் யாணவமும்
மாணு வினையு மாயைகளும் வறுமை பிணியா திகள்பலவும்
வீணு யழிய வேட்டவரம் வேட்டாங் கருளு மெஞ்ஞான்றுங்
கோணு வருளுங் கொடுத்தருளுங் குபேர லிங்கம் வழிபடினே."

திருநீற்றுத்திருமதில் வரலாறு.

கோச்செங்கட்சோழரும், மற்ற வேந்தரும் கூடிப் பணிசெய்யுநாளிலே, கோயில்சூழ்ந்த மதில்களையெல்லாம் கட்ட முயன்றனர். அப்பொழுது சிவபெருமான் திருவருளால் "எல்லாவற்றையும் உள்ளடக்கிக்கொள்ளும்படியான பெரிய மதில் நீங்கலாக, மற்றைப் பணிகளையெல்லாம் செய்யுங்கள்" என்று ஆகாசத்தில் ஒரு மொழியுண்டாயிற்று. அந்த மொழி செவியில் படலும், அந்தவேந்தர்கள், "இது நாதனருள்; இறைவரே இதை யமைப்பார்" என்றுகூறி அந்தப் பெரிய மதிலைக் கட்டாமற் சென்றனர். நாவலின் கீழ் எழுந்தருளிய உமாபதி உலகத்திற்குப் பெருவாழ்வை யளித்தற்பொருட்டு, பெரிய மதிலைச் செய்யும்படி திருவுளத்து எண்ணி, காஷாயமுடுத்துச் சடைமுடி தரித்து, கண்மணியும் திருநீறுமணிந்து, ஒரு துறவியாகி வந்தனர். தவத்தால் வருந்தலும் திருப்பணியால் மிக வருந்துதலுமே பாவவினையெல்லாம் போக்கி நற்கதிக்கு வித்தாகும் என்பது யாவரும் அறிந்துகொள்ளும்படி, திருமதில் திருப்ப

ணியைக் கரங்களால் செய்யக் கருதினர். தச்சர் முதலோரைத் தொழில் செய்யும்படி நியமித்து, எல்லா வல்லமையுமுடைய தமதியல்பும், எல்லாக் கருமங்களுக்கும் பொருந்தத் தாமே பயனுதவும் இயல்பும், விபூதியென்னும் பெயருடைய திருநீற்றின் மகிமையும் விளங்கும்படி, ஆட்களுக்கு விபூதியே கூலியாகக் கொடுக்கக் கருதினார். திருநீறேயவரவர் வேலைக்குத் தக்கபடி, பொன்னாக மாறியது. ஒரு சித்தரைப்போல விளையாட்டைச்செய்யும் அமுதேசருக்கு ஒளிக்கும் வகையில்லாமையாலே, எல்லாரும் பணி செய்வாராயினர். அதற்கு வேண்டும் பொருள்களையெல்லாம் பற்பல இடங்களிற் பற்பலர் கூடிச் சித்தம் செய்தார்கள். இப்படித் தொழில்செய்வோர் பலர் நெருங்கி மதிலைக்கட்ட மதில் கொஞ்சம் உயர்ந்தவுடனே, நுதற்கண்ணை மறைத்து வந்த சித்தர், மதில்வரிசைமேல் கால் வைத்தேறி மிதித்து, பூமியின் உள்ளே யழுத்தினர்.' பூமியின்மேலே கிளம்பிய வரிசைகளையெல்லாம் பூமியினுள்ளே மறையும்படியழுத்தி பிறகு ஆகாசத்தை யளாவும்படிக்குப் பெரிதாகிய மதிலை அமைத்தனர். அரிஷ்டம் நீங்கவும், சர்வாபீஷ்டமடையவும் கருதிந் தம்மை யடைந்தவரையெல்லாம்பார்த்து, அருளோடு அருளிச்செய்வாராயினர்.

எல்லாச் சித்துக்களையுமுடைய எம்மிடத்திருந்த பொருள்களையெல்லாம் இந்த மதிலிலே தங்கும்படி வைத்துவிட்டோம். ஆதலால், வரன்களையடைய விரும்புவோரெல்லாம், கனிந்த அன்புடன், இந்த விசாலமான மதிலைப் பிரதட்சிணம் செய்க." என்று கூறினர். அன்றுதொட்டு உலகத்திலுள்ளவர்கள் மகப்பேறு கருதியும், ஜயத்தை விரும்பியும், செல்வத்தை விரும்பியும், இன்பத்தை, விரும்பியும், இந்த மதிலைப் பிரதக்ஷிணம் செய்து எல்லா வரன்களையும் பெறுகிறார்கள்.

"மதிவினைச் சூழ்வா மென்று மனையகந் தன்னை நீங்கிற்
பொதிதரு பாவ மாதிப் புல்வினை யவனை நீங்கு
மெதிர் கொளின் வரங்க ளெல்லா மெதிர்கொளுங் கதுவின் ஞானங்
கதுவுறுஞ் சூழிற் சூழுங் கரிசறு முத்தி நான்கும்."

அமுதலிங்கேசர் அருண்முறைசெய்தது.

கோச்செங்கட்சோழநாயனாரால் கொண்டுவந்து தாபிக்கப்பெற்ற சிவத்துவிஜர்கள், சகல கலைகளிலும் வல்லவராகவும், ஆகமக்கடலைக் கடந்தவராகவும், விதிப்படி சிவபூஜைசெய்து வருகிற காலத்தில், மன்னவர்களும் பணி கேட்க, வேறு தேயத்திலுள்ளவர்களும் என்ன வினை செய்தாலும் வருந்திப் பிரார்த்தித்து அழைக்கவும் தக்க மேன்மையுடையராயிருந்தமையால், அவர்கள், தம்மைத்தாமே மதித்துத் தருக்குற்று நடந்தனர். அவர்கள் தமக்குண்டான பெருமைகளெல்லாம் ஞானதலத்தில் வசிப்பதனாலும், அமுதலிங்கேசரைப் பூசிப்பதனாலும் உண்டானவையென்று எண்ணுமல், தப்பான எண்ணங்கொண்டு தவறுகளே செய்து வந்தார்கள்.

கணிகையரைச் சேர்ந்தும், சிவாலயப்பொருள்களைக் கவர்ந்தும், காலங்களில் பூசைசெய்யாமல் தாமதித்தும், ஆசாரங்கள் குன்றியும், பூஜாக்கிரகங்களை விடுத்தும், இப்படிப்பட்ட தீங்குகளைச் செய்தமையால், சிவபெருமான் சினங்கொண்டு, அவர்களை ஆற்றில் கவிழ்க்கத் திருவுளங் கொண்டனர். இப்படியிருக்கையில், ஒரு நாள் பிக்ஷாடன மூர்த்திக்குத் திருவிழா நடக்கையில், ஒரு சிறுவனை மாத்திரம் வைத்துவிட்டு, சிவத்துவிஜர்கள் எல்லாரும் அயலூருக்குப் போகப்புறப்பட்டு, கொள்ளிடத்தைத் தாண்டுவதற்காகத் தோணி ஏறினார்கள். கோலுக்கு நிலையாத பிரவாகத்தில் செல்லும்போது, ஜம்புநாதருடைய திருவருளால், ஒரு சூறைக்காற்று வீசியது. தோணி

கவிழ்ந்து அதிலிருந்தவர்கள் எல்லாரும் மனைவிமக்களுடன் நீத்தத்தில் வீழ்ந்து உயிர் மடிந்தார்கள். அருட்பெருங்கடலாகிய அமுதலிங்கேசரே திருவுளங்கறுத்துச் சிவத்துவிஜரையெல்லாம் கொன்றார் என்றால், ஆராயும்போது, ஒருவரிடத்தும் குற்றம் செய்யாதிருத்தலே நல்லதென்று, உலகத்திலுள்ளவரெல்லாம் அஞ்சி நடுங்கினார்கள். அமுதலிங்கேசர், வெள்ளத்தில் இறவாமல் பிழைத்த சிறுவனுக்கு அனுக்கிரகஞ்செய்து, வேதாகமங்களையெல்லாம் அருளி மேன்மைதரும் பணிவிடையில் வைத்தார்.

முன்னொருகாலத்தில், குமாரக்கடவுள் சில பிராமணரைச் சிவபூசைக்குரியரென்று வெள்ளியங்கிரியிலிருந்து கொணர்ந்து, திருப்பிடவூரிலே தாபித்திருந்தனர். அவர்களில் அறிவிற் சிறந்தவர்களும், பக்தியின் வழுவாத சிந்தையுடையவர்களுமான சிலரையழைத்து, பூசைமுதலிய செய்யும்படி வைத்தனர்.

அவர்கள் அச்சமும் அன்புங்கொண்டு, வேதாகம விதிப்படி பூசை முதலிய பணிகளை உலகமெல்லாம் கொண்டாடும்படிசெய்துவருகிறார்கள். உமாதேவியையிடப்பாகத்தில்கொண்ட பரமசிவனைப் பூசிக்கும் அந்தணரை அமுதலிங்கேசரென்றே மதித்து வணங்கினோர், தேவர்களாலும் போற்றி வணங்கப்படுவரென்றால், அன்னோருடைய பெருமையைச் சொல்ல யாவர் வல்லவர்.

"பிரிந்தபின் னிரக்சஞ் செய்த பரமனார் சரிதந் தன்னைத்
தெரிந்தவர் தெரித்தோ ரெல்லாந் தீவினை முழுது நீங்கி
விரிந்தபல் கதிகடம்முள் வேட்டநற் கதியுண் மேவிப்
புரிந்தபே ரின்ப வெள்ளப் புணரியுட் டிளைத்து வாழ்வார்."

இந்தப்பிரகாரமாக ஞானக்ஷேத்திரத்தினுடைய மஹிமையையெல்லாம், சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்கு எடுத்துச்சொல்ல அவர்கள் பரமானந்த வெள்ளத்துள் திளைத்து வாழ்ந்தார்கள்.

அருள்வளர் சம்பு மூலத் தமுதலிங் கேசர் வாழ்க
வருமகி லாண்ட வல்லி வாழ்கவே தாக மத்தின்
பொருணிலை வழாது வாழ்க புகழ்திரு வானைக் காவாந்
திருநகர் வாழ்க வாழ்க தேயங்க ளனைத்து மாதோ.

முற்றிற்று.

M. V. இராமாநுஜாசாரியர்.

நாமகள் சாபம்.

ஒன்றொருகால் சதுர்முகனார் தன்னுலகமாகிய ஸத்தியலோகத்தில் இந்திரன் முதலிய தேவர்களாலும் அத்திரிமுதலாயவநேக தேவரிஷிகளாலும் உரகர், கருடர், கின்னரர், ஸாத்தியர், யக்ஷர், சாரணர், கந்தர்வர் முதலியவர்களாலும் பலவாறு துதிக்கப்பட்டவராக அலர்ந்தவரவிந்த மலர்த்தவிசில் இனிது அமர்ந்திருந்தார். அக்காலை சிலரிஷிகள் அயனுக்கு அருகிலிருந்து ரிக்வேதமோதினர்; சிலமுனிவர்கள் யஜுர்வேதத்தை யியம்பினர்; இன்னும் சில தபோதனர்கள் ஸாமவேதத்தைப் பாடினர். பின்னும் சிலர் அதர்வ வேதத்தை அறைந்தனர். மற்றும் சிலர் பற்பல சாஸ்திரங்களையும் வித்தைகளையும் பற்றி ஸல்லாபம் செய்துகொண்டிருந்தனர்.

கமலாஸனன் இங்ஙனம் இனிது வீற்றிருக்கையில் அவர்க்கெதிரில் ஸாமகானம் செய்துகொண்டிருந்த, அத்திரிமாமுனிவர் புத்திரராகிய துர்வாஸஸ் என்பவர் மந்தபாலனெனும் மாமுனிவனுடன் வாக்கலகம் செய்யத்தொடங்கினார். இயற்கையாகவே கோபிக்கும் தன்மைவாய்ந்த அம்மாதவர் கலகத்தில் கவனமுற்ற மனத்தனராய் தாம் பாடிக்கொண்டிருந்த ஸாமவேதத்தை ஸ்வரப் பிழையுடன் பாடினார். அக்காலையில் அயனுக்கருகிருந்து கவரிவீசிக்கொண்டிருந்த கலைமகள் அம்முனிவர் அவ்வாறு ஸாமத்தை ஸ்வரம் தவறிப் பாடினதைக்கண்டு குலுங்க நகைத்தனள்.

தன்னைக்கண்டு இங்ஙனம் நகைக்கலுற்ற நாமகளை நோக்கி அம்முனிநாதனும் தன்னுளடங்காத முனிவுடன் மொழிந்ததாவது: "ஆ! பாவி, கல்வி சிறிது கற்ற செருக்கின் பெருக்கினலன்றோ இப்பொழுது நீ யென்னை யிங்ஙனம் ஏளனம் செய்தாய்? இதோ! இந்நொடியில் நின் இறுமாப்பை நீக்குகின்றேன் பார்!" என்று புகன்று அவளை அக்கணமே சபிக்கக் கருதி கமண்டலு ஜலத்தைக் கையில் எடுத்தனர்.

அத்தருணத்தில் அயனருகிலிருந்து அவரடிபணிந்துகொண்டிருந்த ஸாவித்திரிதேவியானவள் உடனே எழுந்து இடது கரத்தில் பளிங்குக் கமண்டலம் இலங்க, அக்ஷமாலை யேந்திய வலது கரத்தை உயரத் தூக்கிக்கொண்டு அம்முனிவனை நோக்கி, "அடா! சினத்திற்கு இடங்கொடுத்து மனத்தூய்மை யிழந்து மதிகெட்ட மாபாவி, நின் பிழை நீ யறியாது, மண்ணோர் விண்ணோர் மாதவர் பணிந்தேத்தும் மகிமை வாய்ந்து மூவுலகங்களுக்கும் முதல் தாயாய் விளங்கும் வாக்தேவியை யேனிங்ஙனம் வீணே சபிக்கத் துணிந்தனை?" என்றவரை யிகழ்ந்து தடுக்க முயன்றனள்.

அண்டையிலிருந்த அமரக்கூட்டங்களும், அவர் தந்தையாகிய அத்திரிபகவானும், அவரது சிஷ்யர்களும் தம்மாலியன்றமட்டும் அவர் கோபத்தைத் தணிக்குமாறு வேண்டியும் அத்தபோதனர் அவர்களது வார்த்தைகளைச் சற்றேனும் செவியுறாது, "துஷ்டே! ஸரஸ்வதி, இக்கணம் நீ மக்கள் வதியும் மண்ணுலகிற்கேகக்கடவாய்" என்று சபித்து ஜலத்தைத் தெளித்தனர்.

முன்பின் ஆலோசிக்காமல் தன்னுயிர்த்தோழியைச் சபித்த முனிவனுக்குத் தன்னுளடங்காக் கோபத்துடன் மறு சாபம் கொடுக்க முயன்ற ஸாவித்திரிதேவியை நோக்கி ஸரஸ்வதி தேவியும்: "என்னுயிர்த்தோழி, மனத்தூய்மையற்றவராயிருப்பினும் இம்மாமுனிவர் மறையோர்குலத்தினில் உதித்தவராதலால் நம்மால் நன்கு மதிக்கத்தக்கவர். ஆதலால் நினது கோபத்தைத் தணிப்பாயாக" என்று அவளைத் தடுத்தனள்.

குற்றமற்ற ஸரஸ்வதி யிங்ஙனம் செற்றம் மிகுந்த இருடிசேகரனால் சபிக்கப்பட்டதைக் கண்ணுற்ற கமலாஸனரும் அவரைநோக்கி "மறைகள் பலவுணர்ந்த மாமுனிவ, மறைவளர்க்கும் மாதவர்க்குப்

பொறையன்றே போற்றத்தக்கது? அங்ஙனமிருக்க அகிலமுமறிந்த நீயேன் மெய்ஞ்ஞான வொளியிழந்து அஞ்ஞான விருளிலாழ்ந்தினுய்?" என்று அவரைப் பலவாறு இகழ்ந்து பின்னர் வாணியை நோக்கி, "வத்ஸே, ஸரஸ்வதி, நீ விசனப்படவேண்டாம். நமது பிரிவாற் ருது நோவுபடப்போகிறவுன் மனத்தைத் தேற்றுமாறு இச்சாவித்திரியும் உன்னைப் பின்தொடர்ந்து வருவாள். நீ மனிதருலகத்தில் ஓர் மகவைப்பெற்று அதின் மலர்முகம்நோக்கும்வரையில் தான் இம் முனிவனிட்ட சாபம் நின்மாட்டு நிலைத்திருக்கும். பின்பு நீ முன் போலிங்குற்று மகிழ்வுடனிருப்பாய்" என்றவளுக்கு ஆறுதல் சொல்லி தன்னுசனம்விட்டெழுந்து நாரதர் கைலாக்குக்கொடுக்க நளிநஸம்பவர் நித்தியகருமம் முடிக்கச் சென்றனர்.

இங்ஙனம் இருடியால் சபிக்கப்பட்ட ஸரஸ்வதியும் இலஜ்ஜையால் தலை குனித்து ஸாவித்திரியுடன் தன்னில்லத்திற்கேகினள். அன்று பகல் கழிந்து இரவு எய்தினவுடனே மிக்க மனத்தளர்ச்சியுடன் துக்கஸாகரத்தில் மூழ்கிச் சித்தப்பிரமை கொண்டிருக்கும் ஸரஸ்வதியை ஸாவித்திரியும் தக்க வசனங்களால் தேற்றித் தணிவுடன் மொழிந்ததாவது:—"ஸகி, ஸ்ரஸ்வதி, இனி நீ யிங்ஙனம் மனந்தளருவதில் பயனென்? விதிப்பயனை விலக்க யாவர் வல்லவர்? ஆதலின் அலர்ந்த செந்தாமரையைப் பழிக்கும் நினது வதனத்தை விகாரப்படுத்தும் கண்ணீரைத் துடைத்துக்கொள். மனிதலோகத்தில் எவ்விடத்தில் இருந்து இனிது காலங்கழிக்க இப்பொழுதுன் மனம் இஷ்டப்படுகின்றது? உன்னிடமிருந்து உனக்குப் பணிவிடைபுரியுமாறு இதோ யானுமுன்னைப் பின்தொடர்ந்துவரத் தயாராயிருக்கின்றேன். இன்றுதொடங்கி நீ யிம்மையோர்பரவும் ஈசனது இணைப்பதத்தை இரவும் பகலும் இருதயத்திலிருத்தி யிறைஞ்சுவாயேல் அவனருளால் நினதுசாபம் சீக்கிரம் நீங்கிப்போம்." என்பதே.

இதனைச் செவியுற்ற ஸரஸ்வதியும் ஸாவித்திரியை நோக்கி, "பிரிய ஸகி, நீயும் என்னுடன் நரருலகம் நண்ணும்பக்ஷத்தில் இச்சாபத்தினுல் உண்டாகும் சோகமும் பிரமனது பிரிவாலுறும் மனத்துயரமும் தினைத்துணையும் எனக்கிரா. அன்றியும் மண்ணுலகில் யானிருந்து திண்ணமுடன் தவஞ்செய்யத்தக்கதோர் ஸ்தானத்தையும் நீயே நன்கறிந்து சொல்வாய்." என்று இயம்பவே அவ்விருவரும் அற்றையிரவை யங்கேயே போக்கி மற்றைநாளுதயத்தில் எழு

ந்து தாமரைத்தவிசோனை மும்முறை வலம் வந்து, சுற்றத்தாரனை வரும் சோகக்கடலில் ஆழ்ந்திருக்கச் சத்தியலோகத்தைத் துறந்து விண்ணதியாகிய மந்தாகினியின் மார்க்கத்தை யநுஸரித்துக்கொண்டே மானிடருலகத்தைக் கிட்டி அம்பரத்திலிருந்துகொண்டே நாற்புறமும் நன்காராய்ந்து பார்த்து பின்னர் பிரமனது புதல்வனும் ஹிரண்யவாஹம், சோணம் என்ற இருபெயர் புனைந்ததமான அழகியவோர் நதத்தைக் கண்ணுற்றார்கள். உடனே கலைமகளும் ஸாவித்திரியுடன் அந்நதத்தின் மேற்கரையில் இறங்கி அங்கே பற்பல பல விருக்ஷங்களும் புஷ்பச்செடிகளும் கொடிகளும் சூழ்ந்து அழகாய் விளங்குமோரிடத்தில் தங்கி, அங்குப் பரிசுத்தமாயும் மநோஹரமாயும் சிலாதலத்தோடு கூடியதுமானவோர் லதாமண்டபத்தைத் தனக்குத் தக்க வாஸஸ்தானமாக வைத்துக்கொண்டனள்.

சிறிதுநேரம் அக்கொடிவீட்டில் இளைப்பாறிப்பின்னர் பாபங்களையெல்லாம் பறக்கடிக்கவல்லதும் பாவனமுமான சோணநதியில் நீராடி அதின் மணலால் ஓர் சிவலிங்கத்தையேற்படுத்தி அதனை ஆர்வத்துடன் அர்ச்சித்தனள். அதன்பின் அமிழ்தத்தின் சுவையைப்பழித்து அதிசீதளமாயும் நிர்மலமாயுமிருக்கின்ற அதனது நன்னீரையருந்தி பிரயத்தினமில்லாமலே கிடைத்தபலவித கனிவர்க்கங்களையும் கந்தமூலங்களையும் புசித்தும், தன்ஸகி ஸாவித்திரியுடன் ஸதா ஸர்வேசுவரரான ஸாம்பமூர்த்தியைத்தியானித்தும் ஸத்கதைகளைப்பேசியும் பகற்காலத்தைப்போக்கி, இரவில் இளந்தளிர்களால்செய்த தலிமத்தில் படுத்து இங்ஙனம் சுகமாய்க் காலத்தைக்கழித்துவந்தனள்.

இவ்வாறு சிலதினங்கள் சென்றுகொண்டிருக்கையில் ஓர்நாள் காலையில் வடதிசையினின்றுவரும் அளவிறந்த அச்வங்களின் அரவம் அவள் காதில்படவே அவளும் இலதாமண்டபத்தினின்றும் வெளியே வந்து அது என்னவென்று வெகுவியப்புடன் பார்ப்புழி, சற்று தூரத்தில் அநேக காலாட்படைகட்கும் துரகவீரர்களுக்குமிடையில் வந்திகள் கட்டியம் கூறச் சேவகர் குடை பிடிக்கச்சேடிகள் சாமரை வீச மிக்கப்பெருமையுடன் புரவிமீதேறி வரும் பதினெண்வயதுடைய பரமஸுந்தரனனவோர் வாலிபனையும் அவனுக்கு அருகில் மற்றொரு பரிமா மீது உயரமும் பருமையும் வாய்ந்த வுருவத்தையுடையோனும் உருக்குக்கவசம் பூண்டவனுமானவோர் கிழவனையும் கண்ணுற்றனள்.

அங்ஙனம் அநேக சேனைகள் புடைசூழச் சென்றுகொண்டிருந்த அத்தருணனும் தனது காலாட்படைகளிடமிருந்து அத்தனிமையானவிடத்தில் இனிது வஸித்துக்கொண்டிருக்கும் இவ்வெழில் மிக்க வணங்கரசிரண்டனையும் கேள்வையுற்று அச்சிறுமிகள் இன்னுரென்று அறியக்கருதி ஆங்கோரிடத்தில் தனது சேனைகளை நிறுத்தித்தானும் குதிரை விட்டிறங்கி அக்கிழப்போர்வீரனோடு மிக்க விநயத்துடன் அவர்கள் இருக்கும் லதாமண்டபத்தைக் கிட்டவே ஸாவித்திரியும் ஸரஸ்வதியோடு அதிதிகளாயங்குற்ற அவ்விருவாடவர்க்கும் தக்கவுபசாரம் புரிந்தபின் அக்கிழப்போர்வீரனை நோக்கி அதிக விநயத்துடன் வினவினதாவது:—"ஐயன்மீர், நீங்களிருவரும் யாவர்? இருப்பிடம் எது? இப்பொழுது எங்குச்செல்லுகின்றீர்கள்? இவ்விளங்குரிசிலது தந்தை தாய் யாவர்? உங்களிருவருடைய பெயரென்ன? எம்மிடமியம்பத்தகு மேல் தயவுபுரிந்து தெரிவிக்கவேண்டும்" என்பதே.

அம்மொழிகேட்ட அக்கிழவீரனும் ஸாவித்திரியைநோக்கி அன்புடன் பின்வருமாறு அறையலுற்றனன்:—

"அன்னைமீர், சிரஞ்சீவியாகிய இச்சிறுவர், ப்ருகுவம்சதிலகராணச்யவனமகாரிஷியின் அருமைபுதல்வர். சர்யாதனெனும் அரசனது அருமைப்புதல்வியும் உலகில் ஒப்பற்றவடிவழகுவாய்ந்தவளும் பதிவ்ரதாசிரோமணியுமான ஸுகன்யையெனும் ஸுந்தரிதான் இவரது தாய். இவர் பெயர் ததீசனென மூவுலகிலும் மொழியப்படும். இவ்விளங்குரிசில் இதுகாறும் தனதுமாதாமகரான சர்யாதனெனும் மன்னவனது மாளிகையில் மகிமையுடன் வளர்க்கப்பட்டுச் சகலவித சாஸ்திரங்களையும் கலைகளையும் கற்பிக்கப்பட்டார். தக்க வயதுற்ற இத்தருணச்சிரேஷ்டரை இப்பொழுது இவரது தந்தையின் பாதம் பணியுவான் இட்டுக்கொண்டுபோமாறு எனது யஜமானர் கட்டளையிட்டிருப்பதால் யானிப்பொழுது இவரை அம்முனீச்வரர்பால் இப்பெரும் சேனையுடன் அழைத்துப்போகின்றேன். யான் சர்யாதனெனும் அவ்வரைபரது தொன்று தொட்டுவரும் சேவகன். எனக்கு விகுக்ஷி என்றுபெயர். ச்யவனமுனி வசிப்பதால் ச்யாவனம் எனப் பெயர்வாய்ந்த அழகிய அத்தபோவனம் இங்கிருந்து இரண்டுக்ரோச தூரத்தில் சோணநதியின் அக்கரையிலிருக்கிறது. இப்பொழுது நுமதுவிருப்பத்திற்கிணங்க யான் எங்களிருவருடைய வரலாற்றை

ஆதியோடந்தமாக வுரைத்துவிட்டேன். நிகரற்ற வடிவழகுவாய்ந்த நீவிரிருவரும் யாவர்? உங்களிருப்பிடம் எது? தேவகன்னிகைபோல் திவ்ய ஸௌந்தர்யமுள்ள இக்கன்னிகை யாருடைய புத்திரி? இவை யெல்லாவற்றையும் ஸவிஸ்தாரமாய்க் கேட்க எமக்கும் மிக்க ஆவலி ருப்பதினல் தயை புரிந்து கூறவேண்டும்" என்றான்.

உடனே ஸாவித்திரி அக்கிழவனைநோக்கி; "ஐயா, நாங்களிருவ ரும் யாரென்பதையும், எங்கிருந்து எதற்காக இங்குற்றிருக்கிறோம் என்பதையும் இன்னும்சிறிதுநாளில் நீங்களே தெரிந்துகொள்வீர்கள். இங்கு யாமிருவரும் இன்னும் பலநாள் தங்கியிருக்கத் தீர்மானித்தி ருக்கின்றோம். இச்சிறுவரது தந்தை வசிக்கும் வனமும் இவ்விடத் திற்குச் சமீபமாயிருப்பதால் ஏமக்கும் நமக்கும் அடிக்கடி பழக்கமு ண்டாகிப் பலமுறை பேச விடமுண்டாகும். தற்செயலாயெமக்குத் தரிசனமளித்த இவ்விளைஞர் அன்புறு சிந்தையரான இத்தையலரை எந்நாளும் மறக்கக்கூடாது." என்று புன்னகையுடன் புகலவே, தநீ சனும் மாரிகாலத்திய மேகத்தின் முழக்கம்போல் மிக்க கம்பீரமான குரலுடன் விகுக்ஷியெனும் அந்த வ்ருத்தஸேவகனை நோக்கி: "ஐய, இவ்விரு தையலரும் நம்மால் அடிக்கடி நன்குமதிக்கப்பட்டவர்க ளாக நம்மாட்டு நன்கு அருள்புரிந்திடுவார்கள். நல்லது; நாமிப்பொ ழுது எனது தந்தையிடம் துரிதமாய்ச் செல்வோம் வாரும் எழுந்தி ரும்." என்று புகல உடனே இருவரும் முன்போல் குதிரைமீதேறிக் கூடவந்தசேனைசூழக் கொஞ்சமும் காலம் தாழ்க்காது கடுக வழி நடந்து அச்சோணநதத்தின் அக்கரையில் இருக்கும் ச்யாவனம் என் னும் தபோவனத்தைக் கிட்டி அங்குத் தவம்செய்துகொண்டிருக்கும் ச்யவனரது பாதத்தில் வந்தனம் புரிந்தனர்.

இங்ஙனம் அவ்வெழில்மிக்க இளைஞன் தன்னை விட்டுப்பிரியவே கலைமகளும் அவன் கண்ணிற்கு மறையுமளவும் அவன் சென்ற திக் கையே காதலுடன் கண்ணுற்றுக்கொண்டிருந்த பின்னர் பெரிதும் பிரயாஸத்துடன் தன் பார்வையைத் திருப்பினாள். அதன்பின்ன வள் அச்சிறுவனது பிரிவாற்றுமையால் அன்றைப் பகலை அதிக வருத்தத்துடன் போக்கி இராக்காலம்வந்தவுடனே அங்கமெல்லாம் தளர்ச்சியடையத் தளிரால் செய்த தளிமத்தில் சயனித்து அநங்க னது அம்புகளால் துன்புறுத்தப்பட்டவளாக நித்திரையில்லாமலே நிசி முழுவதையும் போக்கினாள்.

இளைஞனது விரகத்தால் இங்ஙனம் இவள் மேனி கிருஷ்ண பக்ஷத்திய சந்திரன்போல் நாளுக்குநாளிளைத்துக்கொண்டுவரவே இவள் ஸகியாகிய ஸாவித்திரியும் தக்க வுபசாரங்கள் செய்து அவள் தாபத்தைத் தணிக்க முயன்றும் அது அவள் விஷயத்தில் முற்றும் பயனற்றதாய் முடிந்தது. இங்ஙனம் பலநாள் செல்லவே ஒருநாள் ததீசனை யவன் தந்தைபாலிட்டுச் சென்ற விகுக்ஷியென்போன் ச்யவனரது ஆச்ரமம் விட்டு முன்பு தன்னுடன் வந்த சேனைகள் திரண்டு வர தன் யஜமானனிருக்குமிடத்திற்குத் திரும்பிச்செல்லுங்கால் ஸாரஸ்வதி யிருக்குமிடத்தைக் கிட்டவே தன்னுடன்வந்த பரிஜனங்களைச் சற்று தூரத்தில் நிறுத்தி தன் பின்னொருவனிருந்து தனக்குக் குடைபிடிக்க அத்தையலர்நாயகத்தைத் தரிசிக்கச் சென்றனன்.

அவனைக் கண்ணுற்ற கலைமகளும் அவனுக்கு ஆஸனமளித்துத் தக்க வுபசாரம் புரிந்தபின்னர் அவனை நோக்கி "தக்கோரே, தாமிட்டுச்சென்ற தருணனான ததீசனென்பவர் க்ஷேமமாயிருக்கின்றாரா?" என்று மிக்க ஆதரத்துடன் வினவவே அன்னவனும் அவளை நோக்கி "அன்னைமீர், எம்மிளைய யஜமான் க்ஷேமமாயிருக்கின்றார்; அன்றியும் உங்களிருவரையும்பற்றி யடிக்கடி உள்ளமுவந்து பேசுகிறார். ஆகிலும் காரணம் ஏதுமில்லாமலே நாளுக்குநாள் அவர் மேனியில் மிக்க மெலிவுற்று வருகின்றனர். வாணினியாகிய மாலதியென்னும் ஓர் மடந்தையும் உங்களுடைய யோகக்ஷேமத்தையுள்ளபடி யறிந்துவருமாறு அச்சிறுவனா லனுப்பப்பட்டவளாக்கூடிய சீக்கிரத்தில் இங்கு நும்பக்கல்வருவாள்." என்றுரைத்து வெகுநேரம் அவளுடன் வார்த்தையாடிக்கொண்டிருந்து பின்பு பரிஜனங்களுடன் தன்னிருப்பிடத்திற்கேகினன்.

மற்றை நாளுதயத்தில் மாலதியென்னும் விலைமகளும் சிறந்த குதிரைமீதேறி தாம்பூலந்தாங்குபவளுடன் காமநோயால் கனவருத்த முற்றிருக்கும் கலைமகளைக் கிட்டி அவளையும் அவளது ஸகியாகிய ஸாவித்திரியையும் அன்புடன் அடிபணிந்து அவ்விருவராலும் ஆதரத்துடன் ஆலிங்கனம் செய்யப்பட்டு அவர்களளித்த ஆஸநத்தில் உட்கார்ந்து அவ்விருவர்க்கும் அச்சிறுவன் சிரமேல் கைகுவித்துச் செய்தவந்தனத்தை விளம்பி வெகுநேரம் அவர்களுடன் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தனள்.

இங்ஙனமிவர்கள் இனிது பேசிக்கொண்டிருக்கையில் ஸாவித்திரியும் மத்தியான்ன ஸ்நாநம் புரியுமாறு சோணநதத்திற்கேகவே, அதுஸமயமறிந்த மாலதியும் மலர்ப்படுக்கையில் படுத்து மதனவேதனையால் மனம் நொந்திருக்கும் கலைமாமகளது கர்ணத்தில் இரகசியமாக மொழிந்ததாவது:—"தேவி, நம்மாட்டு ரகசியமாய் விண்ணப்பம் செய்யவேண்டியது ஒன்றுளது. அதனைத் தாம் சற்றுகவனத்துடன் கேட்டருளவேண்டும்" என்பதே.

இம்மாற்றம் செவிபுக்கவே ஸரஸ்வதியும் அதுதன் காதலன் ததீசனது ஸங்கதியாயிருக்க வேண்டுமென்று தன்னுள் உன்னி மலர்மெத்தையினின்று மிக்க சிரமத்துடன் மெல்ல வெழுந்து "ஸகி, மாலதி, 'சற்றுகவனத்துடன் கேட்டருளவேண்டும்' என்று நீ எனிங்ஙனம் மிக்கப்பணிவான மொழிகளை வீணே மொழிகின்றனை? இப்பொழுது எனது உயிருமுடம்பும் உன் வசத்திலிருக்கின்றன. இக்காலையெனக்கு நீ தான் நற்சகோதரி, நற்றோழி, நற்பாங்கி, நல்லுயிர் துணை. ஆதலின் இப்பொழுது எவ்விதரகசியமேனும் எட்டுணையும் கூசாமல் என்னிடமியம்பத்தடையில்லை." எனக்கேட்டமாலதியும் அவளை நோக்கி "பெருமாட்டி, சிற்றின்பங்களின் சீர்மையையும், ஐம்புலன்களின் ஆக்கத்தையும் இளமைப்பருவத்தின் இறுமாப்பையும் நீர்யேற்கனவே முற்றுமுணர்ந்திருக்கின்றீர். ஆதலால் யானிப்பொழுது உம்மிடம் உரைக்கப் போவதைக் கள்ளமொழியென்றெள்ளளவும் தள்ளிவிடாது உள்ளதனையுரைத்தாளென்றே உட்கொள்ள வேண்டும். அச்சங்கதியாதெனின், எம்மிறைவன் என்றும்மைக்கண்ணுற்றனரோ அன்று முதல் அவர் அநங்கனால் மனங்கவரப்பட்டு அல்லும் பகலும் நல்லுறக்கமில்லாமல் மனநோய்மிகுந்து தவித்துக்கொண்டிருக்கின்றார். அவரது வடிவழகையும் வாய்மையையும் தூய்மையையும் அன்பையும் ஆண்மையையும் தாம் ஏற்கனவேயறிந்திருப்பதால் அடியாள் அவைகளை யெடுத்துரைப்பது அநாவசியம் அவரேயுமக்குத் தகுந்த நாயகன். நீங்களே அவர்க்கு அநுரூபையான அந்தரங்கமகிஷி. ஆதலின் தாம் இக்கணம் அவரைப் பர்த்தாவாக அடைய மனமிசையாவிடில் அவரது உயிரைக் கவருமந்தகன் நீரேயல்லதுவேறில்லை" என்பதேயென்றாள்.

அமிர்தவர்ஷம்போல் அங்கமெல்லாம்குளிரச்செய்யும் அம்மொழிகளைச் செவியுற்ற ஸரஸ்வதியும் அகக்களிப்புடன் அம்மாலதியை

நோக்கி: "ஸகி, மாலதி, என்னுயிருடைப்பு முனக்குரியனவென்று யான் ஏற்கனவே சொல்லியிருக்க நீ இவைகளை யுன்னிஷ்டப்படி யேவல்கொள்ள என்ன தடை?" எனவே மாலதியும் மனமகிழ்ந்து அவளிடத்தில் விடைபெற்று உடனே ததீசன்பால் சென்றனள்.

ஸரஸ்வதியும் தனது அந்தரங்கஸகியாகிய ஸாவித்திரிக்கு மாலதி மொழிந்த ஸங்கதிகள் யாவையும் ஸவிஸ்தாரமாய்ச் செப்பவே அவளும் அதிக ஆநந்தத்தில் ஆழ்ந்தினவளாயினள். பின்னர் ஸரஸ்வதியும் ஒரு நொடி யொரு யுகமாக அன்றைப்பகலின் சேஷத்தைப் போக்கி ஆதித்தன் அஸ்தமித்தவுடனே தன் அன்புமிகு ததீசனது வரவை அதிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனள். இதுநிற்க, காம வெறியால் கலக்கமுற்ற மனத்தையுடைய ததீசனும் மாலதியிடமிருந்து கலைமகள் மொழிந்த கட்டுரைகளைக் காதாறப்பருகவே அவள்பால் தனக்குள்ள காதல் முன்னிலும் மும்மடங்கதிகமாகி மாலதி வழிகாட்ட அன்றிரவே ஸரஸ்வதிபால் சென்று காந்தர்வமுறைப்படி யவளை மணந்து தன் எழிலுக்கும் இளமைக்கும் அன்புக்கும் ஏற்றபடி அவளுடன் சேர்ந்து இல்லற ஸுகத்தை யினிதாக அனுபவித்து வந்தனன்.

கலைமகளும் காசினியில் உருவெடுத்துவந்த காமனெனக்காந்திமிகு காத்திர ஸௌந்தர்யம்வாய்ந்த தனது காதலன்பால் தனக்குண்டான நம்பிக்கையினால் தான் இன்னுளென்றும் விண்ணுலகினின்று தான் மண்ணுலகுறுமாறு நேர்ந்த காரணத்தையும் ஸவிஸ்தாரமாய்க் கூறினள்.

அவ்விந்தைமிகு விருத்தாந்தத்தைச் செவியுற்ற ததீசனும் தன்னுளடங்கா வாச்சர்யமு மானந்தமுமுற்று அவள்பால் முன்னிலும் முப்பதுமடங்கதிகமான அன்புடன் அநேகநாள் கழித்துவந்தனன்.

ஸரஸ்வதிதேவியும் தைவச்செயலினுல் கர்ப்பவதியாகி நற்பருவத்தில் நிகில லக்ஷணங்களோடுகூடியவோர் புத்திரனைப் பெற்றனள். பெற்றவுடனே "இச்சிசுவுக்கு என தருளால் எல்லா வேதங்களும், வேதாங்கங்களும், சாஸ்திரங்களும் கலைகளும் பிறர் கற்றுக்கொடாமலே ஸ்வயமாகத் தோன்றக்கடவன" என்று வரமளித்து பிரமனது கட்டளைப்படி சாபம் நீங்கினவளாகத் தனது ஸகி ஸாவித்திரி தேவியுடன் ஸத்தியலோகம் சென்றனள்.

தநயனைப் பெற்றவுடன் தரணியில் தன்னைத்தனியே விட்டேகின நாமகளை நிதமும் நினைந்து நினைந்து மனமுருகிய ததீசனும் தனது ஸகோதரனது பத்தினியாகிய அக்ஷமாலை யென்பாளிடத்தில் அக்குழந்தையை ஸ்தன்னியம் கொடுத்து போஷித்துவரும்படியேற்பாடு செய்து வாணியின் விரகத்தைப்பொறுச்சமுடியாது விரக்தியுடன் தவஞ் செய்யுமாறுவனத்திற்கேகினன்.

ஸரஸ்வதி என்றையதினத்தில் அக்கான் மூளையை யீன்றுளோ அன்றைத்தினமே அக்ஷமாலையும் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றதனல் அவ்வக்ஷமாலையே அவ்விருகுழந்தைகளையும் ஈஷத்தேனும்பேதமின்றி மிக்கப்பிரியத்துடன் போஷித்துவந்தனள். அவ்விருவரில் ஸரஸ்வதி யீன்ற மைந்தனுக்கு ஸாரஸ்வதனென்றும் மற்றொருமகவுக்கு வத்ஸனென்றும் விநோதப்பெயர் சூட்டப்பட்டது.

இளமைப் பருவம் நீங்கி யௌவனப்பருவமுற்ற ஸாரஸ்வதனும் தன் அன்னை யினது அருளின்பெருமையால் ஸகல சாஸ்திரங்களையும் அவைகளின் அர்த்தங்களையும் உள்ளங்கையிலிலங்கு நெல்லிக்கனிபோல் நன்குணர்ந்து தனக்குச்சகோதரனும் அன்பனுயும் சீஷனுயுமிருக்கிற வத்ஸனுக்குத் தானுணர்ந்த நூல்கள் யாவையும் கசடறக்கற்பித்து விவாஹமும் செய்வித்துப் பத்தினியோடுகூடிய அவனுக்கு ப்ரீதிகூடமெனுமிடத்தை வாஸஸ்தானமாக்கிக்கொடுத்து தான் மௌஞ்சி, மரவுரி, மான்றோல், தண்டம், சடை முதலியதவசிக்கோலம் பூண்டு தனது தந்தை தவஞ்செய்யும் தபோவனம் சென்று அவரருகிலேயே தானும் அருந்தவம் புரிந்துகொண்டிருந்தனன்.

மோ. க. சடகோபாசாரியர்.

இந்தியமாதர்.

ஒரு தேசம் முன்னுக்கு வருவதற்குப் பலகாரணங்களுண்டு. எந்தத் தேசத்திலும் நாகரீகத்தின் உயர்வுதாழ்வை யறிவதற்கு அத்தேசமாதர் தேசாசார ஒழுங்கில் வகிக்கும் நிலைமையே முக்கிய ஆதாரமாகும். வேதம், சன்மார்க்கம், ஆசாரம் என்னும் இவ்விஷயங்களில் மாதர்க்குள்ள அறிவளவே, ஒரு தேசத்தாரது பெருமை விளங்குமென்பது திண்ணம். வேதம் வரையறுத்துதவும் வாழ்க்கைத்துணை நலனுய சட்டதிட்டங்கள் ஒருதேசத்தாரின் வழக்கம், நடவடிக்கை இவைகளைத் திரட்டியுருவாக்கக் காரணமாகின்றன. நமது தாய் பூமியாகிய இவ்விந்தியாவின் ஒவ்வொன்றும் சட்டங்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. மநுதர்மநூலிலுள்ள ஓர் வாக்கியத்தால் ஜனசமூக சீர்திருத்தமே கண்ணுங்கருத்துமாயுள்ள ஒருவனது வாயைக்கட்டிவிடலாம். நன்மை பயக்கும் நவீனமாற்றங்கள் நம்மைச்சுற்றிப் பல நேருழிக்கண்டிருந்தும், ஒன்றுக்குமுதவாப் பண்டையக் கொள்கைகளைச் சாதாரண காரியங்களிலும் பிரவேசிக்கவிடுகின்றோம். இங்கே பூர்வீக ஆசிரியர் வாக்கின் முன் யாவருந் தலைகுனியவேண்டியதே. முயலின், விடாப்பிடியாய்ப் பழைய ஆசாரங்களை சிதைந்தநிலையினும் ஆதரித்து, இத்தியரிற் பெரும்பாலர் தமக்கென்றே காலத்திற்கேற்ப ஒரு வழிபுதுக்கிக் கொள்ளவிதியற்றிருக்கின்றனர். நன்மையோ தீமையோ விளையுமென்பதைச் சற்றுங்கவனியாமல், வழக்கத்திற்கு அடிமைபோல் அடிபணிந்திருத்தலும், ஞாலமாதியிற் கைக்கொண்ட ஞானத்தில் அந்தகர்போல் நம்பிக்கைவைத்தலும்,

ஒரு தேசத்தை அசதியில்லாத்தாழ் நிலையிலேயே நிறுத்த உதவுமே யன்றி வேறல்ல. சிறந்த அறிவும் செறிந்தகுருட்டாட்டத்தில் மழுங்கியே போயிற்று. சீர்திருத்தத்தில் தலையிடுவதென்றால் சுலபமான காரியமல்ல. ஏனெனில் அதற்கு மாறாய் எதிர்ப்படும் இடையூறுகள் பல. நமது நாட்டார் முன்னோரது பயனிலாக் கொள்கைகளைக் கைநெகிழவிடுவதென்றால், தம்முன்னோரீட்டிய தனக்குவியலனைத்து மிழந்தனமென்று எண்ணுகின்றனர். கணக்கற்ற விரோதங்களையும் இடையூறுகளையும் கடத்தல்வேண்டும்.

இதுவே பரதகண்டமென்றழைக்கும் நம்மிந்தியாவின் தற்கால நிலைமை. உலகெங்கும் மதாசாரம் தேசாசாரத்திற்கடுத்த ஒழுங்குகள் வாழ்க்கைப்பயனுக்கு இன்றியமையாதனவென்பது சொல்லாமலே போதரும். அவ்வொழுக்குகள் இந்தியநாட்டில் மிகுந்திருக்கின்றன. ஆனால் பரம்பரையாய் மனிதர் தனி அபிப்பிராயங்களைப் பொருள்செய்யாமல், அசட்டைசெய்துவந்த ஒழுங்குகள் ஒரு தேசத்தை முன்னுக்குக் கொணருமாற்றலுடையனவல்ல. இந்த நாட்டில் விசேடமாய்ப் பெண்டிருக்கென்றமைந்துள்ள கட்டுப்பாடு சட்டமுறைகளை இங்கெடுத்தியம்புவதால் நமது மாதரின் தற்போதிய நிலைமை இத்தகைத்தென்பது வெளிப்படும். பாலபருவத்திலேயே ஆண் பெண் என்னும் இருபாலர்க்குமுள்ள வித்தியாசம் நன்கு குறிக்கப்பட்டிருக்கின்றது. மணக்கோலம்பூணுக்கன்னிகை பருவம், பிறந்ததுமுதல் பத்தாண்டுகளே. ஒரு குடும்பத்தில் பெண் பிறத்தல் துரதிர்ஷ்டமென்பர் அநேகர். பிள்ளை ஆணோ பெண்ணோ வென்னும் ஐயம் பெற்றோர்க்கு விடாக்கவலைக்கிடனாகும்; பெண்ணினும் பிள்ளை உயரிதென்று, ஆண்பிறப்பையே விரும்புவர். தாய்மார் ஆண்பிள்ளைகளிடங்காட்டும் அன்பும் ஆதரவும் பெண்பிள்ளைகளிடமில்லை. இத்தகைய வேற்றுமைக்குக் காரணம், நமது மாதர் ஒருவகையான தாழ்விற்கும் அடிமைத்தனத்திற்கும் சாதாரணமாயுள்ளாயிருத்தலே. இன்னார் பெரும்பாலும் கல்விமணமில்லாக் கான்மலர்களாய், நன்னெறிப்பழகி, நற்குண நல்லாசாரங்களைக் கையாடாச் சித்திரப்பாவைகளாய், நயம்படப்பேசி நாதனுக்குதவும் ஆற்றலின்றி இருத்தல்பற்றி, நமது நாட்டிலுள்ள கைம்பெண்கள் தம்மின்னுயிர்க்காதலர்க்கு, ஆதியில் கடவுள் கருதியபடி, ஒப்பருந் "துணைவி"யாயிருக்கப்பெற்றிலர்.

ஒரு தேசம் முன்னுக்குவர முக்கியவேதுவாயிருப்பவர் பெண் பாலர்களென்னும் இவ்வுண்மையை உணரர்து, ஆண்பிள்ளைகளின் அறிவை அபிவிர்த்திசெய்யக் காட்டும் ஊக்கம் பெண்பிள்ளைகளிடம் காட்டுவதில்லை. நமது பண்டையாசிரியர் ஆண்கல்வியை விவரிக்கின்றாரேயன்றி, முதலேடுமுதல் இறுதியளவும் எந்நூலினும் பெண் கல்வியின் கடமை பெற்றோரைச் சார்ந்ததென்னும் பொருளடங்கிய வரி ஒன்றேனுங் காணோம். கல்வி இல்லறத்திற்கடுத்ததல்ல வென்பதுபோலும். படிக்கவும் எழுதவுந் தெரிந்த பாவையர் துரதிர்ஷ்டசாலிகள். ஒரு பெண்ணிற்குரிய பயிற்சியனைத்தும் அரைகுறையானதே. தாய்மார் தமக்குத் தெரிந்தளவே தம்மக்கட்கு அறிவூட்டுவர். மதவிஷயமாயென்றாலோ அதில் மிக்க கவனமுண்டு; ஆகலால்தான் இவ்வளவு குருட்டாட்டம். தாயறிவே பிள்ளைக் காகக் கொஞ்சமாயிருப்பினும் இளமபுந்தியில் அழியாமற் பதியத் தவறுகிறதில்லை. தாய்மார்க்குப் பெண்களின்மேல் மிக்க அதிகார முண்டு; அவ்வளவு அதிகாரம் ஆண்பிள்ளைகள்மேற் செலுத்துவ தில்லை. தேசாசார ஒழுங்கில் மாதரார் இருக்கவேண்டிய விதம், அவர் பின்பற்றவேண்டிய விதிகள் ஆகிய இவைகளைப்பற்றி விஸ்த ரிக்கின்றனர். பாவையர் வெளிப்போந்து தமது செய்கையால் மேம் பாடடையும் மார்க்கம் ஒன்றுமின்றி, தினமும் ஒவ்வொருநாழிகையும் தம் புருடர் பிள்ளைகளுக்குரிய காரியங்களில் உழைக்குந் தொழி லையே மேற்கொண்டிருக்கின்றனர். நாளைச் செய்வதன்னார்க்கு இன்றையச்செய்கையின் பிரதிபிம்பமே.

மேனுடுகளில் ஜனங்கள் மகிழ்வுற்று நன்னிலையிலிருத்தல் பெண்களாலேதான்; ஆனால் இந்தியமாதர் அப்படிச் செய்கின்றார்க ளென்று சொல்ல எள்ளளவும் இடமில்லை. தற்காலத்திருப்பவர் இத்தகைய தாழ்விற்கு இடங்கொடுத்துவருகையில், நாகரீகப்படியில் உயர்ந்தேறுவதென்பது நமக்கு முடியாதகாரியம். இந்தியமாதரை பல்கட்டுப்பாட்டுக்குள் உய்த்திருக்கும் விதமும், அன்னார் விருப்ப மும் நாட்டமும் சென்றழியக் காட்டியிருக்கும் மாறான வழியும், நாளளவில் தங்கள் சீர்திருத்தத்திற்குத் தாமே இடையூறாயிருக்க ஒருவகையான தப்பெண்ணத்தை அவர்கள் மனதில் உண்டாக்கின. ஆதலால்தான் இக்காலத்தில் பெண்களுடைய நன்மையைக் கோரி யாதேனுமோர் சீர்திருத்தத்தைச் செய்யப்புகின், அது அவர்கட்குத்

தீமையாய்த் தோன்றுகின்றது. பல நூற்றாண்டுகளாய் ஜனங்களாலேற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்கள், மெல்லிய மாதர்பால் கடுமையாயுள்ளன. யாரேனும் அன்னோர் நிலைமையை ஒழுங்காக்க முயன்றால், அது பிரமாதமான பகையும் பரிகாசமுமாய் முடியும். சாமான்யர்களை சுலபமாய்க் கலங்கச்செய்யும் கேலியும் பரிகாசமும், பரோபகாரசிந்தையுடைய மகான்கள் நன்முயற்சியையும்வீணாக்குகின்றன.

இந்தியமாதர், கூண்டிலடைபட்ட குருவிகளைப்போல், அந்தப்புரங்களில் அடங்கி வசிக்கின்றனர். அன்னோரில் பெரும்பான்மையோராடை அவ்வளவு பொருத்தமுடையதல்ல. தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதிக்கும், செய்யவேண்டிய பல இழிவான கைத்தொழில்கட்கும் அது மேனாட்டார் ஆடையைவிட விசேஷமென்னலாம். படிப்பதினாலும் கவனிப்பதனாலும் எய்தும் பயனின்றியிருப்பதால், அன்னோர் கருத்து அந்தப்புரமதிலைத் தாண்டிப்போக வழியில்லை; அவர்கள் சிந்தையுமப்படியே. நல்ல ஆசாரங்களுக்கு அந்தகராய் வசித்து, குருட்டாட்டத்திலும் தப்பெண்ணத்திலும் பழகி, அன்னோர் நன்னியமத்தைக் கைப்பற்றி நடக்க விருப்பமில்லாதவராய் விளங்குகின்றனர். அறிவைச் செலுத்தித் தப்பிக்கவேண்டிய விஷயங்களை நத்தேயமாந்தர் மாதரிடம் ஒருக்காலும் பேசத் துணியார். சம்பாஷிக்குங்காலத்தில், சமைத்தலின் உயர்வு தாழ்வு, வீடுகளைச் சுத்தமாய் வைத்தல், ஆடையாபரணங்கள் முதலிய இல்லறத்திற்கடுத்த காரியங்களைப்பற்றியேயன்றி, வேறு விஷயங்கள் பேசலரிது. தேர்ந்த புத்திக்குரிய ஒவ்வொரு சல்லாபத்தையும் சாக்கிரதையாய் விட்டொழிப்பர். இதனால் மாதர் உயரிய விஷயங்களைக் கண்டறிய அசக்தராகின்றனர். தேசத்தார் முன்னுக்குவரத்தக்க வழிகளென்றால், அவர்களுக்கேதோ விலக்கப்பட்டதெனத் தோன்றும். மாதர், அசங்கதமான வேடிக்கைகளைப் பார்த்தும், நாகரீகத்திற்கடுக்கா வீண்பேச்சுகளிலார்ந்தும் காலங்கழிப்பதைக் கேட்பாரொருவருமில்லை. இவை இறுதியில் கனவிலும் நினையா விபரீதங்களைக் கொண்டுவருமென்பதை யோர்கிலர். மேனாட்டில் உள்ளதுபோல் இந்நாட்டினும் மாதர் அறிவு, பயிற்சியால் திருந்துமியல்புடையதே. தேசங்கள் சிருஷ்டியில் அமைந்துள்ள வேறுபாட்டால், அறிவு வித்தியாசப்படுமென்பது பொருந்தாது. இந்தியமாதர், தற்சமயம் வசிக்கும் தாழ்ந்தநிலைமை கடவுளால் குறிக்கப்பட்டத

ல்லவ; அவர்களும் அவ்வாறிருத்தல் அவர்கள் மேற்சுமந்தகடமையும ல்ல. இந்நிலைமைதானு வாழ்க்கைத்துணை நலனுக்கின்றியமையாதது? ஜனங்கள் சகலத்தினும் விர்த்தியடையப் பெண்கல்வி ஒரு முக்கிய காரணமேயன்றி, காரியமன்று. ஒன்றுக்கொன்று நெருங்கிய ஒற்றுமையுடையன. பெண்கள் கல்வியறிவும், ஆசாரச் சீர்திருத்தமுங் குன்றியிருக்குமளவும், ஒரு தேசம் நாகரீகமடைய முடியாது; அடைந்தாலும் நிலைப்பதருமை. நாகரீகம் தலையெடுக்குந்தேசத்தில், மாதரை இத்தகைய மடமையில் குருடரைப்போல் வருந்தவிடுதலுங்கூடாது. இயல்பாகவே வித்தியாசம் பொருந்தியுள்ளவைகளை ஒருங்கே சேர்ப்பதல்ல நமதெண்ணம். மாதர்போக்குக்கும், ஆடவர் போக்குக்கும் வேற்றுமை என்றுமிருந்தேதீரும். உலகத்திற்கு ஒரு பெண்ணின் ஆழ்ந்த கல்வி முக்கியமானதல்ல; ஆனால் அவளிடம் கரும்பாம்பு விழுங்கிய கருமணிபோல மணந்துகிடக்கும் சில நற்குணங்களைப் பயிற்சியால் விளக்கவேண்டியதே. நமது மாதரின் அறியாமை இல்லறத்துடன் எவ்வளவு நெருக்கமாய்ப் பின்னப்பட்டிருக்கிறதென்றால், எவ்விதச் சீர்திருத்தமும் திடீரெனச் செய்யமுயலின் பயன்றாத்தக்கதன்று. மாதர்க்குத்தக்கவிதமாய்க் கல்விகற்பிப்பதே, அவர்கள் சீர்திருத்தத்திற்கு நாம் இப்போது செய்யக்கூடிய ஆதாரம். சங்கதி மலிந்தகல்வியறிவை நமது மாதர்க்கு நிலைபெறப்புகட்டுவதனால் நமது நாட்டிற்கு நன்மையுண்டாகும். இந்தியாவிற்கு நற்காலம் வந்ததென்று, அப்போதுதான் தேசசரித்திரத்தில் வரையலாம். இந்தியா நமது தாய்பூமி யென்றும், நாமும் சுதேசாபிமானிகளென வெளியேறவுங்கருதினால், நமது மாதரின் தற்போதிய கேவலநிலைமையை அவசியம் மாற்றவேண்டும். அங்குமிங்கும் குதித்துவிளையாடு மழவிளங்கன்றைக் கொண்டுபோய் நுகத்தடியில் பிணிப்பதுபோல, பால்மணமாறாத சிறுமிகளைத் தாலியைக் கொண்டு மணவாளருடன் சேர்க்கும் இளமையில் வதுவை பெண்கல்வி பொதுவாய் நாடெங்கும் பரவமுயல்வதற்குமுற்று மாறானது; அதனைப் பெரிய இடையூறென்னலாம். இந்தியமாதர்களைப்புதப்பிக்கச் சிறந்தகல்வியும் தூயமதக்கொள்கையுமே வேண்டும். என்ன ஸங்கடம் நேரினும், நமது மாதரை, அஞ்ஞாரிப்போதமூழ்ந்திருக்கும் அறியாமை சக்தியினின்றும் கைதூக்கிமீட்பது நமதுகடமையல்லவா? அவர்கள் நன்மைக்கென்றே பலசபைகளேற்பட்டு உழைத்

துவருகின்றன; ஆனால்,ஊதியங்காண்பதரிது. இதனால் ஊக்கத்தைக் கைநெகிழவிடலாகாது. தென்னிந்தியராகிய நம்மைப்போலாகாமல், தேசமீட்பையே பெரிதெனக்கருதி, அதனால்நேருந்தீமைகளைத் திரணமாய் மதித்துவரும் மெய்த்தேசாபிமானிகளாய் பங்காளநாட்டாருள் ஒருவர்சொல்வதை இங்கு கவனித்தற்பாலது: "பங்காளத்தில் நன்ருய்ப் படித்த ஒரே இந்துமாதிருந்தால், அவள நிமித்தம் எவ்வளவு திரவியம் செலவிட்டிருந்தாலும், அது ஒரு பெரிதல்ல" என்கிருர்.

இளமையிலேயே கன்னிகாதானஞ்செய்து பெண்களைத் துலைத்துவிடும் வழக்கம் (கல்யாணம் என்பதின்னதென்று அவர்கள் அறியாமுன்னரே), அவர்கள் மதியைக்கெடுக்க ஒரு காரணமாயிருக்க வேண்டும். அறுக்கமுடியாப் பாசத்தில் அவர்கள் ஒருதடவை சிக்கிக்கொண்டபின், அன்னுர் இளம்புந்தி இயற்கைவழியில் அடையும் அபிவிர்த்தியின்றிச் செயர்க்கை எத்தனங்களால்உருப்பெருகின்றது. அவர்களின் குணுகுணங்கள் அப்போதுதான் உறப்பெற்று வெளிவருகின்றன. மனிதருடைய சித்தத்திற்குப் படிந்திருத்தலே, மாதர் வாழ்க்கையின் முடிவுபோலும். சிலவிடங்களில் ஒருவன் பல பெண்களை மணம்புரிவதால் நேருந்தீங்குகளுக்குக் கணக்கில்லை; அதனால் பெண்கள் மிக்க இன்னலுக்காளாய் வருந்துகின்றனர். நமது பெண்கள் கல்யாணமே இத்தரைதலத்தில் சந்தோஷத்தைத் தரத்தக்கதென்று, அதையே மற்றெதினும் மேன்மைத்தென விரும்புவர். சுயேச்சையென்னும் பதத்தின் பொருளை அன்னுர் உணர்ந்திலர். அவர்கள் யார் கீழேனும் அடங்கியிருத்தல் வேண்டும். சிறுவயதில் தந்தையரும், யௌவனத்தில் கணவரும், முதுமையில் பிள்ளைகள் அல்லது குடும்பத்தலைவரும், முறையே அவர்கள்மேல் அதிகாரஞ் செலுத்திவருகின்றனர். பெண்களுக்கென்றேற்பட்ட விதிநூல்களின்பாஷையை நோக்கின், சிறுபிள்ளைகளை நடத்த உண்டுபண்ணின ஒழுங்குகள் என்னலாம்.

இதைவிட்டு இந்திய விதவைகளின் வாழ்க்கையையோசிக்கின் அது இதனினுங் கேவலமே. கணவனிறந்தவுடனே, மனைவி தன் ஆபரணுதிகளைக் கழற்றி எறிந்துவிடுகிருள். இல்லறத்துக்குக் குறிப்பானவை யனைத்தும் அவளைவிட்டொழிகின்றன. கணவனிழந்த கைம்பெண்ணை எவருங் கண்டால் பரிதாபப்படுவதியல்பு: அதற்கு மாருய் நன்னுட்டில் அவளை அனைவரும் . அசட்டைசெய்வது, அறி

யாமையேயாம். அவர்களை மிருகங்களைப்போல் நடத்துவது தவறு. விதவையென்னும் பேரே நிந்தனைக் குறிப்பாவது கூடாது. சாஸ்திர விதிப்படி அவள் புக்ககத்தார் உயிருள்ளளவும் அவளையும் அவள் பிள்ளைகளையும் காக்கவேண்டியது கடனாகும். அப்படிச் செய்யாவிடில், அறியாப்பேதை! அவள் என்னசெய்வாள். பாவம்! செய்வதின்னதென்றறிகிலளாய், இவ்வுயிர்வாதைக்குடைந்து, தான் இனி உவகையுறுவது குதிரைக்கொம்பென நம்பிக்கையிழந்து, வர வர தேகம் மெலிந்து வாடுவாள். ஒரு விதவையின் வாழ்நாளை ஒழுங்காய்க் கழிக்க கடுமையான விதிகள் பலவுள. அவள் தபசினால் காயக்கிலேசஞ்செய்து தன்னை வசப்படுத்தவேண்டும். இளமையில் கணவனை யிழந்தாலும், புனர்விவாகம் செய்யலாகாது. விதவைகள் தங்கள் தேசத்தார்க்கும் மிக்கப் பிரயோசனமுடையவர்களாயிருக்க மார்க்கமுண்டு; அதுவே உசிதம். கணவரை யிழந்து உயிர்பிழைக்கும் விதமின்றி அடிமைகளைப்போல் உழைப்பதையும், அதனால் நேரும் கணக்கற்ற நிர்ப்பாக்கியங்களையும் நிறுத்தும் வகையானது, உபயோகமுள்ள வேலைகளில் விதவைகள் தம் மனதைச் செலுத்துவதே. புத்தி சாதுர்யமும் மனவமைதியுமுள்ள விதவைகளிடம் இந்து ஜனங்கள் பல நன்மையை யடையலாம்.

கல்வி பரவப்பரவ இந்தியாவில் பல மாறுதல்கள் நேர்ந்தன. இப்படி மாறிய சந்தர்ப்பத்தில் குடும்பஐக்கிய வேற்பாடுகளும் அநேகமாய் மறைந்துவிட்டன. பொதுவான ஒரு தலைவனிடமிருந்து தங்களுக்கு வேண்டியவனைத்தும் பெற்றுவாழ்வதென்றால் இக்காலத்திற்கேற்காது. மாறுதல் மெலிந்த இந்நாளில் ஒவ்வொருவரும் தம் வாழ்நாளைப் பூர்ண சந்தோஷத்துடன் கழிக்கலாமென்றெண்ண இடமில்லை. விதவைகளைக் குடும்பத்திலுள்ள ஏனையோரைப்போல் மட்டு மரியாதையோடு மனமுவந்து ஸமமாய் நடத்தி அன்னார்நிலைமையைக்கண்டு அநுதாபமடைந்து அவர்களை உயர்வாய் நடத்தவேண்டும். தற்கால நிலைமைக்குத் தக்கவாறு நடந்தால், இந்தப் பரதகண்டமாகிய இந்தியாதேசம் முன்னுக்கு வரலாம்.

"பழையன கழிதலும் புதியனபுகுதலும்
வழுவலகால வகையினானே"

எஸ். செல்வராஜம்.

சென்னைக் கல்விப்பொருட்காட்சி.

இக்கல்விப் பொருள்களை தினுசுவாரி பிரிக்கையில் (Drawing) சித்திரம் வரைதல் அல்லது படம் வரைதல் கருவிகள், (Modelling) உருவப்படுத்தின கருவிகள், (Tailoring) தையல்வேலை சாமான்கள், (Geographical Instruments) பூகோளசாஸ்திர சம்பந்தமான கருவிகள், (Writing) எழுத்துசம்பந்தமான கருவிக்ள், (Spinning) முடைதல் அல்லது பின்னுதல், (Seed and Stick laying) விதைகுச்சி வைத்தல், (Object lessons) பொருள்பாடக் கருவிகள், (Abacus) கணிதக்கருவிகள், (Paper folding) காகிதம் மடித்தல், (Carpentry) தச்சுவேலைக் கருவிகள், மற்றும் பாடசாலைக்கு அவசியமான பெஞ்சு நாற்காலி புஸ்தகம் முதலியவைகளேயாகும்.

(Drawing) படம் எழுதல்—இதில அநேக செடி கொடிகளும், பட்சி மிருகம் முதலியவைகளும், மேஜை

நாற்காலி முதலிய பாடசாலை சாமான்களும், செம்பு, தட்டு, டம்பளர் முதலிய வீட்டுசாமான்களும் வெகு அழகாக எழுதி வர்ணங்களிட்டுப் பார்ப்பவர் கண்களைக்கவரும்படியாக வைக்கப்பட்டிருந்ததுடன், சென்னை ராஜதானி, இந்தியா, பிரிடிஷ் தீவுமுதலிய தேசங்களின் வெளிப்புற எல்லைகளைமட்டும் காட்டிய சில படங்களும், மலைகளைமட்டும் காட்டிய சில படங்களும், நதிகளைமட்டும் வரைந்த சில படங்களும், மாகாணம் ஜில்லா முதலியவைகளை மட்டும் பிரித்துக்காட்டிய சிலபடங்களும், ஜில்லாக்கள் பிரித்த சென்னை இராஜதானி படத்தில் விளைபொருள்களை மட்டுங் குறித்துக்காட்டிய படங்களும், இப்படியே பாஷை, மிருகங்கள், மழைமுதலியவைகளைமட்டும் குறித்துக்காட்டியவைகளும், இருப்புப் பாதையைமட்டும் குறித்துக்காட்டியவைகளும் கவனிக்கத்தக்கவைகளாயிருந்தன.

உதாரணமாக, சென்னை இராஜதானி படத்தில் ஜில்லாக்களைப் பிரித்து திருநெல்வேலி, கடப்பை, கர்நூல், பல்லாரி ஜில்லாக்களில் பருத்தி என்று எழுதியும், கோதாவரி, திருச்சி, மதுரை, கோயமுத்தூர் ஜில்லாக்களில் புகையிலை என்று குறித்தும், தென்ஆற்காடு, நெல்லூரில் அவுரி என்று காட்டியும், மலையாளக்கரையில் மிளகு என்று வரைந்தும், தஞ்சாவூர், கோதாவரி, கிருஷ்ணா, மலையாளம் ஜில்லாக்ளில் நெல் என்று எழுதியும், நீலகிரி, பழனி, சேர்வராயன் மலைகளில் காபி என்று குறித்தும், மைசூரிலுள்ள கோலார் என்னுமிடத்தில் பொன் என்றும், ஐதராபாத்திலுள்ள சிங்கரேணியில் நிலக்கரியென்றும் எழுதியிருந்த படம் வெகு நேர்த்தியாகவிருந்தது. இப்படியே பாஷைகளைக் காட்டும் படத்தில் தமிழ் ஜில்லாக்களுக்கு ஒரு வர்ணமும், தெலுங்கு ஜில்லாக்களுக்கு ஒரு வர்ணமும், மலையாளம் கன்னடம் பேசப்பட்ட ஜில்லாக்களுக்கு வேறு வர்ணமும்

தீட்டி பாஷைகளைக் குறித்தும், தென்கன்னடத்திற்கு ஒரு வர்ணமிட்டு, கன்னடம் மலையாளம் துளுவம் என்று எழுதியுமிருந்தது. இவைகள் இராஜதானியிலுள்ள விளைப்பொருள், பாஷை, நதி, மலை, மிருகம் இருப்புப் பாதை முதலியவைகளை எளிதாய்க் கற்றுக்கொள்ளத் தகுந்த கருவிகள் என்பதில் யாது தடை?

புதன் சுக்கிரன், பூமி, அங்காரகன், பிரகஸ்பதி, சனி, யுரானஸ், நெப்தியூன் முதலிய கிரகங்கள் சூரியனைச்சுற்றி ஓடுகிறதைக்காட்டியும் பூமியின் மேற்புறத்தில் ஒரே திசையாய் ஓடுகிற கப்பல் மறுபடியும் புறப்பட்ட இடத்திற்கே வருகிறதென்பதைக் காட்டியும், சூரியனுக்கு எதிற் புறத்திலுள்ள பூமியின் பாகத்திற்கு மட்டும் பகல், மற்ற இருண்டபாகத்திற்கு இரவு என்பதைக் காட்டும்படி வரைந்த படமும், சூரியன், பூமி, சந்திரன் இவைகள் ஒரே நேர்க்கோட்டிலிருக்கையிலேயே, அமாவாசை, பூர்ணமி, கிரகணம், இவைகள் உண்டாகிறதென்பதைக் காட்டவரையப்பட்ட படங்களும், பருவகாலங்களைக் காட்டுவதற்கு தகுந்த விதமாய் வரையப்பட்டபடங்களும், செவ்வையாக எழுதப்பட்டு வர்ணங்கள் கொடுக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. இவைகள் சூரிய சித்தாந்தங்களைக் கற்பிக்க இன்றியமையாதவைகளென்பதில் தடையில்லை.

பொருட்பாடத்திற்கு உபயோகப்படுத்தக் காட்டிய யானை, குதிரை, பசு, ஆடு முதலிய மிருகங்களினுடைய உருவங்களை எழுதிய படங்களும், கிளி, மைனா, சாவல், மயில், கொக்கு, வாத்து, முதலிய பட்சிகளினுடைய உருவங்களை எழுதிய படங்களும், செடி, கொடி, மரம், முதலியவைகளை எழுதிய படங்களும் தகுந்த வர்ணங்கொடுக்கப்பட்டு ஏராளமாய் வந்திருந்தன. இதில் ஒரு பசுவும் அதன் கன்றும் நின்றுக்கொண்டிருக்க ஒருவன்பால் கற

ப்பதுபோல் எழுதியபடம் வெகு நேர்த்தியாக விருந்தது. மங்களூர் பாசல்மிஷன் சங்கத்தாருடைய அச்சுக்கூடத்தி லிருந்து அனுப்பப்பட்டிருந்த பொருள்பாடத்திற்கு உப யோகப்படுத்தக்கூடிய படங்களும், S. P. C. K. ப்ரெஸி லிருந்து வந்திருந்த படங்களும், அதிக இலக்ஷணமாகவும் தகுந்த வர்ணங்களிடப்பட்டதாகவும் காணப்பட்டன.

கூடலூர் டவுன் ஐஸ்கூல் VI பாரத்தில்,வாசிக்கும் பக்கீர்சாமி என்பவனால் எழுதிவர்ணமிட்டு அனுப்பப்பட் டிருந்த VII வது எட்வர்டு சக்கரவர்த்தியாருடைய படம் வெகு நேர்த்தியாகவிருந்தது. இனி ஒவ்வொரு பாடசா லைக்கும் நமது சக்கரவர்த்தியின் படம் போர்டாரால் கொடு க்கப்படுமென்றே எண்ணுகிறேன்.

இந்தியாபடம் ஒன்று பெனுகொண்டா லோயர் செகண்டெரி ஸ்கூல் இராமசந்திரராவ் எழுதியது. இதில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் மணிவித்தியாசத்தைக்காட்டி வரையப்பட்டிருந்தது.

ஒருவர் தமிழ் இலக்கணத்தை ஒரு மரமாக உருவப் படுத்தி அதன் சொற்களாகிய பிரிவுகளைக் கிளைகளாகவும் சொற்களின் பிரிவுகளைக் குச்சிகளாகவும், இப்படியே மற் றவைகளையும், இலை, பூ, காய்களாகப் பிரித்து எழுதியனு ப்பியிருந்தார்.

லண்டன் பட்டணத்திலிருந்து வந்திருந்த டிராயிங் குகள் அதிகமாகவேயிருந்தது. இதில் பற்பல செடிகளை யும் இலைகளையும், அதன் நிறம், உருவம் முதலியவைகள் கெடாமல் எடுத்து உலர்த்தி கடிதங்களில் ஒட்டியனுப்பி யும் அவைகளைப்பார்த்து எழுதியும் அனுப்பியிருந்த பொரு ட்காட்சிகள் ஏராளமாயிருந்தன.

பழுப்புநிறமான காகிதத்தில் பிரஷினால் எழுதப்பட்ட செடிகள், கொடிகள், இலைகள், மிருகங்கள் முதலிய உரு

வங்கள் வெகு நேர்த்தியாகவிருந்தன. இதில் கந்தசாமி என்ற 10 வயதுள்ள ஒரு சிறுவன் எழுதியனுப்பியிருந்த ஒருமயில் உருவமும், வேறு ஒரு சிறுவன் எழுதியனுப்பியிருந்த ஒரு தென்னமரத்தின் உருவமும் வெகு சிரேஷ்டமானதென்று கூறலாம். தென்னமரத்தில் காய்கள் குலை குலையாகத் தொங்குகிற பாவனையாகவும், ஒரு சாணான் கத்தி பல்லாய் அரைப்பெட்டி முதலியவைகளுடன் ஏறுவதுபோலவும் எழுதியிருந்ததுவும் செவ்வையாகப் பொருந்தியிருந்ததென்றே கூறலாம்.

(Modelling) உருவம்செய்தல்.—களிமண்ணாலும் மரத்தினாலும், நாய், பூனை, யானை, குதிரை, ஆடு, மாடு, முதலிய மிருகங்களும்; கிளி, மயில், காகம் வாத்து முதலிய பறவைகளும்; வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கொய்யாப்பழம், சீதாப்பழம், இளநீர் முதலியவைகளும்; சட்டி, பானை, குடம், பானபாத்திரம், கிண்ணம், டம்ளர், லோட்டா, அரைகல், வீசுகல் போன்றவைகளும் செய்து தகுந்த வர்ணங்களிட்டும், இடாமலும், செங்கல், சதுரக்கல், ஓடுமுதலியவைகள் செய்து சுட்டும் சுடாமலும் ஏராளமாய் வந்து குவிந்திருந்தன.

இவைகளில் ஸ்கூல் ஆப் ஆர்ட்சிலிருந்து வந்திருந்தவைகளில்.—

ஒரு மரத்தின் பேரில் ஒரு மனிதன் பதுங்கியுட்கார்ந்திருப்பது போலவும், தரையில் ஒருவன் மல்லாந்து விழுந்து கிடப்பதுபோலவும், அவன் பக்கத்தில் ஒருகரடி வந்து முகர்ந்துகொண்டிருப்பதுபோலவும் செய்த உருவமும்.

ஒரு குடிசையில் ஒரு குடியானவனும் அவன் மனைவியும் இருப்பதுபோலவும், அவர்கள் தங்கள் குடிசைக்கெதிரில் ஒரு கூடையில் சிலபொன் முட்டைகளை வைத்திருப்பதுபோலவும், அவன் ஒரு வாத்துக்கோழியை யறுத்

துக் கீழே போட்டு அதன்வயிற்றில் பொன்முட்டைகளைக் காணுததால் தலையில் கையை வைத்துக்கொண்டு முறையிடுவதுபோலவும் செய்த உருவமும்;

ஒரு புல்போரின்மேல் ஒரு நாய் உட்கார்ந்துக்கொண்டு குலைப்பதுபோலவும், அதற்கு முன்னுல் ஒரு எருது அப்புல்லைத் தின்ன ஆவலுடன் வருவதுபோலவும் செய்த உருவமும்;

ஒருவன் பணப்பையை ஒருமரத் தடியில்வைத்துவிட்டுக் குதிரை யேறிச்செல்ல, அவனை அவனது நாய் தடுத்து வழிமறிக்க அவன் கோபங்கொண்டு அதைச் சுட்டதுபோலவும், அது பணப்பையண்டை ஓடி வந்து பிராணனைவிட்டதுபோலவும் செய்த உருவமும்;

ஒரு நரி திராக்ஷக்குலையைக் கண்டு குதிக்கிறதுபோலவும், அது எட்டாதபடியால் இகழ்ந்து திரும்பிச் செல்வதுபோலவும் செய்த உருவமும்.

ஒரு கோழி ஒரு வீட்டின் உச்சியிலிருந்துகொண்டு நரியைப் பார்த்து சுகமா என்று கேட்க, நரி இருக்கிறவிடத்திலிருந்தால் சுகந்தான் என்று சொல்லும் பாவனையைக் காட்டச்செய்யப்பட்ட உருவமும் வெகு அழகாயிருந்தது. இம்மாதிரி கதைகளை சிறுபிள்ளைகளுக்குக்கற்பிப்பதில் இந்த உருவங்கள் உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியவைகளே.

காஞ்சீபுரம் முனிசிபல் ஸ்கூல் உபாத்தியாயர் குப்புசாமி என்பவர் ஒரு இந்து தேவாலயத்தை ஒரு பலகையின் பேரில் களிமண்ணுல் செய்து, அதில் அக்கோவிலின் பிராகாரம், கோபுரம், உட்பிராகாரம்,விமானம் முதலியவைகளை அமைத்து அனுப்பியிருந்தார். இதை செய்தவரின் எண்ணமும், முயற்சியும் புகழத்தக்கதாயிருந்தது. கோபுரம் ஒன்பது அடுக்குள்ளதாகக் காணப்பட்டது.

மங்களூர் பாசில் ஜெர்மன் மிஷன் சங்கத்தார் அனுப்

பியிருந்த வாழைப்பழம், மாம்பழம், கொய்யாப்பழம், அன்னாஸ்பழம், முதலிய பழவகை தினுசு உருவங்களும், யானை, சிங்கம், காண்டாமிருகம், ஒட்டகம், முதலை, பன்றி முதலிய மிருகங்களின் உருவமும் வெகு அழகாகவும் நேர்த்தியாகவுமிருந்தன. இவைகளில் சில ஜதை உருவங்களை வரவழைத்து நமது போர்டார் பாடசாலைகளுக்கு கொடுப்பார்களானால் மிகுந்த உபயோகமாகவிருக்கும்.

P. சுப்பம்மாளும் K. கிருஷ்ணசர்மாவும்செய்து அனுப்பியிருந்த சாகுந்தலம் என்ற கதையை விளக்கியதோட்டக்காட்சி. இது சுமார் 12 சுற்றடியுள்ள அறுகோணமான அலமாரிபோன்றது. ஆறுபுறத்திலும் கண்ணாடிகள் பதித்த சிறிய அறைபோலிருந்தது. இதன் மத்தியில் குச்சிகளாலும் வைக்கோலாலும் செய்த ஒரு சிறிய குடிசை. இதன் பேரில் காகிதத்தினால் செய்த கொடிகள் படர்ந்தும், இக்குடிசையைச் சுற்றியவிடம் ஒரு சிங்காரவனம் போல் மரம் செடி முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டுமிருந்தது. இவ்வனத்தின் ஒரு புறத்தில் ஒரு சிறிய குன்றுபோலும் அதற்கு அடுத்தபுறத்தில் ஒரு சிறிய குளம்போலவும் செய்திருந்தது. இதற்குள்ளிருந்த பொம்மைகளும், செடிகொடி முதலியவைகளும் ஒருவிதமெழுகால் செய்யப்பட்டது.

இவ்வனத்தின் ஓர் புறத்தில் ஒரு சிறிய பெண்குழந்தை எறியப்பட்டு அழுகிறமாதிரியாகவும், மற்றொருபுறத்தில் இக்குழந்தையை சிலபக்ஷிகள் தங்கள் இறக்கையினால் மூடிக்கொண்டு காப்பாற்றுவதுபோலவும், வேறொருபுறத்தில் அக்குழந்தையைக் கண்ணுவரிஷிகண்டு எடுத்துச் செல்வதுபோலவும், அடுத்தபுறத்தில் துஷ்யந்தன் என்ற அரசன் வேட்டைக்கு வந்து ஒரு அழகிய மானைத் துறத்திச் செல்வதுபோலவும், அதற்கடுத்தபுறத்தில் சகுந்தலை மலர்கொய்வதுபோலவும், அவளுடைய தோழிகள்

இருவர் செடிகளுக்குத்தண்ணீர் வார்ப்பதுபோலவும், அதற்கடுத்தபுறத்தில் துஷ்யந்தன் சகுந்தலையைக் கண்டு மோகித்து விவாகம் செய்துகொண்டு சுகித்திருக்கும் சமயத்தில், தனது மோதிரத்தை யவள் கைவிரலில் அணிந்து சென்றதுபோலவும், இதற்கடுத்தவிடத்தில் சகுந்தலை ஒரு ஆண்குழந்தையைப் பெற்று தபசிக்குக் காட்டி வளர்ப்பதுபோலவும், கடைசியில் சகுந்தலை தனது குமாரனுடன் துஷ்யந்தன் சிங்காதனத்தில் வீற்றிருப்பதுபோலவும், செய்து அனுப்பியிருந்தது, வேலைத்திறமையையும், புத்திகூர்மையும் காட்டியதன்றி, காட்சிசாலையில் பிரவேசித்த ஒவ்வொருவர் மனதையும் பிரமிக்கச்செய்தது.

ஸ்கூல் ஆப் ஆர்ட்சிலிருந்து வந்திருந்த சில பெரிய உருவங்கள் அதிக பொருத்தமாய்ச் செய்யப்பட்டவைகளாயிருந்தன. ஒரு ஸ்திரீ தண்ணீர்க்குடத்தை தலையில் வைத்துக்கொண்டு தண்ணீருக்குச்செல்லுகிற பாவனையாகச் செய்த உருவமும், ஒரு சேவகன் தனது டவாலி பில்லையுடன் ஆபீஸ் வாயலிலுட்கார்ந்து அதிக விசாரமும் யோசனையும் குடிகொண்டபாவனையாய் செய்த உருவமும், ஒரு ஜட்காவண்டிக்காரனுடைய உருவமும், மற்றவைகளும் அதிக நேர்த்தியாயிருந்தன.

கொத்துவேலை.—அன்னப்பட்சியின் பேரில் நான்கு தலையுடன் பிர்ஹ்மாவின் உருவமும், மயிலின்பேரில் சுப்பிரமணியர் உருவமும் வெள்ளைக்கற்களிற் கொத்திச்செய்திருந்தது அதிக வேலைத்திறமையைக் காட்டிற்று.

முத்தியாலுப்பேட்டை ஐஸ்கூல் உபாத்தியாயர் பக்தி கேசவலுநாயுடு பருத்தியினல் செய்தனுப்பியிருந்த ஒரு பூனையின் உருவமும், ஒரு நாயின் உருவமும் மிகவு அழகாயிருந்தன.

(Card Board work) காகித அட்டைவேலை.—கெட்டியான காகித அட்டையில் சிறிய குச்சிகளைக்குத்தி நாற்காலி, மேஜை, பெஞ்சி, கட்டில், சாய்வுநாற்காலி, கிளிக்கூடு முதலியவைகள் செய்து சிலர் அனுப்பியிருந்தார்கள். இது ஒவ்வொரு பாடசாலையிலும் செய்யக்கூடிய வேலையே. இது பிள்ளைகளுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும்.

காகித அட்டையை ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய், அரைக்கால் ரூபாய் அளவாகவும், அரை அணு, கால் அணு, டைசா அளவினதாகவும் கத்தரித்து தகுந்த காகிதங்கள் ஒட்டி பெயர்களும் எழுதி ஒருவர் அனுப்பியிருந்தார். இது அணு ரூபாய் வாய்ப்பாடு கற்பிப்பதற்குத் தகுந்த கருவி என்பதில் தடை என்ன?

(Tailoring) தையல்வேலை.—இந்தத் தொழில் சாமர்த்தியத்தைக் காட்டும்படி பலவிதவர்ண நூல்களாலும் பட்டாலும் சரிகையாலும் தைத்தும், செடி கொடி முதலியவைகள் போட்டும், பின்னியும் செய்த பல அற்புதமான காட்சிச் சாமான்கள் வந்திருந்தன. சரிகையினுலும் பட்டு நூலாலும் சட்டையின் மார்புப் பட்டிகளுக்கும், கைப்பட்டிகளுக்கும், கழுத்துப்பட்டிகளுக்கும் செய்திருந்த கொடிவேலை வெகு நன்றாய்க் காணப்பட்டது. பெண்கள் அணிந்துக்கொள்ளப்பட்ட பாவாடை மாதிரி 5, 6 அடுக்குகள் வைத்துத் தைத்தவைகளும், ரவிக்கையில் கழுத்துப்பட்டி வைத்தும் அதன் பேரில் பொன் கொடியணிந்ததுபோலும் கடியார அட்டிகை கட்டியதுபோலும் சரிகை வேலைசெய்து அனுப்பிய பல சட்டைகள் காணப்பட்டன.

(Geographical Instruments) பூகோள சாஸ்திரசம்பந்தமான கருவிகள்.—பூகோள உருண்டைகள் பல அளவினதாக பலர் செய்து அனுப்பியிருந்தார்கள். சிலர் அவை

களுக்கு பீடமும்செய்து பொருத்தி உருண்டை சுற்றும் படியாகவும் செய்திருந்தார்கள். மெஸ்ஸர்ஸ் மேக்மில்லன் கம்பெனியாருடைய பூகோள உருண்டைகளும் படங்களும் வெகு அழகாகவும் நல்ல மாதிரியாகவும் காணப்பட்டன.

மெஸஸர்ஸ் பிளாக்கி அண்டு சன் அவர்களுடைய பூகோள படங்கள் பிள்ளைகளின் பார்வையைக் கெடுக்காத விதமாய் பெரியதும் பிரகாசமுமான எழுத்துகளால் பதிக்கப்பட்டவைகளாயிருந்தன.

சூரியசித்தாந்தங்களையும், அமாவாசை, பூர்ணமி சூரிய கிரகணம், சந்திர கிரகணம் முதலியவைகளைக் காட்டத்தகுந்த கருவிகளும், இரவும் பகலுமுண்டாகிற விதத்தைக் காட்டத்தகுந்த கருவிகளும் வைக்கப்பட்டிருந்தன. திருவள்ளூரையடுத்த தேமங்கலம் ஸகூல் மாஸடர் வரதய்யங்கார் செய்து அனுப்பியிருந்த கருவியும், பெரியகாஞ்சிபுரம் போர்ட் ஸ்கூல் உபாத்தியாயர், செய்து அனுப்பியிருந்த கருவியும் கூடியவரையில் தகுந்தவைகளாயிருந்தன.

டி. ஸி. வெங்கட்டரமணய்யர்.



சிறுவர்க்கான பக்கங்கள்.

நிறைகுடம் நீர் தளும்பலில்.

முழுவதும் நிறைந்த நீர்க்குடத்தினின்றும் நீர் தழும்பிக் கீழ் விழாது என்பதை பின்னர்க்கூறுவதனால் நன்கு போதரும். நன்றாசக் கலைகளெல்லாவற்றையும் கற்றுணர்ந்தவன் அடக்கம், பொறுமை, முதலிய சகலவித நற்குணங்களும் பொருந்தியவனாய் மேன்மையுறுகின்றான். அதல்லாது குறைப்படிப்பைப் படித்துத் தருக்கித் திரியும் தான்றோன்றித் தம்பிரான்கள் தலை தெரியாது தடுமாறும் செயலை நோக்கி நம்மனம் பெரிதும் புழுங்குகின்றது! அம்ம! அவர்கள் உயர்நிலை தவறி நயமெலாந்தொலைந்து வீழ்நிலையுறுகிறார்கள்! ஏதோ சிறிது அறிவுடையவராயினும் அடக்கமுடையோராய் மௌனம் ஸர்வார்த்த ஸாதகம் என்பதை அவர்கள் கடைப்பிடித்தொழுகில் மேதக்கதன்றோ? வீரநாராயணபுரத்தில் இராமபத்திரன் என்றவோர் ஏழையிருந்தான். அவனுக்குச் சுமதி என்னும் மாதினிடத்தில் ஓர் புத்திரப்பேறுண்டாயிற்று. அப்புத்திரப்பேற்றினால் மனமகிழ்ந்த அந்தணன் அக்குழந்தைக்கு ஜாதகர்ம நாமகரணஞ் செய்

வித்து அப்பாலகனை வெகு செல்வமாய்ச் சீராட்டிப் பாராட்டி வளர்க்க, வளர்மதிபோல் செல்வராஜன்என்னுஞ் சிறுபையனும் வளர்ந்து வந்தான். இச்சிறுவனுக்கு வயது ஐந்தாயிற்று. ஆறுயிற்று. பின்னர் இவனைக் கல்வி பயிலுமாறு வித்தியாசாலையில் நல்ல நாளில் தக்க குருவினிடம் ஒப்புவித்தனன். இராமபத்திரனின் செல்வனுன செல்வராஜனும் செல்வப்பிள்ளையாதலால் உபாத்தியாயருக்கடங்கி நடக்கமாட்டான். அவர் கொடுக்கும் பாடங்களைச் சரிவரக் கற்க மாட்டான். இச்செல்வப்பிள்ளைக்குப் புத்தி வயதேறவேற உலக்கைக்கொழுந்தும் துந்தாணி வேரும்போல் வேரூன்றி வளர்ந்துவந்தது. இராமபத்திரனே மிக்க துக்காக்கிராந்தனுய் தன் பிள்ளையைப்பற்றிப் பல்காலுஞ் சிந்திப்பான். அவன் நற்புத்தியுடையோனுய் ஒழுகலைப் பலகாலுங் கண்டிப்பான்.

'ஏகேனுபி ஸுவ்ருக்ஷேண புஷ்பிதேன ஸுகந்திநு
வாஸிதம் தத் வனம் ஸர்வம் ஸுபுத்ரேண குலம் யதா.'

எவ்வாறு வேம்பு, ஆல், அரசு, புன்னை, பலா, மா, முதலிய பல்வேறு மரங்களடர்ந்ததோர் காட்டில் மிக்க பரிமளமுள்ள ஒரு மரத்தினது புஷ்பம் அக்காட்டை நன்ருய் வாசனையடையச் செய்கிறதோ அவ்வாறே குலத்தில் எத்தனை பிள்ளைகள் பிறப்பினும் குலத்தினை விருத்திக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு புத்திரன் இருக்கவேண்டும். 'ஏகோபி குணவான் புத்ரோ' என்றுகூடப் பெரிய நூல்களிற் சொல்லப்பட்டிருக்கிறதும். ஒரு புத்திரனுயிருந்தாலும், அவன் மிசுக் குணவானுகவும், கண்ணியவானுகவும், புத்திமானுகவும் இருத்தல் வேண்டும். அப்பேர்ப்பட்ட பிள்ளை பிறந்தாலல்லவோ குடும்பமெல்லாம் க்ஷேமமடையும். ஒரு குடும்பத்தில் துர்க்குணர்களாகிய நூறு பிள்ளைகள் அல்லது 1000 பிள்ளைகள் இருந்தால் என்ன? இல்லாவிடில் என்ன? இப்பிள்ளைகள் இருப்பதும்இறப்பதும் ஒன்றுதான் என்று பலபலவாய்த் தான் கற்றறிந்த நீதிநூல்களிலுள்ள வாக்கியங்களை எண்ணியெண்ணிப் புலம்புவான்! அயிர்ப்பான்! பெருமூச்செறிவான்! என்செய்வான் பாவம்! கடைசியில் இப்பேர்ப்பட்ட பிள்ளை கிடைத்தது தனது பூர்வகர்மசேஷம் என்று துணிவான். இப்படிப் பலகாலும் இராமபத்திரன் யோசித்திருக்க சீக்கிரத்திலேயே செல்வராஜன் யௌவனப்பருவமடைந்தான். இராமபத்திரனும்

வேதவிதிப்பிரகாரம் தன்னருமைக்குழந்தைக்கு சௌளம், உபநய னம் முதலியன செய்து ஒருபக்கம் 'அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி' 'புத் ரேண லோகான் ஜயதி' என்றவாறு தனக்கு நல்லலோகம் கிடைப் பதற்கேதுவான பிள்ளை பிறந்திருக்கிறதே யென்ற மகிழ்ச்சியுடனும் அச்செல்வராஜனின் மூடத்தன்மையை உத்தேசித்து ஒரு பக்கம் துக்கத்துடனும் வாழ்ந்துவந்தான். பின்னர்க் கொஞ்சகாலஞ் செ ல்லச் செல்வராஜனும் செல்வமாய் வளர்ந்து காளைப்பருவமடைய லானான். என்ன வயதடைந்தும், இவனுக்கு மூடத்தன்மையே மேம்பட்டு வளராகின்றது. பள்ளிக்கூடத்திற் படிப்பதையும் பையப் பைய விட்டு விருதா காலக்ஷேபம் செய்வானாயினான். வீரநாராயண புரத்துப் போக்கிரிப்பிள்ளைகளெல்லாம் நமது செல்வராஜனின் சிநே கிதரானார்கள். போக்கிரிப்பிள்ளைகள் சிநேகிதராகவே செல்வரா ஜன் கெட்ட செயல்களைச் செய்யவாரம்பித்தான். இராமபத்திர னே தனது குமாரன் செல்வராஜனின் கெட்ட நடவடிக்கைகளைக் கண்டு மனம் புழுங்குவார். இவனை நல்வழிப்படுத்த வழிகள் பல நாடுவார். யாவும் பயனற்றொழிந்தனவாகவும், 'இவனுக்குக் கால் கட்டு ஒன்று கட்டிப்போட்டால் அப்போதாவது நல்வழிப்படமாட்டு வானோவென்று' யோசித்தார். அவ்வாறே செய்து தன் மகனை நல் வழிப்படுத்தவும் புக்கனர். அவர் எண்ணிய எண்ணமும் ஒருவாறு பலித்தது என்று சொல்லும்படியாயிற்று. தம் குலத்தில் உத்தம மான அழகுள்ள பெண்ணொன்றினைத் தன் மகனுக்கு இராமபத்திர ஐயர் மணமுடித்தார். பெண்ணோ மிக்க புத்திசாலி. சாதுரியசம் வாதினி. அவள் மடந்தைப்பருவத்து மாதுசிரோமணி. பல்கலை பயின்ற பாவையர்திலகம். இத்தகையள் தன்னுடைய நிஷேக முகூர்த்தத்தன்று கணவனுகிய மூடசிரோமணி செல்வராஜன் தன் பள்ளியறைப் புகுங்காலத்து கணவனை விளித்து "ஐயா! அன்பார் ந்த கணவ! சற்றே செவிசாய்மின். நீவிர் பல்கலை பயின்று வித்து வானாயபின்னரே என்னைத் தொடல்வேண்டும்! 'கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டு செல்வமும் செல்வமெனப்படும்' ஆயினும் இவ்விரு செல்வங்களில் யாவராலும் பெரிதும் மதிக்கப் பட்டதும், கள்வராகிய கயவரால் களவிடப்படாததுமான கல்விச் செல்வத்தினை நீவிர் நிரம்பவுடைய வித்துவானாய் இங்கு போதரல் வேண்டும். அல்லாக்கால் யான் நும்மைத் தீண்டுவேனல்லேன்.

'மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்' 'கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.' ஆகவே கல்விச் செல்வத்தினைப்பற்றி நீதிநூல்கள் இவ்வாறு பெரிதும் முறையிடுகின்றன. ஆதலின் நீவிர் சிறந்ததோர் வித்துவானாக மாறி வருவீர்" என்று கூறினள். இப்போது தான் செல்வராஜச் செல்வனுக்குப் புத்திவந்ததென்னலாம்! அம்மம்மா! மனைவி நமக்கு நற்புத்தி புகட்டக்கூடியவளாயினளே! என்று மனங்குழம்புவான். சில வேளைகளில் அவள் கூறியது சரியென்றே நிதானிப்பான். சிலவேளைகளில் தான் மூடனாயிருப்பது தன்னை அன்று செல்வமாய் வளர்த்த தகப்பனின் குற்றமென்றே கருதுவான்! உண்மையில்

'யான் துள்ளித் திரிகின்ற காலத்திலென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே என் தந்தையாகிய பாதகனே!'

என்று தன் தந்தைதாயாரை நொந்துகொள்வான். இவ்வாறு மனதில் குழப்பங்கொண்டு, மனைவிசொல் செவியில் நாராசம்போல் நுழைய, தன் வேட்டகத்தை விட்டு, விசடகவிச் சிரேஷ்டனாகிய மதியூகி' என்னும் தன்னண்பனிடம், மனைவியின் கூற்றினைக் குறித்தாராய்வான் சென்றான். அவனிடஞ்சென்று விஷயத்தை நேரே சொல்லி வினவலும் "நண்ப!' இஃதோர் பெரியகாரியமன்று; விரைவில் நீ பெரியவோர் பண்டிதனாவாய். சதசுலோகேந பண்டித: என்று நூல்களிற் கூறப்பட்டிருப்பதை நீயறியாயா? நூறு சுலோகங்கள் கற்றவன் பண்டிதனாக மதிக்கப்படுவான் என்பது இச்சுலோகத்தின் பொருள். (நூறு சுலோகத்தின் பொருளையுணர்ந்தவன் பண்டிதனாகமாட்டான் என்பதே இச்சுலோகத்தின் உண்மைப்பொருள். இங்கு மேற்கூறிய அர்த்தம் குதர்க்கமாகவும் விகடமாகவும் கொள்ளப்பட்டதை ஈண்டு அறிதல் தக்கதேயாம்) ஆகவே நீ தக்கவோர் நல்லாசிரியனையடுத்து

"கோடல் மரபே கூறுங்காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன ஆர்வத்தனாகிச்
சித்திரப் பாவையி னத்தகவடங்கிச்

செவிவா யாக நெஞ்சுகளனைக்
கேட்டவை கேட்டவை விடா தளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனர் புதல்வர்!

என்று மேற்கூறியவாறு பெரியோர் சொல்லியபடி சித்திரப் பதுமைபோல ஆசிரியனுக்கடங்கி, அவனுக்கு வழிபடுதலில் சிறிதும் மனங்கோணாதவனாகியும், அவன் குறிப்பறிந்து நடந்தும், சமயம் நேர்ந்தவிடத்து அவனுக்குக் குற்றேவல் பல புரிந்தும் பாடங்கேட்க வேண்டும். செல்வராஜ! நண்ப! நூறு சுலோகங்கள் கற்று, பண்டிதனுக்குமட்டுமாவது மிக்கப் பணிவுடனிருந்து, நூறு சுலோகங்கள் கற்றபின்னர் வந்துவிடலாம்" என்று சொல்லலும், செல்வன் மிக்க மகிழ்ச்சியடைந்தவனாய் "நண்ப! இந்தயுக்திக்கு யான்னினக்கு என்ன கைம்மாறியற்றப் போகின்றேன்! ஆயின் கரவீரபுரத்திலிருக்கிற கோவிந்தசோமயாசிகளிடம் நான் கல்வி கற்குமாறு போகின்றேன்" என்று தன் நண்பனிடம் விடைபெற்றகன்றான். மதியூகியும் இச்செல்வன் எவ்வாறு திரும்பி வருகிறானோ என்று பார்க்கப்போரவலுடையோனாயிருந்தான்.

பண்டிதனுமாறு கரவீரபுரஞ்சென்ற நம் செல்வனோ கோவிந்த சோமயாசிகள் தம்மாணாக்கருக்குக் கல்வி பயிற்றிக்கொண்டிருக்கும் இல்லத்தின் வாயிற்றெருத்திண்ணையில் சோமயாசிகள் பருத்த தொந்தியையும், விளர்த்த மீசையுமுடையோராய் கம்பீரத்தோற்றத்தோடும் மந்தகாசத்தோடும், வீற்றிருத்தலைக்கண்டுத் தண்டாகாரமாய்ப் பூமியில் பலமுறை விழுந்து எழுந்து அஞ்சலிபத்தனாய் மகா பய பக்தி வினயத்துடன் ஆசிரியன் எதிரின் நிற்றலும், சோமயாசிகள் தீர்க்காயுஷ்மான் பவ என்று ஆசீர்வதித்து இளைஞனாகிய நீ இங்கு போந்த காரணம் யாது என வினவலும், மிக்க அமைதியுடனும் தான் பண்டிதனுமாறு வந்த காரியத்தைச் செல்வனும் பகர்ந்தனன். பகர்ந்த கேட்டார், நீ அவ்வாறே பண்டிதனாக ஆகுவாய்! இதுவரையும் நீ ஸம்ஸ்கிருத நூலில் யாதும் படித்திலையாதலின், முதற்கட் எளிதான சுலோகங்கள் நூறு கொண்டதோர் நீதி சாஸ்திரமென்னும் நூலை வாசிக்கக்கடவாய் என்று பணித்தார். இளைஞனும் ஆமென வணங்கினன். அன்றுமுதல் பிடித்த எட்டை விடாப்பிடியாய்ப் பிடித்து, நீதிசாஸ்திரத்தின் நூறு சுலோ

கங்களேயும், ஆசிரியனிடமிருந்து மேற்கூறிய முறைப்படி சிறிதேனும் வழுவாது பணிந்திருந்து கற்றுக்கொண்டான். பின்னல் தன் ஞன்மநண்பன் மதியூகிசொல்லிய சதஸ்லோகேந பண்டித: என்னும் வாக்கியத்தை மனதிற்கொண்டவனுய் நூருவது சுலோகத்தினை முடித்த அற்றைநாட்சாயந்திரமே ஆசிரியனை நோக்கி, 'ஐய! இன்றுதான் என் எண்ணம் முற்றுப்பெற்றது, 100 சுலோகங்கள் கற்றேன், பண்டிதனுனேன்' என்று சொல்லிக்கொண்டே, தான் பண்டிதனுயதை மனைவிக்கறிவிக்குமாறு ஆசிரியனைவிட்டகன்று வீரநாராயணபுரத்திற்கருகிலுள்ள மார்த்தாண்டநகரம் நோக்கி விரைவாக நடந்தான். போகையில் நீதிநூலிலுள்ள சுலோகங்களை மனதில் தியானித்துக்கொண்டே செல்வானுயினன். செல்வன் நடந்துபோகும் வழியில் கழுதை யொன்று செத்துக்கிடந்ததைக் கண்ணுற்ருன். அப்போது நீதிநூலிலுள்ளதோர் சுலோகத்தினடி ஞாபகத்திற்கு வந்தது.

அநாதப்ரேதஸம்ஸ்காரம் அசுவமேதபலம் லபேத் (இச்சுலோகத்தின் பொருள்:—நாதனற்றுக்கிடந்துள பிரேதமொன்றினைத் தகனஞ்செய்யின், அசுவமேதயாகஞ் செய்த பலன் உண்டாகும் என்பதே.) இவ்வாக்கியத்தினை ஞாபகத்திற்குக் கொணர்ந்து அநாதைப் பிரேதமாகக் கிடக்கிற அக்கழுதையின் களேபரத்தை இவன் தன் தோளிற்சுமந்து செல்வானுயினன். அதனைத் தக்கவிடத்தில் தகனஞ்செய்து பேறுபெறக்கருதிய இவனெண்ணம் சரியாக முற்றுபெருததும் விசனிக்கக்கூடியதாகவே யிருந்தது. இளைஞன் இக்கழுதைக் களேபரத்துடன் எத்தனை மைல் தூரம் நடப்பான்! ஐயோ! பாவம்! இக்கழுதையைச் சுமப்பதினும் இப்பேறு நாமடையாதிருப்பதே மேலானதென்றெண்ணுவான். ஆனல் தான் அறைகுறையாகப் படித்தறிந்த நீதிநூலிலுள்ள வாக்கியத்தின் பொருள் வீணுகப் போகிறதேயென்று நினைப்பான்! அயிர்ப்பான்! பெருமூச்செறிவான். இவனுடைய அத்தியாச்சரியமான குசாக்கிரபுத்திக்கு அநாதைப்பிரேதம் என்பது கழுதைப்பிணம்தானுவென்னும் சந்தேகம் மட்டும் நிகழவில்லை? அநாதைப் பிரேதமென்ருல் எந்தப்பிரேதமானுலும் அநாதையாயிருப்பதென்றே நினைத்துவிட்டான் நம்செல்வன். இதற்குப் பரிகாரம் ஏதேனுமுளதாவென்று தான் அறைகுறையாகக்கற்ற நீதிநூற்சுலோகங்கள் பலவற்றை நன்காராய்வான். உடனே பரிகா

ரம் இருப்பதாகக் கண்டு தெளிந்து அகமகிழ்ந்தான். துயர்க்கடற் கரையேறினன்.

'ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிர:ப்ரதானம்'(இதன் பொருள்:—எண் சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்; தேககாத்திர முழுவதிலும் சிரசு அல்லது தலைதான் சிரேஷ்டமானது.) இச்சுலோகத்தின் பொருளை மண்டைக்கேற்றிக்கொண்ட நம் செல்வன் திடீரென்று பாரமாயிருந்த கழுதைக்களேபரத்தைக் கீழே போட்டெறிந்து, அப் பிணத்தின் தலையைமட்டும் ஸம்ஸ்காரஞ்செய்து, அசுவமேதபலன் அடையும்பொருட்டு எடுத்துச் சுமந்துசென்றான். கழுதையின் தலை மட்டும் இலேசாகவிருக்கின்றதோ! அத்தலையும் இரண்டு ஆட்கள் பளுவுள்ளதாயிருக்கின்றதே! என்செய்வான்! அந்தணச்சிறுவன்! இப்பளுவு தாங்கி நடந்து செல்வதனால் நெற்றிவேர்வை நிலத்தில் மழைபோல் தேகத்தினின்று தாரை தாரையாக வடிவதாயிருக்கின்றது! தலையோ வலியெடுக்கின்றது. நீதிநூலிலுள்ளதை மெய்ப்பிக்கவும் அதன்படி நடக்கவும் புகுந்தால் ஐய! நம்மால் ஆகுந்தரத்தன்று! என்று தனக்குள்ளே தேர்வான்! கழுதையின் தலையைக் கீழே போட்டுவிட்டு நடக்கலாமாவென்று யோசிப்பான்! நீதி நூலில் நாம் கொண்ட கருத்தை முற்றிலும் நிறைவேற்ற வேறு வழிகளிருக்கின்றனவாவென்று தான் படித்த நீதி நூலை மனதிலேயே தலைகீழாகப் புரட்டுவான். உடனே ஒரு சுலோகத்தினடி சரேலென்று மண்டைக்கேறியது! அப்போது புதையல் கண்டெடுத்த மிடியன் போல் விழித்தான். இறும்பூதெய்தினன். உடனே அச்சுலோகம் சரிதானா! இங்கு பொருந்தக்கூடியதாவென்று மீட்டு மீட்டும் ஆலோசித்தான்.

'ஸர்வேந்த்ரியாணும் நயனம் பிரதானம்' (இச்சுலோகத்தின் பொருள்:—தேகத்திலுள்ள பஞ்சேந்திரியங்களில் நயனம் அல்லது கண் என்னும் உறுப்புதான் அதிகச் சிரேஷ்டமானது) 'கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை' என்பதும் இங்கு மிகுதியும் கவனித்தல் தக்கதேயாம். ஆகவே இச்சுலோகத்தின் பொருளினை மேற்கொண்ட அந்தணச் சிறுவன் செல்வராஜன், கழுதைத் தலையைக் கீழேகிடத்தி அத்தலையிலுள்ள இருகண்களையும் இடந்தான். அக்கண்களைத் தலையினின்றும் நீக்கித் தன் கைகளிற் கொண்டுமிக்க குதூகலத்துடனும், முன்னர் கழுதைக்களேபரத்தையும் பின்னர்த் தலையையும்

வறிதே சுமந்து கொண்டுவந்த இளைப்பு நீங்குமாறு உல்லாசமாக நடந்துவந்தான். தான் இவ்வளவு விசேஷமான காரியங்களை நீதி நூலினைப் பார்த்தமாத்திரமன்றோ செய்தோம் என்னும் மகிழ்ச்சியுடனும், மனதில் பற்பல விதமான ஆகாயக் கோட்டைகள் கட்டிக்கொண்டும் தன் வழி நடந்துகொண்டிருக்கையில், அடுத்ததோர் காட்டில் வேடுவக்கோலம் புனைந்து, வன்றி, கயம், காட்டா முதலிய காட்டு விலங்குகளை வேட்டையாடி வதைக்குமாறு போந்துள மகாமண்டலேசுவரனொருவன், வந்திருப்பதாகக் கேள்வியுற்றான். தான் வித்துவானாதலால் அவ்வரசனைக் கண்ணுற்றுப் பெரும் பரிசுகள் பல பெறலாமென்று, வீணன மனோராச்சியஞ் செய்தான். அரசர், பிணியாளர், கர்ப்பிணி, குரு, தெய்வம், சிசுக்கள் முதலியவரிடத்துச் செல்லுழி, வெறுங்கையுடன் செல்லலாகாதென்பதும், அவரிடத்துச் செல்லுங்காலத்து, உயர்ந்த பழ வகையராக்கள், சிற்றுணவு, புஷ்பம், தனம், தேங்காய், முதலியனவற்றை அவரவர்க்கேற்றவாறு முறையே கையுறையாகக் கொண்டுசெல்லவேண்டுமென்பதும் பெரியாரது கொள்கையும், நூற்றுணிபுகளுமாம். ஆனால் பரதேசியாவார் அகஸ்மாத்தாய் அரசனைக் காண நேர்ந்தகாலத்து, கையிலுள்ள எதையாயினும் கொடுத்து அரசனைக் கண்டு செல்லலாம் என்பது ஒருவகை நூற்றுணிபு: இத்துணிபை ஞாபகப்படுத்திக்கொண்ட நம் செல்வன் தான் தேசசஞ்சாரமாய் வருபவனாதலின் தான் பரதேசியென்றும், தன் கையிலிருப்பது அப்போது கழுதைக் கண்களாதலின் அவற்றை அப்போது அரசனுக்கீவது அதருமமல்லவென்றுங் கருதி, அக்கானகத்தில் அரையனைக் காணுமாறு சென்று அவனைக்கண்டு அவன் கைகளில் காணிக்கையாக இவற்றையிடலும், இவ்வந்தணச்சிறுவன் குறும்புக்காகத் தன்னைப் பரிகசித்தனன் என அரசன் மிகுதியும் வெருண்டுச் சீறி யெழுந்தனன். தன் மெய்க்காவலாளரையும், பிறரையும் ஒய்யெனக் கூவி, நம்மந்தணச் செல்வனுக்குப் பரிசுகளாக அடியும், குத்துகளும், உதைகளும் மிகுதியுங் கொடுக்குமாறு ஆணை தரலும், உடனே அக்காவலாளர்கள் இவனைக் கட்டிப் புடைத்து, வாயில் வந்தவாறெலாம் தெழித்து, ஓட ஓட அடித்துத் துரத்தினர். தனப்பரிசுப்பெறப் போன அந்தணன் புடைப்பரிசு பெற்றுக்கொண்டு தன் மனைவியினூராகிய மார்த்

தாண்டபுரஞ் செல்லுவானானான். மார்த்தாண்டபுரம் கிட்டக்கிட்ட மாப்பிள்ளைப்பிள்ளையாண்டானாகிய செல்வராஜன் தன்னை நன்கு திருத்திக்கொள்வானாயினான். நன்றாகக் குஞ்சிக் கோதிக்கொண்டான். பஞ்சகச்சமாக வேஷ்டிகளை நன்றாகக் கட்டிக்கொண்டான். தன் மனைவியினாரை நினைத்தலும், செல்வராஜனுக்குக் கால்களும் வேகமாக எழும்பின. தன் மனைவியை நினைத்து மார்த்தாண்டபுரம் கடுகி நடந்தான். மார்த்தாண்டத்தெல்லையினருகே நம் செல்வன் போம்பொழுது காலை 8 மணியாயிற்று. செல்வனும் தன் வேட்டகத்தின் வாயிற்படிபோந்து, அங்கு தனக்கு ஒருவரும் எதிர்நோக்கி அர்க்கியபாத்தியங்கள் வழங்காமையை நினைத்து மனம் வருந்தினான். வேட்டகத்தினுள்ளே நுழைந்தான். ஆங்குள்ளோரெல்லாரும் தத்தமக்குரிய வேலைகளைக் கவனித்துக்கொண்டிருப்பதைக் கண்ணுற்றான். வீட்டினுள்ளார் நோக்கமும் நெடுநாட்சென்று வீடுபோந்த மாப்பிள்ளை செல்வராஜனின்மீது பாய்ந்ததாயினும், அவர்கள் மாப்பிள்ளையை அப்போது அவ்வளவு விசேஷமாகக் கவனிக்கவில்லை. இஃதுணர்ந்த செல்வராஜன், 100 சுலோகங்கள் கற்ற வித்துவானாக மாறியும் உடனே மாமனார் வீட்டார் தனக்குச் சரியானமரியாதை செய்யவில்லையென்றும், மரியாதை ஸ்தானமாக தனக்கு உயர்ந்த ஸ்தானம் கொடுக்கவில்லையென்றும், உயர்ந்த ஸ்தானம் கொடுத்துத் தக்க மரியாதை தனக்கு நன்கு நடத்தப்படல்வேண்டுமென்றும், தன் மனதில் தீர்க்காலோசித்து சரேலென்று தோட்டத்திற் புகுந்து மிக்க உயரமாகக் குன்றுபோல் அடுக்கப்பட்டுளதோர் எருமுட்டைக் குதிரொன்றில் ஏறி, கைலையங்கிரியில் வீற்றிருக்கும் சடைப்பெருமானே போன்று வீற்றிருந்தான். இங்ஙனமிருக்கையில் வீட்டிலுள்ளார் மாப்பிள்ளை வீட்டினுட்போந்தவரைக் காணாது அவரைத் தேடுமாறு பலர் பல மூலைகளிற் சென்றனர். சிலர் தோட்டத்திற் புக்கனர். சிலர் தெருவிற் சென்று தேடினர். தோட்டத்திற் சென்றவர், செல்வராஜன் குன்றமெரிந்த குமரவேளையொப்ப எருமுட்டைக்குன்றில் வீற்றிருப்பக்கண்டு, ஐய! இஃதென்? என், நீவிர் இக்குதிரில் உட்கார்ந்திருக்கின்றீர்? என்றனர். இதகேட்ட மாப்பிள்ளை செல்வராஜன்,

'உச்சஸ்தானே ஸதா பூஜ்யதே' என்று நீதிநூலிற் கூறப்பட்டிருப்பதை நீவிர் அறியீரோ? (உயர்ந்த ஸ்தானத்தினுள்ளோர்

தான், பூஜ்யதைக்குரியராவார்கள் என்பது இதன் பொருள்.) உயர்ந்த ஸ்தானத்தில் வீற்றிருக்கும்படியாய் ஏன் நீவிர் எனக்கு உயர்ந்ததோர் பீடம் கொடுக்கவில்லை? நீவிர் பெரியதாயிருந்தும் நீதிநூலிற் கூறப்பட்டிருப்பதை நீவிர் அறிந்துகொள்ளாததை நோக்கின் எனக்கே மிகவும் வெட்கமாயிருக்கின்றது! நீவிர் நான் வந்தபோழ்து உயர்ந்த ஆசனம் கொடுக்காமலிருந்து அவமரியாதை செய்ததனால், நான் தோட்டத்திலுள்ள எரிமுட்டை ஆசனத்தில் வீற்றிருந்து மரியாதையைக் காப்பாற்றிக்கொண்டேன்' எனலும் வேட்டகத்தார் ஆச்சரியமடைந்தனர். ஒருபால் மாப்பிள்ளையின் நோக்கையும், மாதிரியையும்பார்த்துத்திகைப்புற்றுமிருந்தனர். பின்னர் அரைக்குடமாயிருக்கிற மாப்பிள்ளை செல்வராஜனுக்கு வேட்டகத்தார் மரியாதை செய்து க்ஷேமாதிசயங்களை மிக்க ஆவலுடன் விசாரித்தனர். செல்வராஜனும் வேட்டகத்தார் கேள்விகளுக்கு இனிமையாய் விடைபகர்ந்தனன். தான் நீதிநூல் கற்று பண்டிதனாயினமையும் தெரிவித்துச் சந்தோஷித்திருக்கையில் காலையில் சூரியனுதித்து 10 நாழிகையும் கழிந்தது. வேட்டகத்தார் புதிதாய் வந்த மாப்பிள்ளைக்கு விருந்துண்டி படைக்குமாறு வேண்டிய ஆயத்தங்கள் பலவற்றைச் செய்தபின்னர், செல்வராஜனை ஸ்நாநஞ்செய்யச்சொல்லினர். மாப்பிள்ளையின் ஸ்நாநத்திற்கென்று நல்ல சொகுசான வெந்நீர் ஓர் பெரும்பாண்டத்திற் றயாரித்து வைக்கப்பட்டிருந்தது. ஸ்நாநஞ்செய்யுமிடத்திற்குச் செல்வராஜனும் சென்று சில செம்புகள் நீரை தன் உடம்பின் மீது பெய்துகொண்டான். இதற்கிடையில் இவன் தன்மேல் பெய்துகொண்ட நீர் அடுத்ததோர் சாக்கடை வழியாய் வெள்ளம்போற் பெருகி யோடாநின்றது. இது கண்ட நம் செல்வராஜனின் ஞாபகத்திற்கு ஒரு சிறு துண்டு சுலோகம் எட்டியது. தான் தன்மேல் நீர் பெய்து ஸ்நாநஞ் செய்வதை நிறுத்தி சிறிதுநேரம் ஆலோசனைக்கடலிலாழ்ந்தான். பிறகு தேர்ந்தான். உடனே பெரும்பாத்திரத்துள்ள நீரைச் சாக்கடையிற் கவிழ்த்தான். அச்சாக்கடை அப்போது பெரும் பெருக்கெடுத்தது. அப்போது செல்வராஜன் களிப்பெனும் க்ரையிலாக்கடலுளாழ்ந்தவனாய், ஓடோடியுஞ் சென்று, அச்சாக்கடைப்பிரவாகத்தில் தன் தலையைக் கவிழ்த்துக்கொண்டு ஹர! ஹர! மாம்பாஹி! கங்கே ஹரே! இராமஸேது! மாத்தியாந்நிக ஸ்நாநம் கரிஷ்யே மணிகர்ணிகாயை

நம: என்று இத்தகைய வடமொழிச் சொற்களை வாயார மொழிந்து கொண்டே ஸ்நாநஞ் செய்வாராயினர். இவ்வாறு சாக்கடைச்சலத்தில் ஸ்நாநஞ்செய்யும் மாப்பிள்ளையை வேட்டகத்தார் தடுத்தும் பயன்படவில்லை. ஏன் ஐயா! இப்படிச் சாக்கடையில் ஸ்நாநஞ் செய்ய வேண்டுமென்று கேட்டலும், அதற்குத்தரமாக, 'ப்ரவாஹோதகம் சிரேஷ்டம்' (பெருக்கெடுத்துக் கரை புரண்டோடிவருகிற நீர் ஸ்நாநாதிகளுக்கு மிகுந்த யோக்கியமானது; பாபங்களை நாசஞ்செய்யத்தகுவது என்பதே இதன்பொருள்) ஆகவே நீங்கள் நீதி நூலினை நன்கறியவில்லை. அதனால்தான் அச்சலத்தின் மகிமையினை நீவிர் அறியக்கூடவில்லை. புண்ணியமுள்ள சலத்தினைப் பழிக்காதீர்! நரகத்திற்காளாவீர்! என்று தான் கற்ற அரைப் படிப்பை தன் வேட்டகத்தார் அறியக் காட்டின மாப்பிள்ளைக்குப் பலவிதத்திலும் சமாதானஞ் சொல்லியும், தான் கொண்ட பிடியை செல்வராஜன் விடுகின்றானிலன். உடனே செல்வராஜன் தலை துவட்டி, நித்திய நைமித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு, விருந்துண்டி கொள்ளுமாறு உட்கார்ந்தான். பாதி சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், எதிரில் ஒரு பாத்திரத்தில் மாவரைத்து வைக்கப்பட்டிருப்பது மாப்பிள்ளை செல்வராஜனின் கண்களைக் கவர்ந்தது. உடனே மாப்பிள்ளையவர்கள் அம்மாவை தம்மருகே கொண்டுவருமாறு ஆஞ்ஞாபித்தார். மாவும் கொண்டுவரப்பட்டது. செல்வராஜன் விருந்துண்டிகொள்வதை நீக்கி, அம்மாவை எடுத்துத் தம் வாய்மடுக்கவாரம்பித்தார். வேட்டகத்தார் அம்மாவை உட்கொள்ள வேண்டாமென்று மாப்பிள்ளைக்குச் சொல்லியும், செல்வராஜன் கேட்கின்றானிலன். விருந்துண்டி கொள்வதைவிட்டு அம்மாவை மாப்பிள்ளையே தின்று தீர்த்தார். மார் அடைத்துவிடப்போகிறதே யென்று வேட்டகத்தார், அவருக்குத் தாகசாந்தியாகவேண்டிய நீருங்கொடுத்து, மாவை அருந்துவதன் காரணம் என் என வினவினர்.

'அன்னாத் சததுணம் பிஷ்டம்' (அன்னத்தைக்காட்டிலும் மாவு 100 மடங்கு அதிக சிரேஷ்டமானதும், குணத்தைக்கொடுக்கக் கூடியதுமாம் என்பது இதன்பொருள்.) அன்னம் உண்பதைக் காட்டிலும் மாவு சாப்பிடுவது தேகத்திற்குக் குணத்தையும், வலிமையையும் கொடுக்கக்கூடியதாதல்பற்றி மாவை நான் உண்ணப்புக்

கேன். ஆகவே மாவு சிரேஷ்டமானதென்பதை நீவிர் இன்று முதல் அறிவீராக! என்று செல்வராஜன் வேட்டகத்தினருக்குப் புத்தி புகட்ட அவர்கள் ஒருபக்கம் ஆச்சரியம் மேலிட்டவராயும் தம்மாப்பிள்ளையின் குணம் "பிள்ளையார்பிடிக்ககுரங்காய்முடிந்த" தைபோல வித்துவானக மாற நினைத்ததுபோக அரைக்குடமாக மாறிப் பைத்தியமாக மாறியதே யென்று ஒரு பக்கத்தில் விசனமும் வெட்கமுமுற்றிருந்தார்கள். செல்வராஜன் இங்ஙனம் செய்தனவெல்லாம், தம் கல்வித்திறமையினை வேட்டகத்தினர்க்குத் தெள்ளிதில் தெரிவிக்க எண்ணியேபோலும். பின்னர் பகற்காலமும் கழிந்து, இராக்காலமும் சமீபித்தது. செல்வராஜன் இரவுண்டி கொண்டு, தன் மனைவியின் பள்ளியறைபுக்கனன். பாரியையாகிய சுந்தரியும், சர்வாபரணாலங்கார பூஷிதையாய், சுந்தரியைப்போல் சுந்தரமாய்ப் படுத்துறங்குவதைச் செல்வன் கண்ணுற்றான். அவள்மீது ஆசை மிகுதியுமுடையவனாயினும், தான் கற்ற நீதிநூல்களிலுள்ள சுலோகங்கள் பலவற்றைச் சிந்தித்தான்; கெட்டகாலத்திற்கிலட்சணமாய் ஒரு சுலோகத்தினடி ஞாபகத்திற்கு வந்து அவ்வடிக்கு நேரான பொருள் கொள்வதை விட்டுக் குதர்க்கமான கோணலான பொருளைமாத்திரம் கொண்டு, தன் கையில் வைத்திருந்த பேனாக்கத்தி கொண்டு தன் இல்லாளின் சுந்தரரூபத்தைக் கெடுக்குமாறு அவளது ஸ்தனம், மெய், வாய், கண், மூக்கு, செவி முதலியவற்றைப் பின்னப்படுத்திக் காயப்படுத்தவும் புக்கனன். அச்சுந்தரி இக்கொலையானகாரியத்தைச் சகிக்கலாற்றாது கூ! கூ! வென்று கதறி யோலமிட்டழுதாள்! அயலில் கும்பகர்ணப்படலம் படித்துக்கொண்டிருந்த பலரும் இக்கூச்சலைக்கேட்டு நித்திரை தெளிந்தவராய், கள்வனோ என்னவோ வென்று திகில்பட்டவராய்த் தடியும் தாம்புமுலக்கையுமாய் செல்வராஜனும் சுந்தரியுமிருக்குமிடத்திற்கு ஓடிவந்து, மாப்பிள்ளையை விசாரித்தலும்,

பாரியா நுபவதீ சத்ரு (இச்சுலோகத்தினை நோக்க விருபொருள் தரும். (1) மனைவியாவாள் அழகுள்ளவளாயிருந்தாலும் விரோதியே. (2) அழகில்லாத மனைவியும் கணவனுக்கு விரோதியே.) என்பதை நீவிர் அறியீரோ? பாரியா ரூபவதியாயிருந்தால் சத்துருவுக்குச் சமானமென்பது நீதிநூல். அதனால்தான் என்னுடைய பாரியையின் அங்கங்களிற் பின்னமுண்டாக்கினேன் எனலும்

அவர்கள் மாப்பிள்ளையை அப்பொழுதே தடிகொண்டு புடைத்தனு ப்பி ஓட்ட ஆரம்பித்தனர். செல்வராஜனும் அடிபொறுக்கலாற்றாது வீரநாராயணபுரம் நோக்கி ஓடத் தலைப்பட்டனன். ஐயோ! இவ் வறிவிலிக்கு ஏன்தான் கற்ற நீதிநூலினைச் சரியானவழியில் உப யோகிக்கப் புத்திவரவில்லையோ?

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றனமென்று களியற்க" .. .."

என்பதைக் கடைப்பிடித்தொழுகாது, அரைப்படிப்பைப் படித்து நேரிய நெறியில் நடக்காததனாலல்லவோ இத்துணைக் கஷ்டமடைய நேர்ந்தது. வீரநாராயணபுரம் நோக்கி யோடிய செல்வன் மதியூகி யாகிய தன் நண்பனைக்கண்டு நடந்தவற்றைச் சொல்லலும், அவன் ஒருபக்கம் சிரிப்புடனும், மற்றொருபால் வெட்கத்துடனும், நேர்ந்த வை தன்னால் தான் என்று துக்கித்து அவனுக்குப் பலவிதமாய் நற்போதனைகள் செய்து அவனை நல்வழிக்குக் கொணர முயன்றான். நிறைகுடம் நீர் தளும்பாது என்பதும், மேற்கூறியவாறு அநேக நூல்களை ஐயந்திரிபற ஓதியுணராது அரைப்படிப்பைப்பற்றி அரைக் குட நீர்போல் இருப்பவன் மௌனம் ஸாவார்த்த ஸாதகம் என்ப தைக் கடைப்பிடித்து நடக்காதவன் அல்லலுறுவது நிச்சயம் என்ப தும், நிறைகுடம்போல் கற்றுணர்ந்தமேதாவிகள் என்றும்புகழையே யடைவார்கள் என்பதும் இதனால் தெள்ளிதில் விளங்குகின்றதே யன்றோ? ஆகவே நீர்நிறைந்த குடத்திலுள்ள நீர்தளும்பிக்கீழ்விழாத வாறுபோல் மிக்ககற்றுணர்ந்த பூர்ணபாண்டித்தியமுடையார் எப் போதும் அதிகப்பிரசங்கத்தனத்திற் பிரவேசித்து அல்லலுறார்என்பது பெறப்படுகின்றது.

'துணிந்தகேள்வியும் கல்வியும் சூழ்ச்சியுமுடையார்
பணிந்திருப்பர்".

வீ. சுப்பிரமணியஐயர்.